

உமா பாலகுமாரின்
தேவதை
வாழும் வீடு!
JUN 12 2010

# தேவதை
# வாழும் வீடு!



## 1



வானம், இரவுப் பெண்ணின் வருகைக்காக சிவப்புக் கம்பளம் விரித்துக் காத்திருக்க, மலர்கள் மௌனமாய் தலையசைத்து, வெளிச்சக் கதிர்களுக்கு விடை கொடுத்துக் கொண்டிருந்தன.

மனிதர்களைப் போல் பறவைகளும் தங்கள் கூட்டைத் தேடி ஆவலுடன் சென்று கொண்டிருந்த மாலைப் பொழுது!

மலையரசன் வருவதற்கு முன்பாக, தன்னை வாசனை திரவியங்களால் அலங்கரித்துக் கொண்டதைப் போல், பூமியரசியிடமிருந்து புதிதாய் ஒருவித மண்வாசனை!

JUN 12 2010

அந்த கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியின் எக்ஸிகியூடிவ் கேபினில் அமர்ந்து, நாளை அனுப்ப வேண்டிய கொட்டேஷன்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த பவித்ராவை இண்டர்காம் செல்லமாக அழைத்தது.

எடுத்துப் பேசியவள், ''சரி சார்.. உடனே வரேன்!'' என்றபடி எழுந்தாள்.

பிறகு, கம்ப்யூட்டரை உயிரிழக்கச் செய்துவிட்டு வெளியே வந்தபோது, அவளுடைய செக்ரெட்டரி புன்னகையுடன் எதிர்ப்பட்டாள்.

''சீதா! பாஸ் என்னோட முக்கியமா ஏதோ பேசணுமாம். அதனால நீ சீக்கிரமா போகணும்னா கிளம்பலாம்..''

கூறிவிட்டு லிஃப்டிற்குள் நுழைந்து மூன்றாவது தளத்திற்கான பட்டனை அழுத்தினாள்.

எம்.டி-யின் அறைக் கதவை மெலிதாகத் தட்டிவிட்டு, அவள் உள்ளே நுழைந்தபோது, ஃபைலில் ஆழ்ந்திருந்தார் ரத்தினம்.

புன்னகையுடன் நிமிர்ந்தவர், அவளை அமரும்படி கூறிவிட்டு ஒரு கவரை அவளிடம் கொடுத்தார்.

''பவித்ரா.. இது நம்ம கம்பெனிக்கு புதுசா வந்திருக்கற ஒரு ப்ராஜெக்ட்! இதை நீங்க செஞ்சா நல்லாருக்கும்னு நான் நினைக்கறேன்.

''அந்தப் பார்ட்டியும், நம்ம கம்பெனியிலிருந்து ஒரு பெஸ்ட் ஆர்க்கிடெக்ட் வேணும்னு கேட்டதால, எனக்கு உங்களைத்தான் அனுப்பணும்னு தோணுச்சு!'' என்றார்.

''அது என்ன ப்ராஜெக்ட் சார்?''

''ம்... அது, ஒரு பழைய காலத்து ஜமீன் பங்களா! அதை ...சிசெஞ்சு ஒரு ரிசார்ட்டா மாத்தணும்கிறது. இப்ப அதை



வாங்கி இருக்கிறவங்களோட விருப்பம். சிவில் வொர்க், இன்டீரியர், ரிப்பேர் வொர்க், லேண்ட்ஸ்கேப்பிங் எல்லாமே செய்யணும்.

''உங்களுக்கு கிரியேட்டிவிடி அதிகம்னு தெரிஞ்சதாலே, இந்தப் பொறுப்பை உங்ககிட்டே ஒப்படைக்கலாம்னு முடிவெடுத்தேன்..''

ரத்தினம் முடிப்பதற்குள், ''அந்த பங்களா எங்கே இருக்கு சார்? இங்கே சென்னையிலதானே..?''

புதிதாய் பூத்த ஆர்வத்துடன் வினவினாள் பவித்ரா.

''இங்கே இல்லைம்மா... பொள்ளாச்சிக்குப் பக்கத்துல ஒரு ஊர்ல இருக்கு. அங்கேயே தங்கியிருந்துதான் இந்த வேலையை செய்யணும்.

''பொள்ளாச்சியில இருக்கிற நம்ம இன்னொரு யூனிட் ஆளுங்களைப் பயன்படுத்திக்கலாம். மத்த விபரங்கள் எல்லாம் இந்தக் கவரிலேயே இருக்கு...''

சட்டென்று அவள் விழிகளில், ஒரு வானவில்லின் உதயம்! அதை கவனிக்காமலே தொடர்ந்தார் ரத்தினம்...

''நாம, நேரா ஒரு தடவை போய் பார்த்துட்டு வந்துட்டா, எல்லாம் முடிவு பண்ணி, கொட்டேஷனும் கொடுத்திடலாம்.

''இந்த ப்ராஜெக்ட் முடியற வரைக்கும், எல்லாருமே அங்கே நம்ம கெஸ்ட் ஹவுஸ்லயே தங்கிக்கலாம். டிரைவர் வசதியோட ரெண்டு கார்களுக்கும் ஏற்பாடு செஞ்சிடறேன்...''

பேசிக்கொண்டே [illegible]த்தைக் கண்டதும் நிறுத்தினார்.

அவர் கூறியது. அவள் செவிகளில் பதிந்ததோ இல்லையோ.. விழிகள் மட்டும் ஒரு ஆச்சர்ய மின்னலோடு தூரப்பார்வை பார்த்தன.

முகத்திலோ புதிதாய் ஒரு பிரகாசம்!

''என்ன பவித்ரா அமைதியாயிட்டீங்க?''

வேகமாக நிமிர்ந்தவள், ''ஸாரி சார்... ஏதோ பழைய ஞாபகங்கள்!''

சிறு முறுவலுடன் கூறிவிட்டு, அவர் அளித்த கவரிலிருந்து அந்த பங்களாவைப் பற்றிய விபரங்களை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

மறுகணமே விழிகள் பளபளக்க நிமிர்ந்தவள், ''தேங்க்காட்! இது என்னோட ட்ரீம் ப்ராஜெக்ட் சார்!'' உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினாள்.

''என்ன சொல்றீங்க பவித்ரா? எனக்கு ஒண்ணுமே புரியலை...''

''இது எங்களோட பூர்வீக பங்களா சார்! நான் சின்னப் பொண்ணா இருந்தப்ப, எங்க குடும்பத்துக்குத் தான் உரிமையா இருந்தது. அப்புறம், நிறைய பிரச்சனைகள். கடன்..எல்லாமா சேர்ந்து இதை வித்துட்டாங்க. சின்ன வயசுலருந்தே, எனக்கு எங்க பங்களா மேல தனி ஈடுபாடு உண்டு.

''அதுவும் பி.ஆர்க் படிக்கிறப்ப, அந்த பங்களாவை இது போல ஒரு ரிசார்ட்டா மாத்தினா, நல்லா இருக்குமேன்னு, நானே நிறைய தடவை யோசிச்சிருக்கேன்! ரொம்ப சந்தோஷமா இருக்கு. நான்தான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும் சார்...'' பரவசத்துடன் மொழிந்தாள்.



''ஓ.. கங்கிராட்ஸ்! எப்பவுமே நாம விரும்பி செய்யற வேலை, இன்னும் அற்புதமா வரும். அடுத்த வாரமே நாம கிளம்பணும். இந்த வேலை முடியறவரைக்கும், நீங்க அங்கேதான் தங்கற மாதிரி இருக்கும். அதையும் வீட்டுல சொல்லிடுங்க..'' உற்சாகத்துடன் கைகுலுக்கினார்.

''தேங்க்யூ சார்.. நிச்சயமா நான் இதை நல்லா செஞ்சு முடிப்பேன்...''

பெரும் நம்பிக்கையுடன் கூறிவிட்டு எழுந்தபோது, அவள் மனதில் லட்சம் மின்னல்கள் ஒன்றாய்த் தெரிந்தன.

சிறகு விரித்துப் பறந்த நெஞ்சிற்குள், இந்த நொடியே அங்கு சென்றுவிட மாட்டோமா என்றிருந்தது.

தன் அறைக்கு வந்து அமர்ந்த பவித்ராவுக்குள், இளமைக்கால ஞாபகங்கள் சிறு தூறலாய் விழுந்தன.

எத்தனை ராஜகம்பீரமான மாளிகை அது!

பாட்டியுடன் கைகோர்த்துக் கொண்டு, அதைச் சுற்றி சுற்றி வந்தது, இன்று நடந்ததைப்போல் கண்முன்னே விரிந்தது.

தூரத்திலிருந்து பார்க்கும் போது, இரவு நேர நட்சத்திரங்களாய் ஒளி வீசிய வண்ண லஸ்தர் விளக்குகளுடன், ஒரு பெரிய கப்பலைப் போல் அந்த மாளிகை காட்சியளித்ததும், நினைவில் கனவுகளாய்!

வாசலிலிருக்கும் அலங்காரமான பெரிய தேக்கு மரக்கதவை திறந்து நுழைந்தால், பெரியதாய் பரந்து விரிந்து தெரியும் ஹாலும், அதன் நடுவில் உயர்ந்து செல்லும் படிகள் இரண்டாகப் பிரிந்து மாடிக்குச் செல்லும் அழகும், மாடியில் சுற்றிலும் மரக் கைப்பிடிகள் வைத்த பால்கனியும் அதில் வரிசை[illegible]ளும்.. ஞாபக அடுக்குகளில் வலம் வந்தன.

JUN 12 2010

முன்னறையில் மாட்டப்பட்டிருக்கும் கொள்ளுத் தாத்தாவின் ஓவியம்.. அவர் ரெட்டைக் குதிரை ஃபீட்டனில் கம்பீரமாய் வேட்டைக்குச் செல்லும் அழகையும், சிலம்பம் சுற்றுவதில் அவருக்கிருந்த திறமையையும் பற்றி கவிதையாய் வர்ணித்த பாட்டியின் சொற்களும், கூடவே நினைவில் ஆடின.

ஒரு வீட்டிற்குக் கூடவா இத்தனை உயிர்ப்பும் சக்தியும்?

தன் பால்ய விடுமுறை நாட்களை இனிதாய் செதுக்கி, சிறு சிறு சந்தோஷங்களை நட்புடன் பகிர்ந்துகொண்ட அந்த வீட்டிற்குள் ஓடி ஓடி கால் வலித்து அமரும்போது, அவள் கால்களைப் பிடித்து இதமாக நீவிவிடும் பாட்டியின் அன்பு... இன்றும் மயிலிறகின் தீண்டலாய்!

அவள் கனவைக் கலைப்பதுபோல் திடீரென்று ஒலித்த டெலிபோன் அழைப்பு, ஒரு பெருமூச்சுடன் அவளை நிகழ்காலத்துக்கு அழைத்துவந்தது.

ரிசீவரை எடுத்தவுடனே, அவளுடைய அம்மா வண்டார் குழலியின் குரல் கேட்டது.

"பவி... ஏம்மா இன்னும் வீட்டுக்கு வரலை? வேலை ரொம்ப அதிகமா? உனக்குப் பிடிக்குமேன்னு பால் பணியாரம் செஞ்சு வச்சிட்டு நான் காத்திட்டிருக்கேன்.." என்றார்.

"இதோ வரேம்மா... கிளம்பிட்டேன்! பாஸ்கூட ஒரு புது ப்ராஜெக்ட் விஷயமா பேசிட்டு இருந்ததிலே கொஞ்சம் லேட்டாயிடுச்சி..." கூறிவிட்டு உடனே கிளம்பினாள் பவித்ரா.



வானம் நன்றாக இருட்டி, தேவப்பிரசாதமாய் மழைத் துளிகளைத் தூவ ஆரம்பித்தது.

மெல்லிய சாரலாய் பரவிய மழையில் நனைய வேண்டும் போல் இருந்தது!

கல்லூரி நாட்களில்.. குடை கையிலிருந்தாலும் விரித்து கறுப்புக் கொடி காட்ட மனமின்றி, ஈரப்பட்டு வரும் ஜாதிமுல்லையாய் பஸ் ஸ்டாப்பிலிருந்து வீட்டிற்கு நடந்த தருணங்கள்.. ஞாபகத் துளிகளாய்!

மாருதியை வீட்டு வாசலில் நிறுத்தியபோது, அம்மா அவளுக்காக வெளியே காத்திருப்பது தெரிந்தது.

உள்ளத்தில் ஊஞ்சல் கட்டி ஆடிய புன்னகை, உதடுகளில் கசிய.. அவரை அணைத்தபடி உள்ளே சென்ற போது, இந்த ப்ராஜெக்ட் விஷயத்தைப் பற்றி எப்படிப் பேசுவதென்ற கேள்வி உள்ளூர எழுந்தது.

தந்தை கதிர்வேலுவுக்கு மட்டுமல்ல, தாய் வண்டார் குழலிக்கும் பிறந்த வளர்ந்த ஊர் அதுதான்!

தாய்மாமன் என்கிற நெருங்கிய பந்தத்தில் மணம் முடித்தவர் குழலி!

ஆனாலும், தனக்கு நினைவு தெரிந்து இருவருமே அங்கு சென்றதில்லை என்பதும், பாட்டியுடன் தான் மட்டுமே விசேஷங்களுக்குப் போய் வந்ததும் ஞாபகம் வந்தன.

ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு, பாட்டி இறந்ததும் அந்த ஊருக்கும் அவர்களுக்குமிடையே இருந்த தொடர்பு முற்றிலுமே அழிந்துபோனது போல் ஒரு உணர்வு!

இரு வருடங்களுக்கு முன்பு அப்பாவும் இறந்துவிட, அவளுடைய பெரியப்பா [illegible] மட்டும், மனைவியுடன் அந்த ஊரிலேயே[illegible]

அவருக்கு குழந்தைகள் இல்லை, வயதும் ஆகிவிட்ட நிலையில், நிலங்களை எல்லாம் குத்தகைக்கு விட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தன்னைப் போலவே, பவியும் ஒற்றைப் பெண் வாரிசாய் நின்று போனதை பாட்டி செங்கமல நாச்சியார் கூறும்போது, சிறு வயதில் அவளுக்கு ஒன்றுமே புரிந்ததில்லை.

இன்று பவியின் மனதில் பல எண்ணப்பூக்கள் மலர, குளித்துவிட்டு வந்து டிபன் சாப்பிடும்போதே, இந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பதென்று மனம் ஒத்திகை நடத்தியது.

ஆனால், அவளுடைய முகத்தை வைத்தே, மனதைப் படித்துவிட்டார் குழலி.

“என்ன பவி.. பலத்த யோசனை போலிருக்கு. ஆ·பீஸ்ல எதும் பிரச்சனையாடா?” கவலையுடன் கேட்டார்.

“அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா! ஒரு புது ப்ராஜெக்ட் வந்திருக்கு! அதை நான்தான் செய்யணும்னு பாஸ் பிரியப்படறாரு! இன்னிக்கு அதைப் பத்தித்தான் பேசிட்டிருந்தோம்.. அதான் லேட்!”

“அதனால என்ன பவி.. எதுக்கு யோசிக்கிறே? செய்ய வேண்டியதுதானே?”

“அதுக்கில்லைம்மா! இந்தப் புது வேலை வெளியூர்ல டக்கறதாலே, மாசத்துல முக்கால்வாசி நாள், நான் அங் கயே இருக்க வேண்டியிருக்கும். ஒரு வீக் எண்ட் ணா இங்கே வரலாம்!



“எங்க கம்பெனி கெஸ்ட் ஹவுஸ் அங்கே இருக்கு. சீதாவும் என்கூட வந்துடுவா! கம்பெனி ஆட்களும் இருப்பாங்க. ஒண்ணும் பயமில்லை!” என்றாள் மெதுவாக!

“அப்புறம் என்ன பவி? போக வேண்டியதுதானே! என்னைப் பத்திக் கவலைப்படாதே! நான், நம்ம வீரம்மாப் பாட்டியை துணைக்கு வச்சிப்பேன். நீ போயிட்டு வா... வேலைதான் முக்கியம்!”

“அப்போ நான் வெளியூர்ல போய் வேலை செய்யறதிலே, உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே?”

“இல்லைடா! ஆமா, அந்த வேலை எங்கேன்னு சொன்னே?” என்றார் கேள்வியாக.

ஒரு நிமிடம் தயங்கியவள், “நம்ம ஊர்லதாம்மா! நம்மோட அந்த பூர்வீக பங்களாவைத்தான் யாரோ வாங்கியிருக்காங்க. அதை ரிசார்ட்டா மாத்தணும்னு, எங்க கம்பெனிகிட்டே அந்த அசைன்மெண்ட்டைக் குடுத்திருக்காங்க..” மெதுவாக நிறுத்தினாள்.

அவள் பேசப் பேச கேட்டுக் கொண்டிருந்த குழலியின் முகம் இருண்டுபோய், அதில் ஏதோ ஒரு மாற்றம் வந்தது.

உடனே சமாளித்தவர், “வேணாம் பவி.. நீ அங்கே போக வேண்டாம். எனக்குப் பிடிக்கலை.”

படபடத்தவரின் விழிகளில் மெல்லிய நீர்ப்படலம்!

“ப்ச்... அம்மா.. என்ன இது? இப்பதான் போயிட்டு வான்னு வீரத்தாய் மாதிரி சொன்னீங்க. உடனே பயப்படறீங்க!

JUN 12 2010

"நம்ம ஊருன்னா, அங்கே நமக்குத் தெரிஞ்ச மனுஷங்க இருப்பாங்க. பாக்கப் போனா, நீங்க இன்னும் தைரியமா என்னை அனுப்பணும்..."

அவள் குரலில், யோசனையும், சிறு கேலியும்!

"அதெல்லாம் வேண்டாம்! அந்த ஊரும், உறவுகளும் தேவையில்லைன்னு தானே, நாங்களே இங்கே வந்துட்டோம். உங்கப்பாவுக்கும் எனக்கும் கல்யாணம் முடிஞ்ச கோயம்புத்தூருக்குப் போனப்புறம், நாங்க அந்த மண்ணை மிதிக்கவேயில்லை!

"ஏதோ பாட்டி ஆசைப்பட்டதால உன்னை மட்டும் அனுப்பி வச்சோம்! அங்கும் இங்குமா இருந்த பாட்டியும், நம்ம வீட்டிலயே இறந்துட்டதால ஊருக்குப் போனதே இல்லை! அந்த அவசியமும் வரலை. புரிஞ்சிக்கடா!"

"அம்மா... நான் என்ன சின்னக் குழந்தையா? அப்படி அங்கே போனா என்ன நடந்துடும்..? ஏன் இவ்வளவு தடை போடறீங்க... வேணும்னா, நீங்களும் என்கூட வாங்க..."

அவள் கூறியவுடன், தீக்குள் விரலை வைத்தாற்போல் துடித்துப் போனார் அவர்.

ஒருவித பதட்டத்துடன், "நான் எங்கேயும் வரமாட்டேன். நீயும் போக வேண்டாம்" என்றார் உறுதியான குரலில்!

பவியின் மனம், சட்டென்று சோகமெனும் மூடுபனியால் சூழப்பட்டது.

மறுகணமே, எக்காரணம் கொண்டும் இந்த வேலையை யாருக்கும் விட்டுத்தரக் கூடாதென்ற உறுதியும் மனதின் அடி ஆழம் வரை வேர் விட்டது.



ஆனால், சொந்த ஊருக்குச் செல்வதால், தன் வாழ்க்கையில் பெரும் திருப்பங்கள் ஏற்படப் போவதை, அவள் அப்போது அறியவில்லை!

காலம், தன் கைகளுக்குள் புதிராய் பல மாற்றங்களை ஒளித்து வைத்தபடி காத்திருந்தது!



## 2



அன்று, இரவின் துணையுடன் தனிமையை நாடி தோட்டத்தில் அமர்ந்திருந்தாள் பவித்ரா.

மனதிற்குள் புதிர்களாய் பல வினாக்கள்!

ஏன்... தங்கள் சொந்த ஊருக்கு செல்வதற்கு, அம்மா இவ்வளவு எதிர்ப்பு தெரிவிக்கிறார் என்ற கேள்வி விஸ்வரூபமாய் எழுந்து விடையின்றி மடிந்தது.

எப்படியாவது அவரை சமாதானப்படுத்தி, இந்த ப்ராஜெக்டை எடுத்து வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டுமென்று உறுதியாய் எண்ணியபோது, மரமல்லியின் வாசமும், புதிதாய் பூத்த மருதாணிப் பூக்களின் மணமும், சுகமாய் நாசிக்குள் நுழைந்து மனதை இதமாக்கின.

சிலிர்ப்புடன் நிமிர்ந்தபோது, மழை பெய்து தெளிந்திருந்த வானத்தில், நிலவுப் பெண் கம்பீரமாக பவனி வந்து கொண்டிருந்தாள்.

மனம் லேசாகிவிட உள்ளே சென்றபோது, வெகுநேரம் உறக்கம் வர மறுத்து, எண்ணங்கள் சிலந்தி வலையாய்ப் பின்னலிட்டன.

அந்த ப்ராஜெக்டை பற்றிய விபரங்களைப் படித்த போது, உள்ளே சுகமான ஒரு புத்துணர்ச்சி பரவியது.

'இது என் பூர்வீக வீடு! என் முன்னோர்களின் பாதச் சுவடுகள் பதிந்திருக்கும் பூமி' என்ற பெருமை கலந்த ஆளுமை உணர்வுடன் உறங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் காலையில் எழும்போதே, நேற்றைய நினைவுகள் தொடர்கதையாகின.

அம்மாவை எப்படியாவது சரிகட்டிவிட வேண்டுமென்ற வைராக்கியம், மற்றதை மறக்கடித்தது.

சமையலறையிலிருந்து வந்த சாம்பாரின் மணம் நாசியை நிறைக்க, குளித்து தயாராகி கிச்சனுக்கு சென்றவள், அம்மாவைப் பின்புறமிருந்து அணைத்துக் கொண்டாள்.

''என்ன... காலையிலே ரொம்பதான் கொஞ்சல்? நீ என்னதான் கேட்டாலும், இந்த விஷயத்துல மட்டும் 'முடியாது'ங்கிறதுதான் என்னோட பதில்!'' என்ற குழலியின் குரலில் புதிதாய் ஒரு தீவிரம்!

''அம்மா.. ப்ளீஸ்.. ஒரு நிமிஷம் என்கூட வாங்க...'' அவர் தோளைப் பிடித்து அழைத்துச் சென்று சோபாவில் அமர வைத்தாள் பவி.

எதிரில் அமர்ந்து, ''சரி! நீங்க சொல்றதுக்கு நான் சரின்னு சொல்றேன்னே வச்சுக்கலாம். ஆனா, நான் அங்கே போகக்கூடாதுங்கிறதுக்கு, நியாயமான காரணம் ஒண்ணாவது இருக்கணுமில்லையா? அப்படி இருந்தா சொல்லுங்க... நான் போகலை!''

அழுத்தமாக கேட்டபோது, குழலியிடம் எந்த பதிலும் இல்லை.



மௌனமாக தலைகுனிந்து அமர்ந்திருந்தவரின் முகத்தை மெல்ல நிமிர்த்தினால், அவர் விழிகள் நீரில் மிதந்தன.

பதறிப்போனாள் பவித்ரா.

''எம்மா இப்ப அழறீங்க? ஒரு ஊரில் நல்லா வாழ்ந்து அப்புறமா நொடிச்சிப்போய் அங்கே இருக்கிற சொத்தை எல்லாம் வித்துட்டு வந்தப்புறம், திரும்பவும் அங்கே போறதுன்னா கஷ்டமாத்தான் இருக்கும். எனக்கு புரியுதும்மா!

''ஆனா.. நான்தானே போகப்போறேன்... அதுவும் இத்தனை வருஷம் கழிச்சி.. இது என்னோட ட்ரீம் ப்ராஜெக்டும்மா! நான் படிக்கும்போதே ரொம்ப ஆசைப்பட்ட ஒரு கனவும்மா இது! அது நனவாகற நேரம் வந்திருக்கு. தயவு செஞ்சு அதை கலைச்சிடாதீங்க.

''இதுவரைக்கும் எனக்குன்னு நான் எதுவும் உங்ககிட்டே கேட்டதில்லை.. கேக்கிறபடி நீங்க விட்டதும் இல்லை. முதல்முறையா ஒரு கோரிக்கையோடு உங்க முன்னாடி நிக்கிறேன்'' கெஞ்சலுடன் முடித்தாள்.

வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த குழலி, மெதுவாக கண்களைத் துடைத்தபடி நிமிர்ந்தார்.

''சரி.. ஆனா, சில கண்டிஷன்ஸ் இருக்கு! அதுக்கு நீ சம்மதிச்சா போகலாம..'' மெதுவாகக் கூறிவிட்டு அவளுடைய தலையைப் பரிவுடன் கோதிவிட்டார்.

''ம்.. சரி! என்ன கண்டிஷன்ஸ்.. சொல்லுங்க கேப்போம்!'' நிம்மதியும் உற்சாகமுமாகச் சிரித்தாள் பவி.

''இந்த வேலை முடி[illegible]னே, சாக்கு எதுவும் சொல்லாம நீ கல்யாணத்துக்[illegible]

அவர் முடித்த ஒரு நொடியில் பவியின் முகம் தொட் டாச்சிணுங்கியாய்!

மனதிற்குள் சிறை வைக்கப்பட்டிருந்த ஒரு நிழ லுருவம், கேள்வியும், ஏளனமுமாய் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி, 'என்ன.. கல்யாணமா..?' என்றது.

இதயத்தை யாரோ இறுக்கிப் பிழிவதைப் போல் வலிக்க ஆரம்பித்தது. திடீரென்று குழலியின் குரல், அவளை நிகழ்காலத்திற்கு இழுத்துவருவதாய்!

''அடுத்த கண்டிஷன்.. அந்த ஊரிலே நீ யார் வீட் டுக்கும் போகக்கூடாது. வீண் பேச்சுக்கு இடம் கொடுத்த மாதிரி ஆகிடும். ஆமாம்!''

ஒரு வெற்றுப் பார்வையுடன் நிமிர்ந்த பவித்ரா, ''ம்..'' என தலையசைத்தாள்.

பிறகு ஒரு பெருமூச்சுடன், ''தேங்க்யூம்மா.. என்னோட விருப்பத்துக்காக, உங்க பிடிவாதத்தை விட்டுக்கொடுத்த துக்கு!''

மெதுவாக அவருக்கு முத்தம் கொடுத்துவிட்டு, கன வில் நடப்பவள்போல் கிளம்பி கம்பெனிக்குச் சென்றாள்.

அலுவலகத்தில் அவளுக்காக காத்திருந்த ரத்தினம், அந்த வாரக் கடைசியிலேயே பொள்ளாச்சிக்கு கிளம்ப வேண்டுமென்று கூறினார்.

முதலில் இருவரும் சென்று அந்த இடத்தை பார்வை யிட்டுவிட்டு வந்து, அதற்கான கொட்டேஷன்களை தயார் செய்து கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தனர்.

அவளுக்கு, அந்த வாரம் முழுவதும் ஒருவித பரபரப்பு தொற்றிக் கொண்டது.



அம்மாவை விட்டு பிரிந்திருக்க வேண்டும் என நினைத்தாலோ, புதிதாக ஒரு கவலை வந்து நெஞ்சுக்குள் முகாமிட்டது!

உள்ளே.. கிளறிவிட்ட தீயாய் பழைய நினைவுகள் வேறு இதயத்தைப் புடம் போட்டன.

சுமையாய் அழுந்தி மூச்சு முட்டச் செய்து, உடம்பில் உறைந்து உயிர்வரை வலிக்கச் செய்தன.

வாரக் கடைசியில் தனக்குத் தேவையானவற்றை யெல்லாம் அடுக்கி வைத்தவள், அம்மாவுக்கு வீரம்மாப் பாட்டியையும் துணைக்கு ஏற்பாடு செய்து விட்டுக் கிளம்பினாள்.

விடிகாலையில் பவித்ராவும் ரத்தினமும் பொள்ளாச்சி ரயில் நிலையத்தில் இறங்கினர்.

சென்னைக்கு மாறாக, குளிர்ச்சியாக வீசிய காற்றும், உறக்கத்திலிருந்து எழ மறுத்து சோம்பலாய் விழி மூடி யிருந்த சூரியனும், அதிக இரைச்சலில்லாத சாலைகளும், வித்தியாசமான ஒரு அனுபவமாய் இருந்தது!

பவித்ரா, இங்கு வந்து பத்து வருடங்களாவது இருக்கும். பள்ளியில் படித்து கொண்டிருந்த போது, பாட்டியுடன் வந்தது... பிறகு குழலி அவளை அனுப்ப மறுத்துவிட் டார்!

அந்த மண்ணில் மகிழ்ச்சியுடன் பாதம் பதித்தபோது, மனம் லேசாகியிருந்தது.

கம்பெனி காரில், இருவரும் கெஸ்ட் ஹவுஸிற்கு சென்றனர்.

பிறகு அவள் குளித்து தயாராகி வந்தபோது, பொள் ளாச்சி யூனிட்டில் இருந்து சிலர் வந்திருந்தனர்.

JUN 12 2010

சைட் இன்ஜினீயர் சதீஷையும், மேனேஜர், சூப்பர் வைசர்கள் என்று இருவரையும் ரத்தினம் அறிமுகப்படுத் தினார்.

மதியம் அனைவருமாக அவளுடைய ஊருக்குச் சென்றபோது, பெரிய மாற்றங்கள் எதுமின்றி முன்பு போலவே இருந்தது அந்த இடம்!

காலச் சுழற்சியில் சிக்கி, தன் இயல்பான முகத்தைத் தொலைக்காமல், பச்சைப்பசேலென்ற தென்னந் தோப்புகளும் ஊர்க்காவல் தெய்வத்தின் கோவிலும், வெள்ளந்தியான மனிதர்களும் மாறாமல் அப்படியே இருந்தனர்.

இருபுறமும் மரங்கள் செறிந்த தோப்புக்குள் சென்ற கார், பெரிய மைதானத்தின் நடுவிலிருந்த அந்த பங்களாவின் முன் நின்றது.

அதன் கம்பீரமும் கோட்டை போலிருந்த அழகிய அமைப்பும், அரணாய் தெரிந்த மலைத் தொடர்களும் அவளை மெய்சிலிர்க்க வைத்தது!

விழிகளில் ஒருவித பிரமிப்புடன் காரிலிருந்து இறங்கி னார் ரத்தினம்.

“வாவ்.. எவ்வளவு அழகு! இது உங்களோட கொள்ளுத் தாத்தாவுடையதுனு நினைச்சா எனக்கே இவ்வளவு பெருமையா இருக்கே.. உங்களுக்கு எப்படி இருக்கும்னு இப்ப புரியுது பவித்ரா!”

ஒருவித மலைப்பும், பெருமிதமுமாக கூறினார்.

புகை படிந்த ஓவியம் போலத் தெரிந்த அந்த பங்களாவைப் புதுப்பித்து புதுமையாக்கப் போகின்ற அனுபவத்தை நினைத்தாலே இதயத்திற்குள் இதமாய் ஒரு சிலிர்ப்பு!



அந்த இடத்தின் காவலாளியும் அவன் மனைவியும் அங்கு வேலை செய்பவர்களும் அனைவரையும் வரவேற்றனர்.

புதிதாய் வந்தவர்களுக்கு நடுவே, ரோஜா நிறத்தில் கம்பீரமான உயரத்துடன், பேசும் விழிகளோடு பெண்மைக்கு இலக்கணமாய், ஒரு அழகு தேவதையைப் போல் நின்றிருந்த பவியைக் கண்டதும், அவர்களின் விழிகள் விரிந்தன.

காவலாளி மட்டும் வேகமாக முன்னால் வந்தார்.

“நீங்க செங்கமல நாச்சியார் வம்சம்தானே? குழலியம்மா மக இல்லை? அப்படியே அச்சு அசலா அம்மா மாதிரியே இருக்கீங்க தாயி! ஏம்மா.. நீங்கெல்லாம் இங்கே வர்றதே இல்லை?”

ஆதங்கத்துடன் கேட்டுவிட்டு, பரவசத்தில் நடுங்கும் கைகளுடன் அவளை வணங்கியவர் ரத்தினத்திடம் திரும்பினார்.

“எங்களுக்கு காலம்காலமாய் சோறுபோட்டு வளர்த்த குடும்பமய்யா இவங்களது! ராஜவம்சம் மாதிரி செழிச்சி இருந்தவங்க, திசைக்கு ஒருத்தரா சிதறிப் போயிட்டாங்க!

ஆனாலும் எங்க சின்ன எஜமானியோட பாதம் இந்த இடத்துல பட குடுத்து வச்சிருக்கணும்” என்றார் கண்ணீர் மல்க!

அவர் மனைவி ஓடி வந்து, பவியின் கைகளை வாஞ்சையுடன் பற்றி, “அப்படியே நம்ம பெரிய நாச்சியார் மாதிரியே கம்பீரமா இருக்கீங்க தாயி! திரும்பவும் நம்ப மாளிகையை நீங்களே வா[illegible]?” ஆர்வத் துடன் கேட்டாள்.

சிறு முறுவலுடன், ''இல்லைங்க.. நான்தான் இந்த பங்களாவை ஹோட்டலா மாத்தி அமைக்கிற பொறுப்பை எத்துட்டிருக்கேன். அதுக்காகத்தான், நாங்க எல்லோரும் வந்திருக்கோம்!'' என்றவளுக்குள் ஒரு நீண்ட பெருமூச்சு!

உடனே அந்தக் காவலாளி உற்சாகத்துடன் தன் ஊர்க்காரர்களை அழைத்து அறிமுகப்படுத்தினார்.

அனைவரின் விழிகளிலும் மரியாதை கலந்த பாசச் செறிவு!

மாளிகை வாசலை மிதித்தபோது, இது என் வேர்கள் குடியிருந்த பூமியென்ற பெருமை வர, நெஞ்சம் பழைய நினைவுகளை தூசி தட்டிப் பார்க்க ஆரம்பித்தது.

உடனே மனதை திசைதிருப்பியபடி, விழிகளை எதிரில் தெரிந்த பெரிய கூடத்தில் பதித்தாள் பவித்ரா.

உயர்ந்திருந்த கூரையின் உச்சியிலிருந்து தொங்கிய பழங்காலச் சாண்டிலியர்களும், பல வண்ண லஸ்தர் விளக்குகளும் அவள் கவனத்தை ஈர்த்தன.

பெரிய கடல் போன்ற அந்தக் கூடத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த அறைகளைப் பார்த்துவிட்டு, நடுவே பிரமாண்டமாய் உயர்ந்து இரண்டாகப் பிரிந்த மாடிப்படிகளில் ஏறிச் சென்றனர்.

அங்கு மரக் கைப்பிடிகள் வைத்த வராந்தாவில் வரிசையாகத் தெரிந்த அறைகளைப் பார்வையிட்டு விட்டு இரண்டாவது மாடிக்குச் சென்றால், அங்கு பெரிதாய் இரு அறைகள் மட்டுமே இருந்தன.

மற்ற இடங்கள் திறந்த வெளியாக இருக்க, எல்லா வற்றையும் சுற்றிக் காட்டியபடி கீழே வந்தாள் பவித்ரா.



முன்னறைக்கு வந்தபோது, பழைய கால ஓவியங்களாய் கொள்ளுத்தாத்தா, தாத்தா, பெரியப்பா அப்பா என வரிசையாய் அவளுடைய முன்னோர்களின் அணி வகுப்பு!

கம்பீரமாய் பெரிய மீசை வைத்து, இன்னும் கூர்மையாய் எதிரில் நிற்பவரை உறுத்துப் பார்க்கும் விழிகளுடன், அற்புதமான உயிரோட்டத்துடன் வரையப்பட்டிருந்த கொள்ளுத்தாத்தாவின் சித்திரத்தை செப்பனிட்டு மாட்ட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

புதிதாக இந்த பங்களாவை வாங்கியிருப்பவர், அதை விரும்பவில்லையென்றால், எல்லா புகைப்படங்களை யும் தானே எடுத்துச் சென்றுவிடலாம் என்றும் முடி வெடுத்தாள்.

அந்த வாரம் முழுவதும், அங்கே தங்கியிருந்த ரத்தினம், எல்லா பொறுப்புகளையும் அவளிடமே ஒப்படைத்தார்.

பிறகு, இருவருமாக கலந்து பேசி ப்ளான் போட்டுக் கொடுத்து அப்ரூவல் வாங்கிய பிறகே சென்னைக்கு கிளம்பிச் சென்றார்.

மறுநாளே, தன் பெரியப்பா வீட்டிற்குச் சென்று வந்தாள் அவள்.

வெகுநாட்களுக்குப் பிறகு அவரையும், பெரியம்மாவையும் சந்தித்தபோது, இருவருமே பெரிதும் நெகிழ்ந்து போயினர்!

அன்று பங்களாவைப் பார்வையிடவும், அதில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் பேசுவதற்காக, உரிமையாளர் வருவதா[illegible]னே [illegible]தெரிவிக்க, காலையிலே தயாராகிவிட்டாள் பவித்ரா.

JUN 12 2010

பங்களாவிற்குச் சென்றபோது வாசலிலேயே காத்திருந் தார் மேனேஜர்.

அங்கு புதிதாய் ஒரு ஹோண்டா சிட்டி கார் நின் றிருந்தது.

மேனேஜருடன் பேசிக்கொண்டே மாடியேறி அந்த வராந்தாவில் திரும்பியபோது, நெஞ்சம் உற்சாகமாய்!

அதன் கோடியில், வெளிப்புறம் நின்றிருந்த அந்த உருவம், முன்பே எங்கோ பரிச்சயமானதைப் போன்ற ஒருவித உணர்வைத் தோற்றுவித்தது.

அருகே சென்றபோது, தன் பேன்ட்டின் இரு பாக் கெட்டுகளிலும் கைவிட்டபடி அலட்சியமாக நின்றிருந்த அந்தக் கம்பீரம்... யாரையோ அவளுக்கு நினைவு படுத்துவதாய்!

உடனே தறிகெட்டு ஓடிய நினைவுகளைக் கட்டுப் படுத்தினாள் அவள்.

காலடியோசை கேட்டதும், வேகமாகத் திரும்பிய அந்த மனிதனைக் கண்டபோது, பவியின் காலுக்குக் கீழ் பூமியே புதைவதுபோல்!

அவனிடம் நெருப்பை மிதித்தாற் போல ஒரு பதட்டம் வர, இதயத்திற்குள் மட்டும் குளிரில் நனைந்தாற்போல் ஒரு சில்லென்ற சிலிர்ப்பை ஏற்படுத்தின.

வாடிய மலர்கள் செடியில் இருந்து உதிர்வதைப்போல், ரிந்து வெகு நாட்களாகியும், நினைவுகள் உதிர மறுத்து, ழைய நினைவுகளை 'மறக்க மனம் கூடுதில்லையே' று மனம் பதறி துடித்தது.

அசையாமல் நின்ற இடத்திலேயே வேர்பிடித்து றந்திருந்தவளின் கண்களில் வியப்பா, பயமா என்று ம் கண்டுபிடிக்க முடியாத ஓர் பாவனை!



பெரும் சுழலுக்குள் தான் சிக்கிக் கொண்டதை, உடம்பின் ஒவ்வொரு செல்லும், பவியின் உணர்வு களுக்கு அறிவித்தன.



3



பவித்ராவை மூன்று வருடங்களுக்கு முன்பு உயிராக காதலித்து பிரிந்துசென்ற ப்ரத்யும்னேஷ், அங்கு கூர்மை யாக ஊடுருவும் பார்வையுடன் நின்றிருந்தான்.

அவள் மேல் வெறுப்பு வர்ணம் பூசி அவளுடைய காதலையும், வாழ்க்கையையும் நிறமற்றதாக மாற்றி விட்டு மறைந்து சென்றவன், இன்று எதற்காக வந்திருக் கிறான்?

பெரும் கேள்வி அவளுக்குள்! இதயம் ஈர விறகாய் புகைய ஆரம்பித்தது.

''வெல்கம் மிஸ் பவித்ரா... மிஸ்தான் இல்லே...?''

ஏளனமாக கேட்டவனுடைய முகம், வரவேற்புக்கான அறிகுறியே தெரியாமல் இறுகிப்போயிருக்க, கண்கள் மட்டும் இரையைத் தேடும் விலங்காய் பளபளத்தன.

அவளுக்குள்.. மறைந்துபோன மனதோர கவிதைகள், மீண்டும் ஜனனமெடுப்பது போல்!

உடனே, அவன் மேனேஜரிடம் திரும்பினான்.

''ஓகே வேலு.. இனிமே நான் பாத்துக்கிறேன். நீங்க கிளம்புங்க. நாளைக்கு வந்தாப்போதும்..!''

JUN 12 2010

அழுத்தமாகக் கூறிவிட்டு திரும்பியவனின் பார்வை, அவளை மேல் இருந்து கீழ் வரை சோம்பலாய் வருட, முகம் கூசிச் சிவந்தது அவளுக்கு!

ரோஜாக்களாய் சிவந்த முகத்தை கண்டவன், "ம்... பெண்மைக்கே உண்டான வெட்கம் மட்டும் இன்னும் அப்படியே இருக்கு. மத்த எல்லாத்தையும்தான் காத்துல பறக்க விட்டாச்சு போலிருக்கு.." வார்த்தை அம்புகளால் தைத்தான்.

வேகமாக நிமிர்ந்தவள், "ப்ரத்யு.. எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு... பிஹேவ் யுவர்செல்ஃப்..." எனும்போதே, அவள் கைகள் வேகமாக பற்றித் திருப்பப்பட்டன.

"ஏய்.. சார்னு சொல்லு! இப்ப நமக்குள்ளே இருக்கிற ரிலேஷன்ஷிப்புக்கு அதுதான் சரி! நான் உன்னோட முன்னாள் காதலன்கிற நினைப்பெல்லாம் இங்கே வேண்டாம்."

"சே.." என்றபடி கைகளை உதறியவள், "நான் அதையெல்லாம் மறந்து கிட்டத்தட்ட மூணு வருஷமாகுது! நீங்க ஞாபகப்படுத்தாம இருந்தா சரி!" குத்தலாகவே பதில் கொடுத்தாள்.

"ஹூம்.. பிடிக்காத எதையுமே மனசலருந்து உடனே நீக்கிடறது என்னோட பழக்கம்! அதுவும் தகுதி இல்லாதவங்களைப் பத்தி நான் நினைக்கிறதே இல்லை!" ஏளனமாக வந்தது அவன் குரல்!

சட்டென்று நாணலாய் தொய்ந்தது நெஞ்சம்!

உலகின் மறுகோடிக்கு சென்றாவது, இவன் பார்வையில் படாமல் வாழ வேண்டும் என்று முடிவு செய்திருந்தாள் அவள்.



இப்போது.. இவனிடம் எப்படி வேலை செய்யமுடியும் என்ற ஆயாசமும், தன் லட்சியமே இவனால் தடைபடும் போலிருக்கிறதே என்ற ஆதங்கமும், மனதின் ஆழத்திலிருந்து ஒரு பெருமூச்சாய் எழுந்தன.

வேகமாக கீழே செல்ல திரும்பியவளை, அவனுடைய ஆழ்ந்த குரல் தடுத்தது.

"என்ன ஓடறே.. பயமா? எங்கே, இவன்கூட வேலை செஞ்சா இவனோட அழகுக்கும், கம்பீரத்துக்கும் அடிமையாகி, மறுபடியும் காதலிக்க ஆரம்பிச்சிடுவோமோன்னு.. அதுவும், நிஜமா விரும்பத் தொடங்கிடுவோமோன்னு பயந்து ஓடறியா?"

"இல்லை. நான் ஏன் பயப்படணும்?"

"பொய்! உனக்கு என்கிட்ட வேலை செய்ய பயம்.. தைரியம் இல்லை.. எனக்குத் தெரியும்! உன்னை அறியாமலேயே என்கிட்ட இளகத் தொடங்கி தன்னையே மறந்துவிடுவாயோன்னு தயங்கறே!"

வார்த்தைகள் ஏளனக் குத்தீட்டிகளாய் உள்ளிறங்கின.

தலையை சிலுப்பியபடி திரும்பியவள், "நான் ஒண்ணும் தயங்கலே! இப்ப நான் டீன்-ஏஜ் பொண்ணும் இல்லை... புரியாம மயங்கி நிக்கறதுக்கு! அனுபவங்கள் நிறைய கத்துக் குடுத்திருக்கு...

"இது என் பூர்வீக வீடு! இதை ஒரு ரிசார்ட்டா மாத்தணும்கிறது என்னோட நீண்ட நாள் லட்சியம்! யாருக்காகவும்... ஏன், அதுக்கு தடையா வர்றது நீங்களாவே இருந்தாலும், நான் கவலைப்படப் போறதில்லை! இது என்னோட ட்ரீம் ப்ராஜக்ட்.. நிச்சயமா நான் இதை செஞ்சு முடிப்பேன்.." வீம்பாகக் கூறினாள்.

JUN 12 2010

பேசி முடிக்கும்வரை, பவியையே உற்று நோக்கியவன், சட்டென புன்னகைத்தான்.

அவள் வாயாலேயே, தான் இந்த வேலையை செய்வேன் என கூறவைத்த வெற்றி புன்னகை!

ஆனாலும், மறுகணமே அவன் முகம் மாறியது.

''ஒரு நிமிஷம்.. இப்ப இது உன் தாத்தா வீடு இல்லை. என்னோடது! ஞாபகம் இருக்கட்டும்! அப்புறம்.. ஒரு பிரச்சனை சால்வ் ஆயிடுச்சு! இனிமே, என்ன ஆனாலும் நீ இதை முடிக்காம இங்கிருந்து போகமாட்டே.. ம்..?''

''ஆமாம்!'' எங்கோ பார்த்தபடி அழுத்தமாக மொழிந்தாள் அவள்.

''சரி.. எல்லாத்தையும் எப்படி மாத்தலாம்கிற ஐடியாவை முதல்லே சொல்லு.. பாப்போம்!'' என்றபடி வேகமாக முன்னால் சென்றான் அவன்.

இவன் அழைத்த உடனே பின்னால் ஓட, நான் என்ன இவன் வீட்டுப் பூனைக்குட்டியா என்று மனம் புகைந்த போதும், அவனைப் பின்தொடர்ந்தாள் பவி.

ஆனாலும், அவனுடைய காலடிச் சுவட்டில் தன் பாதங்களைப் பதித்தவுடன், ஏனோ அவன் இதயத்துக்குள்ளேயே அடங்கிய உணர்வு!

சட்டென்று பரவிய விதிர்ப்புடன் தன்னையே அடக்கியவள், அமைதியாகவே பின்தொடர.. இருவரும் கீழே வந்தனர்.

''சார்.. இந்தப் பக்கம் ரிசப்ஷன் கௌண்ட்டர். லவுஞ்சிலே லிஃப்ட் இருந்தா நல்லா இருக்கும்.. ரிசப்ஷனை ...டி ஆபீஸ் ரூம், மேனேஜர் ரூம்னு எல்லாம் இருக்கிற ...திரி செஞ்சிடலாம்!



...ஸ்டோர் ரூம், ...

''பின்பக்கத்துல கிச்சன், ஸ்டோர் ரூம், ... நடுவுல இருக்கிற பெரிய ஹாலை, ரெஸ்ட்டாரெண்ட்டா மாத்திடலாம். ரெண்டாவது மாடியில ரூஃப் கார்டன் ரெஸ்டாரண்ட் ஒண்ணுகூட அரேஞ்ச் பண்ணிட்டா, ப்ளான் பண்ணியிருக்கோம் சார்..''

அவனிடமிருந்து எந்த சத்தமும் வராது போகவே திரும்பியபோது, ப்ரனேஷ் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், வேகமாக வெளியே வந்தாள்.

மனதிற்குள் சோக மின்னலொன்று மெலிதாய் ஒளிர்ந்தது.

வாசலுக்கு எதிரே இருந்த போர்ட்டிகோவை தாண்டி முன்புறம் வந்தவள், ''இங்கே பெரிசா அரை வட்ட வடிவிலே ஒரு லானும், எதிர்ல செயற்கை நீர்வீழ்ச்சியும் உருவாக்கிடலாம்னு இருக்கோம். ரெண்டு பக்கமும் ஃபௌண்ட்டைனும், சுத்தி மர வேலியும் போட்டுடலாம்னு ஐடியா சார்..'' மெல்லிய குரலில் முடித்தாள்.

உடனே, ''ம்.. இப்ப நீயும் அப்படித்தான் உன்னை சுத்தி ஒரு மாய வேலியை போட்டுட்டு இருக்கியா? இல்லே.. முன்னே மாதிரியே ஒரே நேரத்துல ரெண்டு பேருணாலும் டபுள் கேம் ஆடி நல்லா சமாளிப்பியா?''

உதடுகள் ஏளனமாக வளைய, கண்களில் ஒருவித தீவிரத்துடன் கேட்டான் ப்ரத்யும்னேஷ்.

விழுந்தால் அள்ள முடியாத சொற்கள் வீரியத்துடன் வெளிவர, அவளுடைய இதயம் ஒரு கணம் துடிக்க மறந்து மீண்டும் தன் இயக்கத்தைத் தொடர்ந்தது.



JUN 12 2010

உணர்வுகள், 'பொறுமை.. பொறுமை' என்று அறி வுறுத்திக் கொண்டிருந்தன.

அவனைத் திரும்பியும் பார்க்காமல் பங்களாவின் பக்கவாட்டுப் பகுதிக்குச் சென்றாள் அவள்.

"சார்.. அங்கே வரிசையா ஆறேழு ஹனிமூன் காட் டேஜ்.. அதுவும், மூங்கில் குடில் மாதிரி இயற்கையோட ஒன்றியிருக்கிற மாதிரி அமைக்கலாம்னு ப்ளான்!" தூரப்பார்வை பார்த்தபடி கூறினாள்.

"ஹனிமூன் காட்டேஜ்? ம்.. இப்பதான் நீ சரியான இடத் துக்கு வந்திருக்கே! உன்னைச் சுத்தி சுத்தி வந்தானே... அவன் கூட ஹனிமூனெல்லாம் முடிஞ்சதா?

"ஆனா.. அவனை ஏன் விட்டுட்டேனுதான் புரியலை. அங்கேயும் உன் சாயம் வெளுத்திடுச்சா? புரியலை? உன் கேரக்டரைப் பத்தி அவனுக்கு தெரிஞ்சு போச்சானு கேட்டேன்..."

"ப்ரத்யு.. நாக்கை அடக்கிப் பேசுங்க. நான் ஒண்ணும் அப்படிப்பட்ட பொண்ணில்லை!"

அதுவரை கட்டிக் காத்த பொறுமை கலைந்து பெண் புலியாய் சீறினாள்.

அவள் தோளை அழுந்தப் பற்றி திருப்பியவனுடைய முகம் சீற்றத்தில் சிவந்திருந்தது.

"ஏய்.. என்னை அப்படி 'பெட்நேம்' வெச்சுக் கூப்பிட இப்போ உனக்கு எந்த உரிமையும் கிடையாது. தகுதியும் இல்லை!

"நீ நல்லவனு நினைச்சி, உன்கிட்ட மயங்கியிருந்தேன் ...ரு. ஒரு காலத்துலே.., சே! ப்ரத்யூன்னு கூப்பிட்டு



இப்போ அதை கொச்சைப் படுத்... கூறினான்.

தோளில் அழுந்தப் பதிந்த விரல்களின் பதிவுகளை விட மனதில் விழுந்த சொற்களின் கீறல்கள் பெரிதும் வலித்தன.

சட்டென விலகினாள் அவள்.

"சாரி சார்.. 'ஏய்'னு கூப்பிடற உரிமையும் உங்களுக்கு இப்ப கிடையாது. எப்பவோ அதை இழந்தாச்சு! பிசினஸ் பத்தி பேசறதாயிருந்தா மட்டுமே, நான் உங்களோட வரேன்..." என்றாள் அழுத்தமாக.

"பிசினஸ்... ம்.. ஒகே!"

யோசனையுடன் தலையசைத்தபடி அவன் முன்னே செல்ல, இருவரும் பங்களாவின் பின்புறம் சென்றனர்.

முன்பு அந்த இடத்தை சுற்றிலும் நிறைய மரங்கள் இருந்தது ஞாபகம் வந்தது.

இப்போது அவை எல்லாமே வெட்டப்பட்டிருக்க, மனம் சட்டென்று கனத்துப் போனது.

பூமியின் தகிப்பைத் தணிப்பது மரங்கள்தானே? குளிர்ச்சி, நிழல், காற்று, சுவாசிக்க பிராணவாயு எல்லா வற்றையும் அமுதசுரபியாய் வழங்கி நம்மை பரவசப் படுத்துபவை மரங்களாயிற்றே...

இயற்கையை விட பெரும் தன்னம்பிக்கையை விதைக்கும் ரசவாதம் யாருக்கு வரும்? இதயம் நெகிழ்ந்தது. உடனே, ஒரு முடிவுடன் அவனிடம் திரும்பினாள்.

"நாம பயன்படுத்தற இடங்கள் தவிர மத்த பகுதி கள்லே எல்லாம் நிறைய மரங்கள் நடணும் சார்...

JUN 12 2010

அதுதான், நாம இந்த பூமிக்கு செய்யற பெரிய நல்ல காரியம்!'' மெதுவாக உரைத்தாள்.

மறுகணமே அவன் முகத்தில் ஏதோ ஒரு மாற்றம்!

''ஓ! சமூக அக்கறையெல்லாம் கூட இருக்கு போல..''

விசித்திர முறுவலுடன் கூறிவிட்டு தலையசைத்தபடி அவன் செல்ல, அவள் விழிகள் சிறு நம்பிக்கையுடன் ஒளிர்ந்தன.

சிறிது தூரம் சென்றவுடன், ''இந்த இடத்துல பெரிய வங்களுக்கான நீச்சல் குளம், ட்ரெஸ்ஸிங் ரூம்ஸ், பக்கத் திலேயே சின்னக் குழந்தைகளுக்கு ப்ளே ஏரியாவும், சின்ன நீச்சல் குளமும் அமைச்சிடலாம்னு இருக்கோம் சார்.

''சறுக்கு மரம், ஊஞ்சல், சீசா, மெரிகோ ரவுண்ட்... இன்னும் குழந்தைங்க விளையாட என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதெல்லாம் பண்ணிடலாம்!''

அவள் சொல்லிக் கொண்டே செல்ல, பதிலாக அவனிடம் எந்த சத்தமுமில்லை!

அந்த நிசப்தம் ஏதோ ஒரு எச்சரிக்கை உணர்வையும் யோசனையையும் தூண்ட அவள் திரும்பியபோது, வெகு அருகில் அவன் நின்றிருந்ததை கவனிக்காமல் அவன் மீது இடித்து, தடுமாறிவிட்டாள்.

சட்டென்று அவளைத் தாங்கி நிறுத்தியவனின் குரல், அவளுடைய செவிமடல்களைத் தீப்பொறியாய் வருடியது...

மேனி எங்கும் பெரும் தகிப்பை ஏற்படுத்தியது. ப்ரேஷ் அவளிடம் குனிந்தான்.

''ம்.. குழந்தைங்கன்னா உனக்கு ரொம்பப் பிடிக்குமோ? இதுவே நீ நல்லவளா இருந்திருந்தா, நம்ம குழந்தை

இப்போ இங்கே

இல்லை?''

ஆழமான குரலில் கேட்டபோது, அவள் இதயம் சுக்கு நூறாய் சிதறியது.

அந்த வார்த்தைகள்.. அவள் மனதில் எரிதழலாய்!

வேகமாக நிமிர்ந்தவளின் விழிகளில், மெல்லிய நீர்க்கசிவு!

''நான் இப்பவும் நல்லவளாத்தான் இருக்கேன்... நீங்க தான் என்னை நம்பலை, தேவையில்லாம, பொய்யா ஒரு கறுப்பு வர்ணத்தை என்மேல பூசிட்டீங்க. அது ஏன்னு எனக்கு இன்னிக்கு வரைக்கும் புரியலை. நீங்க ரொம்ப மாறிட்டீங்க ப்ரத்யு...''

மெலிதாக முணுமுணுத்தவள், மறுகணமே சமாளித்து, ''சாரி சார்..'' என்றாள்.

''எதுக்கு..?''

''நான் உங்க பேரைத் தெரியாம யூஸ் பண்ணினதுக்கு! இப்ப நீங்க என்னோட எம்ப்ளாயர்... நானும் அந்த ரிலேஷன்ஷிப்பை மட்டும்தான் விரும்பறேன்..''

அழுத்தமான குரலில் கூறிவிட்டு, அவள் வேகமாக பங்களாவின் முன்புறம் செல்ல, சட்டென்று கையைப் பிடித்து தடுத்தான் அவன்.

''அப்போ... எந்தக் காலத்திலயும் நீ என்னை உண்மையா விரும்பலை.. இல்லை?''

என்றபோது, அவனிடமிருந்து சீறலான மூச்சு ஒன்று வெளிப்பட்டது.

JUN 12 2010

பவித்ரா, அவன் கையை உதறிவிட்டு ஓடிச்சென்று காரில் ஏறி அமர்ந்தாள்.

நெஞ்சே இரண்டாகப் பிளந்ததுபோல் வலிக்க ஆரம்பித்தது.

கார் கதவை சாத்திவிட்டு, ஸ்டியரிங் வீலில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தபோது, ஏதோ புரியாத சப்தங்கள்!

நிலநடுக்கத்தால் உண்டான அதிர்வைப் போல், கார் ஆட்டம் போட, பயந்துபோய் நிமிர்ந்தால்.. கார் கதவைத் திறக்க முயன்று கொண்டிருந்தான் ப்ரத்யும்னேஷ்.

கண்களில் சாரலாய் வழிந்த கண்ணீரைக் கூட துடைக்காமல், வேகமாக காரை ஸ்டார்ட் செய்து ஓட்டிச் சென்றாள் பவித்ரா.

நல்லவேளையாக.. திரும்பிப் போகும்போது பெரியப்பா வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தில், டிரைவரைத் தவிர்த்து தானே காரை ஓட்டி வந்ததும், நன்மைக்கே என்று புரிவதாய்!

தன்னைக் கட்டுப்படுத்தி அழுகையை நிறுத்தியவளுக்குள், அவனைக் கண்டதும், தான் ஒரு கோழையைப் போல் அழுதது புதிராய்!

**'துன்பத்தை தாங்கிக் கொள்பவளால்தான், எந்தச் செயலையும் நன்றாகச் செய்யமுடியும்... பூமியின் பொறுமையே, அவளுடைய புன்னகைகளைப் பூக்க வைக்கிறது..'**

கவிஞர் தாகூரின் வரிகள்தான் நினைவுக்கு வந்தன.

மனதை நோக்கி, அழுகையை விடுத்து, எதிர்காலத்தைப் பற்றிய தெளிவான சிந்தனையுடன் கெஸ்ட்



ஹவுஸுக்கு வந்த பின்பும், ஏனோ இதயம் சமாதானமடைய மறுத்தது.

நெஞ்சக் கதவுடைத்து வெளிவந்தன... பழைய நந்தவன நாட்களின் நேசப் பதிவுகள்!

காதலின் முடிச்சு.. மெதுவாக மனதில் அவிழ ஆரம்பித்தது.



# 4



கோயம்புத்தூரில், பவித்ரா 'பி.ஆர்க்' இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருந்த நேரம் அது!

ஒருநாள்.. தனது நெருங்கிய தோழி நந்தினியின் அண்ணன் திருமணத்துக்கு சென்றிருந்தபோதுதான், ப்ரத்யும்னேஷை சந்தித்தாள் அவள்.

எல்லோரும் திருமண நிகழ்வில் ஆழ்ந்திருந்தபோது, அவ்வப்போது தன்னைப் பார்வைகளால் உரசும் அவனைப் பற்றி யாரென்று யோசிக்கும் போதே, நந்தினி அவனை அறிமுகப்படுத்தினாள்.

"பவி, இவர்தான் அண்ணாவோட பெஸ்ட் ஃப்ரெண்ட் ப்ரத்யும்னேஷ்! எம்.பி.ஏ. முடிச்சுட்டு, அவங்க அப்பாவோட பிசினஸை பார்த்துக்கிட்டு இருக்காரு!" என்றாள்.

பிறகு, அவனிடம் திரும்பி, "இவ என்னோட நெருங்கிய சிநேகிதி பவித்ரா!" என்று குறும்புடன் அறிமுகம் செய்தாள்.

JUN 12 2010

குறுகுறுத்த கூர்மையான பார்வையுடன் "ஹலோ..." என்று கை நீட்டினான் அவன்.

"வணக்கம்!" என்று பவித்ரா ட்யூலிப் மலராக கை குவிக்க, "ஓ.. சுத்த தமிழ்ப் பொண்ணோ?" கிண்டலாகக் கேட்டான்.

"ஆமாம்! புலியை முறத்தால் விரட்டின சுத்தமான தமிழச்சி!"

நந்தினி தான் கண்சிமிட்டியபடி கூறினாள்.

"ஓஹோ... நல்லவேளை நான் புலி இல்லை!" என சிரித்தவன், "நீங்களும் என்னை 'ப்ரனேஷ்'னே கூப்பிடலாம்.. என் நண்பர்களெல்லாம் அப்படித்தான் கூப்பிடுவாங்க.." எனும்போதே அவன் கண்கள் குறுகுறுத்தன.

'என்ன இவன்.. இன்றுதான் தன்னை முதன்முதலில் பார்க்கிறான். பிறகு பார்க்கப்போகிறோமா என்பதே தெரியாது.. ஒரு சந்திப்பிலேயே எப்படி நண்பனைப் போல் அழைப்பது?' என்கிற எண்ணம் நெருடலாய் வந்தாலும்.. சரி என்றே தலையசைத்தாள்.

ஆனால், அதற்குப்பிறகு, எதேச்சையாகவோ.. திட்டமிட்டோ.. இருவருமே அடிக்கடி சந்திக்க நேர்ந்தது.

ஒரு நாள், நந்தினியை அழைத்துச் செல்ல கல்லூரிக்கு வந்திருந்தான் அவன்.

பிறகு, 'ப்ளாக் தண்டர் தீம் பார்க்'குக்கு தோழிகளுடன் சென்றிருந்தபோது ஒரு முறை, சினிமா தியேட்ரில் ஒருமுறை என அடிக்கடி அவள் விழிகளில் பட்டு, இதயத்தில் நுழைந்து விடுவேனென்று பயமுறுத்திக் கொண்டிருந்தான்.



அப்போதெல்லாம் அவன் பார்வைகள் நேசத்தை சொல்லித்தர, அந்த அன்பில் ஊஞ்சல் கட்டி ஆடிய மனது, மிகவும் சலனப்பட ஆரம்பித்திருந்தது.

ஒரு நாள், நந்தினியும் அவளுமாக கோவிலுக்குச் சென்றிருந்தபோது, அங்கு ப்ரனேஷும் வந்திருந்தான்.

கம்பீர நடையுடன் அருகே வந்தவன், "தேங்க்ஸ் நந்தினி.. நான் உன் ஃப்ரெண்டை அழைச்சிட்டுப் போகலாமா? அவங்களோட கொஞ்சம் தனியா பேசணும்.." என்ற போது பவியின் மனம் விதிர்த்துப்போனது.

ஒருவித பதைப்புடன் திரும்பி, நந்தினியைப் பார்த்தாள்.

"பவி.. ப்ரனேஷ் அண்ணா உன் கூடப் பேசணும்னு சொன்னதாலேதான், இன்னிக்கு உன்னை கோவிலுக்கு கூப்பிட்டேன்... நீங்க பேசிட்டிருங்க..."

என்றபடி அவள் வேறொரு சந்நிதிக்குச் செல்ல ஆரம்பிக்க, "நந்தினி.." என்ற பவியின் அழைப்பு காற்றில் கரைந்து போனது.

அவனுடன் செல்லவும் மனமின்றி, அவன் அருகில் நிற்கவும் முடியாமல் தவித்துப்போனாள்.

"ஏன் இப்படி பயந்துபோய் நிக்கறே? உக்காந்து பேசலாமே... நான் ஒண்ணும் உன்னைக் கடிச்சித்தின்னுட மாட்டேன்!"

காதருகில் அவன் குரல் சீறலாய் ஒலிக்க, மெதுவாகச் சென்று பிரகாரத்தில் அமர்ந்தாள்.

சிறிது நேரம்.. கோவில் மணியோசையும், வேதமந்திரங்களும், புறாக்களின் சிறகடிப்புகளும் மட்டுமே அவர்களுக்குத் துணையாய்!

JUN 12 2010

திடீரென தொண்டையை செருமியவன், "ம்.
என்னவோ தெரியலை.. அதை எப்படி சொல்றது..
சொன்னா நீ எப்படி எடுத்துப்பேன்னு புரியலை.....

"உன்னைப் பாத்த அந்த முதல் நிமிஷமே, ஏனோ என்
மனசுல ஒரு பெரிய சலனம் வந்தது! எந்தப் பெண்
கிட்டயும் இது வரைக்கும் மயங்காத என் மனசு ரொம்ப
தவிக்க ஆரம்பிச்சது.

"அது என்னு அப்ப புரியலை பவித்ரா. ஆனா, புரிஞ்சப்
புறம் எப்படி வெளிப்படுத்தறதுன்னு தெரியலை.." ஒரு
பெருமூச்சுடன் நிறுத்தினான்.

அவள் இதயம் ரயிலோசையாய் தடதடக்கும் போதே,
அவன் தொடர்ந்தான்.

"என் மனைவிங்கிற இடத்துல, உன்னைத் தவிர வேற
யாரையுமே கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியலை.
அந்த அளவு என் மனசுல ஆழமா நீ பதிஞ்சிட்டே!
காதலை கோவில்ல வெச்சு சொல்றது தப்பா..?"

குறும்புடன் கேட்டுவிட்டு, அவளையே கூர்ந்து
அளவிட்டான்.

பதிலாக ஒன்றும் கூறாமல், பதட்டத்துடன் எழுந்த
வளை, உடனே பற்றி நிறுத்தினான்.

"எய்! பயந்திட்டியா? 'என்னடா.. இவன் கொஞ்சம் கூட
தயக்கமே இல்லாம உடனே காதலை சொல்லிட்
டானே'னு தோணுதா? நான் எப்பவுமே அப்படித்தான்..
மனசுல பட்டதை உடனே கேட்டுடுவேன். ஆனா, நீ
மெதுவா யோசிச்சே பதில் சொல்லலாம்...!"

அவன் குரலும் பார்வையும் காதலைப் பறைசாற்ற,
மரக்கிளையில் சிக்கிய பட்டமாய் உள்ளம் படபடத்தது.



முகத்தில், சன்னமாய் வியர்வைத்துளிகள் அரும்ப
ஆரம்பித்தன.

"என்ன டென்ஷனா? சரி.. நான் கிளம்பறேன்! அடுத்த
சன்டே பார்க்கலாம்.. சி.யூ!"

இயல்பாக அவன் கிளம்பிச் செல்ல, தன்னில் பாதி
தொலைந்ததைப்போல்... இதயமே தன்னை விட்டு
நீங்கிச் செல்வதுபோல் அவளுக்கு ஒரு உணர்வு!

அந்த நொடி. வேரும், கிளைகளும் இன்றி மனதில்
பூப்பூத்தது காதல்!

அவன் கண்ணிலிருந்து மறையும் வரை, இமைத்தட்டி
விழிக்காமல் பார்த்துக் கொண்டுருந்தாள் அவள்.

ஆனால், அவன் ஒரு முறைகூட தன்னை திரும்பிப்
பார்க்கவில்லையே என்ற ஆதங்கம் பெரிதாய!

'ஒருவேளை, இவன்தான் என் பெண்மைக்கு அர
சனோ!' என்றும் அவள் உள்ளத்தில் ஒரு கேள்வி எழ,
முதன்முதலாக காதலை அனுபவிப்பது, சிலிர்க்க வைக்
கும் சுகானுபவமாய்...!

புதிதாய் ஒரு காதல் பறவை இதயத்திற்குள் நுழைந்து,
மெதுவாக கூடு கட்ட ஆரம்பித்தது.

கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டுவிட்டு நந்தினி
யுடன் திரும்பிவரும்போது, அவளிடம் எல்லாவற்றையும்
கூறினாள் பவி.

அவளும் மிகவும் மகிழ்ச்சியுடன், "பவி! நீ ரொம்ப
லக்கி! ப்ரனேஷ் அண்ணா ரொம்ப நல்லவர்.. பெரிய
பணக்காரருங்கிற பந்தா கொஞ்சம்கூட கிடையாது.
'எம்.பி.ஏ' முடிச்சுட்டு ஒரு பெரிய ஹோட்டலையும் அட்

JUN 12 2010

வர்டைசிங் ஏஜென்சியையும் நடத்திட்டு இருக்காரு..'' உற்சாகமாக அவனைப் பற்றி பட்டியலிட்டாள்.

''போதும்மா.. உன் ப்ரனேஷ் அண்ணா புராணம்! வாய் வலிக்கப்போகுது! நான் வீட்டுக்குப் போகணும்.. இப்பவே லேட்டாயிடுச்சு!'' கிளம்பினாள் பவித்ரா.

''கள்ளி! எல்லா விஷயமும் சொல்ற வரைக்கும் கேட்டுட்டு இப்ப என்னவோ பிகு பண்ணிட்டு ஓடறே?'' - கிண்டலடித்தபடி தானும் எழுந்தாள் நந்தினி.

பிறகு வந்த நாட்களில், பவிக்கு பகலிலும் கனவுகள் அணிவகுக்க ஆரம்பித்தன.

மனதில் நேசவிதை விழுந்து துளிர்த்து மரமாக, அவன் பெரிய கோடீஸ்வரன் என்று அறிந்திருந்ததால்... இது நிறைவேறுமா என்கிற பயமும் கூடவே கிளர்ந்தெழுந்தது.

மெல்ல நகர்ந்த அந்த ஒரு வாரம், யுகங்களுக்கு சமமாய்!

விடியலில் வரும் கனவுகளில் எல்லாம், அவனுடைய ஆசை முகம் தேடி உணர்வுகள் ஏங்க ஆரம்பித்தன.

மறு ஞாயிறன்று நந்தினியுடன் பார்க்குக்கு சென்றிருந்தபோது, ப்ரனேஷும் அங்கு வந்துவிட்டான்.

அந்த வயதுக்கே உரிய பயத்துடன் மனம் படபடத்தது அவளுக்கு!

முகம் சிவந்து மௌனமாய் அமர்ந்திருக்கும் அவளை, ஒரு பார்வையிலேயே இனம் கண்டு கொண்டான் அவன்.

நந்தினி, சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று விலகிச்செல்ல, பூமியிலேயே பார்வையைப் பதித்தபடி உறைந்திருந்தாள் பவி.



ஒற்றை விரலால் அவள் முகத்தை அவன் நிமிர்த்த, அவனுடைய முதல் ஸ்பரிசத்தில் கூசிச் சருமம் சிலிர்த்தது.

''என்ன.. பேச்சையே காணோம். வெறும் காத்துதான் வருதா? பரீட்சை ரிசல்ட்டுக்கு காத்திருக்கிற மாதிரி, நான் ஒருத்தன் இங்கே டென்ஷனோட இருக்கேன்... நீ என்னடான்னா, பூமியோட பேச்சுவார்த்தை நடத்திட்டிருக்கே?''

அவன் கேட்டபோது உயர்ந்த பவியின் விழிகள், உள்ளிருக்கும் உயிர்க் காதலைப் பிரதிபலித்துவிட, அவன் முகம் உடனே மலர்ந்தது.

''ம்.. சொல்ல வந்தது பாசிடிவ்வான விஷயம்தான்னு புரியுது. ஆனா, அதை நீயே சொன்னாத்தானே நல்லாயிருக்கும்! எத்தனை நாளா வெயிட் பண்றேன்..'' என்றவனின் பார்வையும் குரலும் ஏக்கம் நிறைந்ததாய்!

மறு நொடியே, மௌனக்கரை உடைத்து, நேச அலைகளாய் அவளிடமிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

''ஐ லவ் யூ ப்ரனேஷ்..'' என்றபடி வெட்கத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள் பவித்ரா.

விழிகளுக்குப் புலப்படாத மாயக்கரம் ஒன்று, மயிலிறகால் வருடியது போல் ஒரு இதம் அவனுக்குள்!

பிறகு ஒவ்வொரு வாரமும் அவள் நந்தினியின் துணையுடன் ப்ரேனஷை சந்தித்தாள்.

அதுவே தொடர்கதையாகி எப்போது ஞாயிற்றுக் கிழமை வருமென்று [illegible]த்தது.

JUN 12 2010

அவன் லயன்ஸ் கிளப்பில் உறுப்பினராக இருந்ததால், தன்னைப் போலவே அவர்களையும் ரத்த தானம் செய்யப் பழக்கிவிட்டான்.

அன்றிலிருந்து அவர்களுடைய நண்பர்கள் குழுவே அவனுடன் சேர்ந்து பல சமூக சேவைகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டது.

கிளப்பின் சேவைகளில் அவர்களும் பங்குபெற, வார இறுதி நாட்கள் பயனுடன் கழிந்தன.

அதனாலேயே வீட்டிலுள்ள பெரியவர்களின் சம்மதம் வெளியில் செல்வதற்கும், சுற்றுவதற்கும் எளிதாக கிடைத்தது.

கிராமங்களுக்குச் சென்று சுத்தப்படுத்துவது... சுகாதாரம் பற்றிய விழிப்பு உணர்வை மக்களிடம் ஏற்படுத்துவது.. தடுப்பூசி முகம்களில் வாலண்டியராக உதவுவது... என்று பவித்ராவும் உற்சாகமாக கலந்து கொண்டாள்.

இதுவே தொடர, ஒரு நாள் இருவரும் பார்க்கில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

திடீரென்று "எனக்கு ஒரு பெரிய சந்தேகம்... கேக்கலாமா?" குறும்புடன் கேட்டாள் பவி.

என்னவென்று கேள்வியாக ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி அவளையே ரசித்துக் கொண்டிருந்தான் அவன்.

"உங்களுக்கு 'ப்ரத்யும்னேஷ்'னு யாருங்க பேர் வெச்சது? அதுவும், வாயில நுழையாத பேரா பாத்து?"

"ஏய்... என்ன கிண்டலா? வாயில ஈஸியா நுழையற பேர்னா 'வாழைப்பழம்'னுதான் வைக்கணும்! என்ன..



இப்பவே உன் மாமியாரை கிண்டல் பண்ண ஆரம்பிச்சிட்டியா?"

"அச்சச்சோ.. சாரி.. உங்கம்மாதான் அந்தப் பேரை வெச்சிருப்பாங்கன்னு எனக்கு எப்படித் தெரியுமாம்..." சிறு ஊடலுடன் சிணுங்கினாள் அவள்.

"ம்.. பின்னே வேற யார் வைப்பாங்களாம்? பக்கத்து வீட்டுக்காரங்களா? எங்கம்மா ஒரு கண்ணன் பக்தை! கண்ணனுக்கு இன்னொரு பெயர் 'ப்ரத்யும்னன்.'

"அதான், அந்தப் பெயரையே வச்சிட்டாங்க! கூப்பிட கஷ்டமா இருக்கேன்னு நான்தான் 'ப்ரனேஷ்'னு சுருக்கிட்டேன். வேற ஏதாவது சந்தேகம் இருக்கா?"

அவள் "இல்லை.." எனத் தலையசைத்துவிட்டு, "உங்க அம்மாகிட்ட சொல்லிடாதீங்க... ப்ளீஸ்!" மெலிந்த குரலில் கூறினாள்.

"நான் சொல்லமாட்டேன்ப்பா... நம்ம மருமக இவ்வளவு வாயாடியான்னு இப்பவே நடுங்க ஆரம்பிச்சிடுவாங்க, பாவம்!"

"ம்.. நான் என்ன வாயாடியா? அவங்ககிட்டே நானே சொல்றேன் எல்லாத்தையும்..!"

"வேண்டாம்மா.. எல்லாத்தையும் அம்மாகிட்டே போய் சொன்னா அவ்வளவுதான்.. இந்தக் கண்ணனை சுத்தி எத்தனை கோபியர்கள் தெரியுமா? பயந்துடுவாங்க!"

குறுகுறுத்த விழிகளுடன் அவன் முடிக்க, அவள் பொய்க் கோபத்துடன் எழுந்தபோது, அவள் கையைப் பிடித்து அமர வைத்தான் ப்ரனேஷ்.

"பவி.. முதல்லே நீ என்னை எப்படிக் கூப்பிடறதுன்னு முடிவு பண்ணிட்டியா?"

''ம்... ஆனா, சொல்லமாட்டேன்!''

''என்னன்னு.. அதுசரி! 'டேய்'னு கூப்பிடாம இருந்தா சரி..''

பயந்தவனைப்போல நடித்தபடி அவன் கூற, அடக்க இயலாமல் சிரித்துவிட்டாள்.

பிறகு, ''மத்தவங்க மாதிரியே கூப்பிட எனக்குப் பிடிக் கலை. அதனால... ப்ரத்யுனு கூப்பிடவா?'' வெட்கத்துடன் கேட்டாள்.

சட்டென்று எதிர்பாராதவிதமாக அவள் கன்னத்தில் தன் உதடுகளை பதித்துவிட்டான் அவன்.

அவள் விதிர்த்துபோய் எழுந்து நின்றபோது, 'சரின்னு என் பாஷையில சொன்னேன்.'' - குறும்புடன் கண் சிமிட்டி சிரித்தான்.

நாட்கள் செல்லச் செல்ல காதல் இழை இருவருக்கு இடையேயும் வலுவாக நெய்யப்பட்டது.

இரண்டு வருடங்கள் ஓடிப்போனதே தெரியவில்லை. தன் உயிரும் உள்ளமும் அவனுக்கே சொந்தமென்ற மகிழ்ச்சி, அவளுடைய அழகை மேலும் அதிகபட்டுத் துவதாய்!

சுனாமியாலும் சுருட்ட முடியாத அவன் இதயத்தை, சிறு புன்னகையிலேயே சிதற வைத்திருந்தாள் அவள்.

அவனுடைய மன அலைவரிசையில், அவளது கவிதைக் குரல் மட்டுமே தொடர் ஒலிபரப்பாய்...! அப் போதுதான் ஒருநாள், ப்ரனேஷ் அவளிடம் மெதுவாக விசாரித்தான்.

''நேத்து நீ மருதமலைக்குப் போயிருந்தியா பவி?''

''இல்லையே! நான் அங்கே போனதே இல்லை! ஏன், ப்ரத்யு கேக்கறீங்க?''



அவள் வினவியபோது, ''சும்மாத்தான்...'' என்றான் யோசனையுடன்!

அன்றுதான், தன் காதலுக்கு பெரிய நூல்கண்டுச் சிக்கல் ஒன்று ஜனித்திருப்பதை அவள் அறியவில்லை!

எதையும் அறியாமல், சிறகு விரித்த பட்டாம்பூச்சி யாய்ச் சுற்றித் திரிந்தவள், அவனுடைய இந்த அன்பிற் கும், பரிவிற்கும் ஆயுள் குறைவென்பதை சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

பிறகு.. வார்த்தைகளில் நேசமும், கைகளில் கூர் வாளும் சுமந்து அவன் தன்னை காயப்படுத்தியதை, அவளால் இன்றுவரை மறக்கவே முடியவில்லை.



## 5



காதல்... சலசலக்கும் நீரோடையாக பவித்ராவிடமும் ப்ரனேஷிடமும் பரவியிருந்தது.

கல்லூரியில்.. நான்காவது வருடப் படிப்பின் இறுதி யில், நந்தினியின் திருமணம் திடீரென்று நிச்சயிக்கப் பட்டது.

அமெரிக்காவில் வேலை பார்க்கும் மாப்பிள்ளை!

தோழி என்பதால், அவளுடைய திருமணத்தில் தோழிப் பெண்ணாய் மணப்பெண்ணின் அருகிலேயே இருந்தாள் பவித்ரா. ப்ரனே[illegible]தான்!

JUN 12 2010

ஒவ்வொரு சடங்கையும் சம்பிரதாயத்தையும் உடனிருந்து கவனித்து, மாப்பிள்ளையின் செல்லச் சீண்டல்களைப் பார்த்தபோது, இருவரும் அவர்களின் வசமில்லை.

இது போன்ற ஒரு இனிய தருணம், நமக்கு எப்போது கைகூடப் போகிறதென்று எதிர்பார்ப்பு... பவியின் விழிகளில்!

ப்ரனேஷோ தாபப் பெருமூச்சில் அந்த இடத்தையே அனல் பகுதியாய் மாற்றியிருந்தான்!

பிறகு நந்தினியும் பிரியாவிடை பெற்று அடுத்த மாதமே கணவனோடு அமெரிக்கா போய்விட்டாள்.

மனப்பகிர்தலுக்கு ஆளின்றித் தவித்துப்போன பவிக்கு நல்ல நண்பனாகவும் மாறிப்போனான் ப்ரனேஷ்.

ஆனால், அவள் படிப்பை முடித்த பிறகுதான் திருமணம் அவன் கூறிவிட, கடைசி வருடப் படிப்பு மீதமிருந்தது.

விடுமுறை நாட்களிலும் அவர்களின் சந்திப்பு, கோவில், பார்க் என்று தொடர, தன் மனதை மற்றவர்களிடம் மறைக்கப் பெரும்பாடுபட்டாள் பவி.

தலையணை மட்டும் அவள் கனவுகளை உறக்கத்துடன் பகிர்ந்து கொண்டது.

கடைசி வருடத்தின் ஆரம்பத்திலும் அவன் இருமுறை "சினிமாவுக்குப் போனாயா.. ஐஸ்கிரீம் பார்லருக்குப் போனாயா?" என்று கேட்டபோது, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

கூட்டை மறந்த பறவையாய்... தவித்துத் திணறியது நெஞ்சக் கூடு.



பெரிதும் குழம்பிப்போய், மனதுக்குள் சங்கடக் குமிழ்கள் உற்பத்தியாக, அன்று அவனிடம் நேராகவே கேட்டுவிட்டாள்.

"என்ன ப்ரத்யு! எப்பப் பார்த்தாலும் 'அங்க போனியா, இங்க போனியா?'னு கேக்கிறீங்க?" - மெலிதான கோபம் அவள் குரலில்.

"பவி.. என் ஃப்ரெண்ட்ஸ் உன்னை அங்கே பார்த்ததா சொன்னாங்க... அதான் கேட்டேன்." யோசனையுடன் கூறினான் அவன்.

"ஓ! நான் பயந்தே போயிட்டேன். ஒருவேளை... நாம விரும்புறது அவங்களுக்குப் பிடிக்கலையோ! ஏப்ரல் ஃபூல் பண்ண, இது ஏப்ரல் மாசம்கூட இல்லையே?"

"சேச்சே... உன்னைப் பிடிக்காமல்லாம் இல்லை! சரி.. இதை இப்படியே விட்டுடலாமா? நீ இந்த வருஷம் படிப்பை முடிச்சவுடனே, அப்பா, அம்மாவை அழைச்சிட்டு வந்து உங்க அப்பாகிட்டே பேசறேன்.. ஓகேயா?"

"ம்... சரி..." அரை மனதாகத் தலையசைத்தாள் அவள்.

"என்ன.. கோபமா? இன்னொரு குட் நியூஸ்.. நேத்தே என் அம்மாகிட்ட எல்லாத்தையும் பேசி, ஐயா சம்மதம் வாங்கிட்டேன், தெரியுமா?" காலரைத் தூக்கியபடி சொன்னான்.

அவன் கூறியதைக் கேட்டவுடன், எல்லா செல்களிலும் நேசப்பூக்கள் மலர்ந்து, பரவசமானது மனசு.

விழிகளை விரித்து, "இதை ஏன் வந்தவுடனே சொல்லலை? போங்க!" தாங்க முடியாத மகிழ்ச்சியும் பொய்க் கோபமுமாய் அவள் கடிந்தபோது, அவனும் குறும்புடன் புன்னகைத்தான்.

JUN 12 2010

"அவங்கதான், உன் படிப்பு முடிஞ்சப்புறம் அப்பாகிட்டே எல்லாத்தையும் சொல்லிக்கலாம்னு சொன்னாங்க" வார்த்தைகள் வருடலாய் வந்தன.

"நீங்க இப்பவே வந்து எங்கப்பாகிட்டே பேசி முடிச்சிட்டா எனக்கு நிம்மதி! முன்னேயாவது நந்தினி இருந்தா... அவ வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டு வருவேன். அம்மா எப்பவுமே ரொம்ப ஸ்ட்ரிக்ட் தெரியுமா?

"ஏதாவது ஒரு பொய் சொல்லிட்டு, ஞாயித்துக் கிழமையிலே உங்களை வந்து பார்க்கறதுக்குள்ளே ஆயிரம் கேள்வி கேக்கறாங்க... பயமா இருக்கு!" பெருமூச்சுடன் முடித்தாள்.

"சரி... அப்பாவோட நான் உடனே பேசறேன்..."

அவன் உறுதியுடன் கூறிவிட்டுக் கிளம்பிச் சென்ற பிறகு, தொடர்ந்த ஒரு வாரமும் அவள் வாசலில் பட்டுப் பாதையை விரித்து மென்மலர்களைத் தூவின... மகிழ்ச்சியில் மனம் மலர்ந்து விகசித்தது.

ஆனால், அதைப் பகிர்ந்து கொள்ளத் தான் அருகில் யாருமில்லாத நிலை! கனவுகள் ரம்யமாகி, அவன் துணையுடனே உறக்கத்திற்குள் புகுந்தன.

அந்த வெள்ளிக்கிழமை, பவி கல்லூரிக்குச் சென்
ந்தபோது, காலையிலேயே அவளைத் தேடி ப்ரனேஷ்
கு வந்து விட்டான்.

ல்லூரி வாசலுக்கு எதிரே அவனுடைய காரைக் கண்
நெஞ்சம் கவிதைகளைத் துணைக்கு அழைத்தது..
சிலிர்த்தது.



தன் தாய் தந்தையிடம் எல்லா விஷயமும் பேசிவிட்டு, ஒரு நல்ல முடிவுடன் வந்திருப்பான் என்று எண்ணியவுடனே, மனம் மலர்ந்துவிட, உணர்ச்சிக் குவியலாய் அவள் முகம்!

வேகமாகச் சென்று காரில் ஏறி அமர்ந்தவள், உடனே அவனிடம் திரும்பினாள்.

அவன் முகமோ பாறையாய் இறுகி, கண்கள் செவ்வரியோடி, சிவந்திருந்தன.

அவனிடம் ஏன் இந்த மாற்றம்? புரியாத புதிராய் ஒருவித நெருடல் இதயத்தை ஆக்ரமிக்க, அவளுக்கோ ஒன்றுமே புரியவில்லை.

வேகமாக காரை ஓட்டிச் சென்றவனின் விழிகளுக்குள் தீவிரம் தெரிய.. அவளிடம் எதுவும் கூறவுமில்லை; திரும்பிப் பார்க்கவுமில்லை.

ஒரு ஹோட்டலின் அருகே சென்று, காரை 'சடன் பிரேக்' போட்டு க்றீச்சென்று நிறுத்தினான்.

"எனக்கு இப்போ ஒரு உண்மை வேணும்! நேத்து.. நீ இந்த ஹோட்டலுக்கு வந்திருந்தே.. இல்லையா?" இடியாய் முழங்கினான்.

அவளோ புரியாமல் நிமிர்ந்தாள்.

"போச்சுடா... திரும்பவும் உங்க ஃப்ரெண்ட்ஸா? ஏன் ப்ரத்யு... அவங்களுக்கு வேற வேலையே இல்லையா?" சிணுங்கலாகக் கேட்டாள்.

"இல்லை.. நானே உன்னைப் பார்த்தேன்!"

குரலில் கோபம் தெரிந்தாலும், தெளிவாகவே கூறினான்.

JUN 12 2010

அவள் அதிர்ந்து நிமிரும்போதே.

"அதுவும் தனியா இல்லை.. இன்னொருத்தனோட பார்த்தேன்! ரொம்ப நெருக்கமா, கேண்டில் லைட் டின்னர்லே.. அந்த மெல்லிய விளக்கொளியில் நீயும் அவனும் இழைஞ்சது... சீ! நினைச்சாலே ரொம்ப அருவெறுப்பா இருக்கு" புலியாய் உறுமினான்.

"என்ன சொல்றீங்க? சத்தியமா நான் எங்கேயும் போகலை? நீங்களா இப்படிப் பேசறீங்க, ப்ரத்யு?" விதிர்த்துப் போய்ப் பதறினாள் பவித்ரா.

"ஏய்... அப்படிக் கூப்பிடாதே! மனசு முழுக்க விஷமா.. ஒரே நேரத்துல ரெண்டு பேர்கிட்டே டபுள் கேம் ஆடிட்டு, பொய் சொல்லாதே!" அவன் வார்த்தையில் திராவகச் சிதறல்கள்!

"நான் பொய் சொல்லலை... நீங்கதான்! இப்பதானே தெரியுது. உங்க பணக்கார புத்தி... கொஞ்ச நாள் பழகிட்டு, அலுத்துப் போன உடனே பெண்களைக் கழட்டி விடற கேவலமான புத்தி!"

கண்ணீருடன் கூறிவிட்டு, அவள் வெளிப்புறம் திரும்பியபோது, அவளை வேகமாகப் பற்றித் திருப்பினான் ப்ரணேஷ்.

"என்ன... இப்படி அழுதா என்னை மாத்திடலாம்னு பாத்தியா? உன்னை அவனோட நெருக்கமாப் பாத்த அந்த நிமிஷமே என் மனசு வறண்டு போய் விரிசல் விட்டு, நாசமாப் போச்சு!"

வார்த்தைகள் அக்னித் திவலைகளாய் பரவின.

காயம்பட்ட விழிகளுடன் நிமிர்ந்தவளை கவனிக்காமலேயே, அவன் தொடர்ந்தான்.



"பணக்காரனாகப் பார்த்து வலை விரிக்கிறது. அப்பறம் அதைவிட வசதியானவனாகக் கிடைச்சா அப்படியே அட்டையா ஒட்டிக்கிறது... சே!"

அவன் வார்த்தைகள் சாட்டையடியாய் சுழன்றன.. இதயத்தை ரணமாக்கின.

ஒரு நொடியில் நிலைகுலைந்து போனவளின் மனம், தீயாய் தகிக்க ஆரம்பித்தது.

இன்னும் சிறிது நேரத்தில் தன் இதயம் வெடித்துச் சிதறி விடுமோ என்ற பயத்தில், விழிகள் நீர்த் துளிகளைச் சுமந்தன.

"நான்..." என்று ஆரம்பிக்கும்போதே, அவளை வேகமாகக் கையமர்த்தினான் அவன்.

"இனியும் என்னை ஏமாத்த முடியாது. ஹூம்... பவித்ரா... உங்கம்மாவால எப்படி இது மாதிரி பொருத்தமே இல்லாத பேரா உனக்கு வைக்க முடிஞ்சது! சே.. நான் எதிலயுமே ரொம்ப 'ஷார்ப்'னு எல்லாரும் சொல்வாங்க!

"உன் விஷயத்தில மட்டும் எப்படி ஏமாந்தேன்னு நேத்திலருந்து மனசு உறுத்துது! காதலுக்குக் கண் இருக்கோ, இல்லையோ, அறிவு மட்டும் இல்லாமப் போயிடும் போலிருக்கு!" என்றவனின் குரலில், கோபமே அதிகமாய்!

அவளும் வேகமாகத் திரும்பினாள்.

"நான் அந்த மாதிரிப் பொண்ணில்லேன்னு இப்ப சொன்னா நீங்க நம்பப் போறதில்லை! ஆனா, ஒரு நாள் உங்களுக்கு என்னைப் பத்திப் புரியும்.. அப்ப நிச்சயம் வருத்தப்படுவீங்க. ஆனா, காலம் கடந்திருக்கும்!"

சட்டென்று உடைந்தது அவ[illegible]!

JUN 12 2010

"இல்லை! வருத்தப்படமாட்டேன்... நேத்து உன்னை அவனோட பார்த்ததை விடவா? என் மனசு அந்த நொடியே ரெண்டா உடைஞ்சது தெரியுமா உனக்கு? இந்த நிமிஷம்தான். என் வாழ்நாளிலே நான் உன்னைப் பாக்கற கடைசி நிமிஷமா இருக்கணும்!

"தயவு செஞ்சு என் முன்னால வராதே! என்னை அறியாம ஏதாவது செஞ்சி கொலைகாரன்ற பழிக்கு ஆளாயிடப் போறேன். கெட் லாஸ்ட்!'' என்று கர்ஜித்தவன், அவள் இறங்கியதும், காரை வேகமாக ஓட்டிச் சென்றான்.

தூரத்தில், பளீரென்று வெட்டிய மின்னல் இடியாய் இறங்கி, தன்னைச் சிதைத்ததைப் போல் உணர்ந்தாள் அவள்.

ப்ரனேஷின் கார் தூரப்புள்ளியாய் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த பவிக்கு, கண்ணீர் மறைத்து அவன் கோப உருவை நெஞ்சுக்குள் கலங்கலாய் சமர்ப்பித்தது.

அந்தக் கணமே, உலகமே இருண்டதைப் போல் ஒரு உணர்வு!

தென்றலைப் போல் தன் வாழ்வில் வந்தவன், இன்று ...லாய் மாறி சேதங்களை ஏற்படுத்திவிட்டுச் சென் ...றது. அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவனிடமிருந்து சிதறிய ஒவ்வொரு வார்த்தைகளும், ...க விழுந்து அக்னி வளையமாய் சுழன்று, அவளைத் ...ளிக்கச் செய்தன.

...றுந்த மரம் போல் சரிந்து, அருகிலிருந்த நடை ...யில் அமர்ந்தாள் அவள்.



மனம் சூனியமாகிப் போக, தன்னை சமாளித்துக் கொண்டு ஒரு ஆட்டோவில் ஏறி வீடு வந்தவளை, பயந்து போய் அரவணைத்தார் அவளுடைய அம்மா குழலி!

அவரிடம் வயிற்று வலியென்று பொய் சொல்லி விட்டு, தன் அறைக்குள் சென்று படுத்தவளுக்கு, அழுதழுது காய்ச்சலே வந்துவிட்டது.

பணக்காரர்களே இப்படித்தானோ என்ற வெறுப்பும் வந்து மனதைக் கசக்கிப் பிழிந்தது.

மலருக்கு மலர் தாவுகின்ற வண்டாய், வேறு பெண் கிடைக்கும் வரை ஒருத்தியைக் காதலிப்பது போல் நடித்து விட்டு, பிறகு பொய் கூறி தப்பித்து விடுவதுதான் அவர்களின் தந்திரமோ என்றும் உள்ளம் கசந்தது.

ஒருவேளை, ப்ரனேஷ் தன் அப்பாவிடம் பேசியபோது, அவர் ஒரு நடுத்தர வர்க்கத்துப் பெண்ணை மருமகளாக ஏற்க மறுத்ததுதான், அவனுடைய இந்த விசித்திரமான போக்குக்கு காரணமோ என்றும் பரிந்து வந்தது இதயம்!

அவரை மீறவும் முடியாமல், விட்டுக் கொடுக்கவும் இயலாமல், தன் மீதே பழி சொல்லிப் பிரிந்து சென்று விடுவதுதான் வழியென்று, அவன் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி இருக்க வேண்டும் என்று இறுதியாக உணர்ந்தாள் அவள்.

ஆனால், இதயம் நிறைந்த நேசத்தை சுமந்திருந்த அந்தப் பெண்மை, காதலின் உயிர் வலியை.. அது ...ரோடு பிடுங்கப்பட்ட தருணத்தில்தான், வெகுவாய் ...மெங்கும் அனுபவித்தது.

JUN 12 2010

கடந்த கால நினைவலைகள் அவளை நிகழ்காலக் கரையில் ஒதுக்க, கண் விழித்தால் இரு கன்னங்களிலும் நீர் அருவி!

பழைய ஞாபகங்களின் இழைகள்தான் எவ்வளவு வலுவானவை என்று தோன்ற, அவனுடைய நினைவுகளின் தாக்கம்... இன்றும் தன்னுள் ஆழமாய் இருப்பது பெரும் வேதனையை விதைப்பதாய்..!

இதிலிருந்து, தான் என்றுமே விடுபட முடியாதா என்கிற பெரும் பரிதவிப்பும் கூடவே வந்தது.

நித்திரை எண்ணத் திரைகளால் தள்ளுபடி செய்யப்பட மனதில் தோரணங்களாய் பழைய ஞாபகங்கள்!

''உன் வாழ்க்கை முழுவதும் ஒருவரையே நேசிப்பது.. நீ வாழும் வரை எரிந்து ஒளி தரும் மெழுகு வர்த்தியைப் போல் உயர்ந்தது..'' என்ற பொன்னான வரிகள், உடனே நினைவுகளில் தடம் பதித்தன.

நதி வறண்டாலும், பழைய வெள்ளப் பெருக்கின் சுவடை விடாது பதித்திருப்பது போல, அவள் மனதில் காதல் வறண்டாலும், அதன் தடங்கள் ஊற்றாய்!

அன்று, உறக்கம் மறுக்கப்பட்டு, விழிகள் சோர்ந்திருக்கும் வரை விழித்திருந்தாள் பவித்ரா.

எவ்வளவுதான் படித்திருந்தாலும், புத்திசாலித்தனமானவராக இருந்தாலும், காதல் மட்டும் ஒரு பெண்ணை மிகவும் பலவீனப்படுத்தி விடும் என்பதை, இன்று உணர்ந்தாள் அவள்.

அவனருகில்... அவனுடைய ஆதிக்கத்தின்கீழ் வேலை செய்தாக வேண்டிய கட்டாயம், உள்ளத்தை உலுக்க,




தவிப்புடன் உறங்க ஆரம்பித்தவளை, எதிர்காலம் கனவுகளுடன் வரவேற்றது.

அந்த ஸ்வப்னங்கள்... அவளுடைய எதிர்காலத்தை அன்னச் சிறகாய் வருடியதா.. தீக்கனலுடன் தகிக்கச் செய்ததா என்பது புரியாத புதிர்தான்!



# 6



மறுநாளைய விடியல் சோம்பலாக உசுப்பி எழுப்ப, சுவாரசியமின்றி எழுந்தாள் பவித்ரா.

மெதுவாக எழுந்து கிளம்பி காரில் சென்றபோது, வழியெல்லாம் நெஞ்சம் ப்ரனேஷின் நினைவுகளையே நேசத்துடன் சுமந்தன.

மறக்க முடியாத மனதோரக் கவிதையாய், ஒளிந்திருந்த காதல் உயிர்த்தெழுவதாய்!

'முன்பு சேதப்படுத்திவிட்டுச் சென்ற என் இதயத்தை இன்று செப்பனிட்டுத் தரமாட்டாயா?' என்று அவனிடம் கேட்க வேண்டும் போல்!

காரிலிருந்து இறங்கியதுமே, அவளுக்கும் முன்பே, ப்ரனேஷ் 'சைட்'டுக்கு வந்து விட்டது தெரிந்தது.

வாசலில் அவளைக் கண்டதுமே, கவனிக்காதவன் போல அவன் உள்ளே செல்ல... பின்புறம் சென்று நீச்சல் குளத்துக்காக அணி வகுத்திருந்த வேலைகளைப் பார்த்துவிட்டு, பின் உள்ளே சென்றாள் பவித்ரா.

JUN 12 2010

ஒவ்வொரு அறையிலும் குளியலறை அமைக்க இடங்களைக் குறித்துக் கொண்டிருந்த சதீஷும் சூபர்வைசரும் அவளைக் கண்டதும் நட்பாக புன்னகைத்து 'காலை வாழ்த்து' சொல்ல, இதயம் இதமாய் மலர்ந்தது.

வாடிய பயிர் செழிக்க நீரின் தேவையைப்போல, சோர்ந்த மனம் உயிர்க்க, அன்புக் கரங்களின் தேவையை உணர்ந்தது இதயம்!

அன்று பிரனேஷுடனான பேச்சும், கவனமும் வேலை சம்மந்தமாகவே தொடர்ந்தாலும், ஏதோ ஒரு நூலிழை.. பிரியாத பந்தமாய் இருவரையும் பிணைத்திருந்தது. அதே சமயம், தூர விலக்கியும் நிறுத்தியிருந்தது.

தூரத்து கானல் நீராய்... ப்ரனேஷ் அவளுடைய காதல் தாகத்தை தூண்டிவிட்டுக் கொண்டிருந்தான்.

மறுவாரத்திலிருந்து, 'சைட்'டில் வேலைகள் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தன.

உள்ளே ரிப்பேர் வேலைகளும், கட்டுமானப் பணிகளும் முதலில் ஆரம்பிக்க, லிப்ஃடுக்கான வேலை மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

வெளியே தோட்டம் அமைக்கின்ற வேலையை, 'லேண்ட்ஸ்கேப்பிங்' யூனிட்டிலிருந்து வந்திருந்த ஆட்கள் செய்ய ஆரம்பித்தனர்.

ஒருபுறம் மூங்கில் குடில்களுக்கான பணிகளும் நடக்க ஈசான்ய மூலையில் போர்வெல் போட்டு முடித்திருந்தனர்.

கட்டுமானப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான இடம் தேவைப்பட்டதால், சிறுவர்களுக்கான 'ப்ளே ஏரியா' வேலைகளை மட்டும் கடைசியாக செய்து கொள்ளலாம் என்று திட்டமிட்டிருந்தனர்.



இப்போது பவித்ராவுக்கு உதவியாக சீதாவும் வந்து விட்டாள்.

அவள் எப்போதுமே உடனிருந்ததால், ப்ரனேஷின் கடுசொற்களிலிருந்து சுலபமாகத் தப்பிக்க முடிந்தது.

அன்றும், அதேபோல் எல்லா இடங்களையும் மேற்பார்வையிட்டபடி நடந்து கொண்டிருந்தாள் பவித்ரா.

திடீரென்று, பின்புறம் வேகமான காலடியோசை, அழுத்தமாக ஒலிப்பது கேட்டுத் திரும்பினால்.. ப்ரனேஷ் தான் வந்து கொண்டிருந்தான்.

அவளருகில் வந்தவுடன், "வேலை முடியறதுக்கு, எப்படியும் ஏழெட்டு மாசமாவது ஆகுமில்லையா?" என்றான் கேள்வியாக.

திடீரென்று ஏன் இப்படிக் கேட்கிறான் என்பது போல், யோசனையுடனும் எச்சரிக்கையுடனும் நிமிர்ந்தாள் பவி.

"எதுக்குக் கேக்கறேன்னு பாக்கறியா? என்னோட பேச்சுலர் லைஃபை சீக்கிரமே முடிச்சுக்கலாம்னு இருக்கேன்! அநேகமா, என் மேரேஜ், இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளே நடக்கலாம்!"

கண்ணோரங்கள் சுருங்க அவளையே கூர்ந்தபடி சொன்னான்.

இப்போதெல்லாம், யோகா, தியானம் மூலமாக உணர்வுகளை அடக்கப் பழகியிருந்தாலும், அவளை அறியாமலே, வேக மூச்சொன்று பலமாய் வெளியேறியது.

"என்ன?"

"ஒண்ணுமில்லை.. கங்கிராட்ஸ்!"

JUN 12 2010

இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவதைப் போல் ஒரு வலி எழுந்தாலும், முகத்தை உடனே சீர்ப்படுத்தி மெலிந்த குரலில் மொழிந்தாள்.

"ம்.. தேங்க்ஸ்! அதுக்குள்ளே தயாராயிடும் இல்லையா? என்னா.. என் ஹனிமூனை, நான் இங்கே தான் செலிப்ரேட் பண்ணலாம்னு இருக்கேன்..."

"ஓ..."

"அப்புறம்.. ஒரு விஷயம். என் கல்யாணம் முடிவானதும் அதை முதல்லே உன்கிட்டே தான் நான் சொல்லுவேன்..." என்றபோது, அவன் குரலில் புரியாத ஒரு பாவனை!

அவள் மனம் மரத்துப் போய், விழிகள் தூரப்பார்வை பார்க்கும்போதே, அவன் குரல் தொடர்ந்தது.

இவன் வேண்டுமென்றே தன்னை வதைக்கிறான் என்று புரிந்ததால், மௌனமாகவே செவிமடுத்தாள்.

"மேல் மாடியில் இருக்கிற அந்த ரெண்டு ரூமையும், என்னோட ப்ரைவேட் ஸூட்டா மாத்தணும்... ரூஃப் கார்டனுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இருக்கக் கூடாது. ரெண்டு லிஃப்ட் தவிர, எங்களுக்குன்னு ப்ரைவேட்டா ஒரு லிஃப்ட் அமைக்கலாம்னு புதுசா ஒரு ப்ளான்! அது பத்தி கொஞ்சம் பேசணும்.. என்கூட மாடிக்கு வர முடியுமா?"

"ஓகே சார்..." முகமறியாத யாரிடமோ பேசுவது போல், உணர்ச்சியின்றி பதிலளித்துவிட்டு அவனைப் பின் தொடர்ந்தாள் பவி.

முதல் மாடிக்குச் சென்றதும் அவர்களுடன் வந்து இணைந்து கொண்ட சீதாவைக் கண்டதும், "அப்பாடா..." என நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

ஆனால், உடனே அதை ஓரக் கண்ணால் கவனித்து விட்டான் அவன்.



நிஷாகந்திப் பூவின் மலர்வாய் ஒரு கணம் கூட அந்த நிம்மதி நீடிக்கவில்லை.

"மிஸ் சீதா.. நானும் பவித்ராவும், என் ப்ரைவேட் ஸூட் பத்தி டிஸ்கஸ் பண்ணப் போறோம்.. நீங்க பின்புறம் நடக்கற வேலைகளைப் பார்த்தா யூஸ்ஃபுல்லா இருக்கும்."

அவன் இதழ்களில்... பொருள் பொதிந்த ஒரு கள்ளச் சிரிப்பு!

"ஓகே சார்.. நான் கீழே போறேன். வரேன் மேடம்.."

அவன் கட்டளையால் திரும்பிச் செல்லும் சீதாவைப் பார்த்தபோது, இவன் பிடிவாதத்துடன் தான் நினைத்ததைச் சாதிப்பவன்... தன் விரல் நுனியில் அனைவரையும் இயக்குபவன் என்று தோன்றியது.

அதற்கு, தொலைந்து போன தன் காதலே கண் முன் சாட்சியாய்!

தலையைக் குலுக்கி, பழைய நினைவுகளை தூர விலக்கி நிறுத்தியவளின் பார்வைத் தாமரை மட்டும் அவன் மீது மலர்ந்திருக்க, மனம் எதிலும் ஒட்டாமல்.. தாமரை இலைத் தண்ணீராய் தனித்து இருந்தது!

மாடியிலிருந்த அறைக்குள் நுழைந்தவன், அவளிடம் திரும்பினான்.

"இந்த ரூமுக்கு என்ன கலர் செலக்ட் பண்ணலாம்? ஹனிமூன்கறதாலே கண்ணுக்குக் குளிர்ச்சியா.. அழகான கலரா இருக்கணும்.." என்றான் ஒரு மாதிரி குரலில்.

தன் உணர்ச்சிகளை மறைத்தபடி, "எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் 'லைட் ப்ளூ' நல்லாருக்கும் சார்!" என்றாள் பவி.

சட்டென்று திரும்பி, ''ஒரு நிமிஷம்! 'எனக்குத் தெரிஞ்சவரைக்கும்'னா.. அதுவும் ஹனிமூனைப் பத்தி! ம்.. எது வரைக்கும் தெரியும் அப்படின்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' குத்தலாக வந்தது அவன் குரல்.

''ஷட்டப்! மரியாதையா பேசுங்க!''

எந்த நேரத்திலும் தன் சுயமரியாதையை மட்டும் விட்டுக் கொடுக்க முடியாதென்ற தொனியில் சீறினாள் பவி.

''ஏய்! உனக்கான மரியாதையை சரியாத்தான் கொடுக்கறேன். ஏன்னா, உன்னோட தகுதி எனக்குத் தெரியும்'' என்றான் அழுத்தமாக!

''என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? தன்னைப் பத்தியே சரியா புரிஞ்சுக்காதவரு நீங்க!''

சீற்றத்துடன் அவள் கூற, ''எனக்கு என்னைப் பத்தித் தெரியும். உன்னையும் நல்லாத் தெரியும். நம்ப வச்சுக் கழுத்தறுக்கறவ நீன்னு தெரியும்!'' ஏளனக் குரலில் கூறினான் அவன்.

''போதும்... அது நீங்கதான்! இது மாதிரிப் பேசறதா இருந்தா, நான் போய் சதீஷை அனுப்பறேன் சார்...!''

அவள் திரும்பும்போதே, இடைமறித்துத் தடுத்தான் அவன். இப்போது அவன் குரல் சற்றுத் தணிந்திருந்தது.

''சரி! இந்த ரூமுக்கான வால் கலர், டைல்ஸ், கர்ட்டன்ஸ்... எல்லாமே லைட் ப்ளூவிலேயே இருக்கட்டும்!'' - முடிவாகக் கூறினான்.

தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணை, அவன் நிஜமாகவே தேர்ந்தெடுத்து விட்டானோ என்ற வினா மேலெழும்பி வந்து தொண்டை[illegible] அடைத்தது.



விரக்திப் பூக்கள் மனமெங்கும் மொட்டு விட்டு, வேதனையாய் மலர்ந்தன.

அன்றிரவு.. உறக்கம் வராமல் விழித்திருந்தபொழுது, மனதில் வேர்ப்பிடித்திருந்த மாறா நேசம், சீனப் பெருஞ்சுவராய்!

'என் வாழ்விலும், திருமணம், குழந்தை என்கிற பொன் வசந்தங்கள் வருமோ!' என்ற விடை தெரியாத கேள்வியுடன் உறங்க முயற்சித்தாள் பவித்ரா.

மறுநாள், கிராமத்திலிருக்கும் பெரியப்பா கந்தவேலுவின் வீட்டுக்குச் சென்றிருந்தாள் அவள்.

பெரியம்மா அவ்வளவு ஒட்டுதலோடு பழகாததால், அவள் ஒரு மரியாதைக்குச் சென்று வருவதோடு சரி!

அன்று, கந்தவேலு அவளை வாஞ்சையுடன் வரவேற்றார்.

''ஏன் பவி... வேலை ஆரம்பிச்சப்ப வந்தே... அப்புறம் வரவே இல்லை! பெரியப்பாவை மறந்துட்டியாம்மா... இன்னிக்கு நீ சாப்பிட்டுட்டுத்தான் போகணும்!'' வற்புறுத்தி தங்க வைத்தார்.

மறுக்க முடியாமல் அமர்ந்திருந்தவளிடம், பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

பெரும் உற்சாகம் தெரிந்தது அவரிடம்!

பெரியம்மா, அவளை 'வா'வென்று அழைத்து விட்டு உள்ளே சென்றதோடு சரி... பிறகு எட்டியும் பார்க்கவில்லை.

இந்த முரண்பாடு மனதை உறுத்த, ''பெரியப்பா.. நான் கிளம்பறேன்.. பாவம் பெரியம்மா! அவங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?'' தர்ம சங்கடமும் தவிப்புமாய் எழுந்தாள்.



JUN 12 2010

உடனே, உள்ளேயிருந்து குரல் மட்டும் வந்தது.

“ஒண்ணும் கஷ்டமில்லை.... நீ சாப்பிட்டப்புறமே போகலாம். பெரியவங்க செஞ்சதுக்கெல்லாம்.. நீ பாவம் என்ன பண்ணுவே?” பெரியம்மா ஆதங்கத்துடன் கூறினாள்.

புரியாமல் விழித்தவளை கந்தவேலுதான் சமாதானப் படுத்தினார்.

“ப்ச்... அவளை விடும்மா! ஏதாவது உளறிட்டிருப்பா..! உன் வேலை எவ்வளவு தூரத்தில் இருக்கு?”

“ம்... நல்லா நடந்திட்டிருக்கு பெரியப்பா. வந்துதான் பாருங்களேன்.”

“எனக்கென்னவோ, அங்கே வரவே பிடிக்கலைடா! உன்னைப் பார்க்க வரணும்னு நினைப்பேன். ஆனா, மனசு கேக்காது!

“அந்த வீட்டிலேயே பிறந்து வளர்ந்துட்டு, இப்போ அதை வேற யாருக்கோ தாரை வார்த்துட்டு நிக்கிறதை நினைச்சா, அடிவயிறே கலங்கிடும்!” என்றார் பெருமூச்சுடன்.

அவர் விழிகளில் தெரிந்த ஈரம் மனதை நனைத்துவிட, அவருடைய உணர்வுகள் புரிந்து, இதயம் சட்டென்று கனத்துப் போனது.

“எனக்குக்கூட கஷ்டமாத்தான் இருக்கு பெரியப்பா! என்ன பண்றது! ஆனா, நான் காலேஜ் படிக்கும் போதிலருந்து, நம்ம பங்களாவை இது மாதிரி மாத்தணும்னு ஒரு கனவே இருந்தது.

“நாம வாங்க முடியாட்டாலும், அந்த ப்ராஜெக்டாவது எனக்குக் கிடைச்சதேன்னு சந்தோஷப்படறேன்.” என்றாள் சிறுமுறுவலுடன்.



அவளுடைய பக்குவமும், மன முதிர்ச்சியும், சிலிர்ப்பாய் அவருக்குள் ஊடுருவின.

“அம்மாவையும், உன்னோட அழைச்சிட்டு வந்திருக்கலாமே... எங்களோட கொஞ்ச நாள் இங்கே தங்கியிருக்கலாமில்லை?

“அவ இங்கே வந்து இருபத்தஞ்சு வருஷமாகுது! கதிர் கல்யாணம் முடிஞ்சு போனவங்கதான்!”

ஆதங்கத்துடன் அவர் முடிக்கும்போதே, பெரியம்மாவின் குரல் இடைமறித்தது.

“அவ எந்த முகத்தை வச்சிக்கிட்டு இந்த ஊருக்கு வருவா?” - அவரின் குரலில் ஏதோ ஒன்று நெருடியது.

“என்ன சொல்றாங்க பெரியம்மா?” ஒன்றும் புரியாமல் கேட்டாள் பவி.

வழி மறந்த குழந்தையாய்... இதயத்துக்குள் ஒரு பரிதவிப்பு!

“அவ இப்படித்தான்... ஏதாவது உளறுவா! நீ கண்டுக்காதே. சாப்பிடலாம் வா!”

அவர் எழுந்து சென்றபோது, பின் தொடர்ந்து சாப்பிட அமர்ந்தாலும், மனதுக்குள் புரியாத பல கேள்விகள்!

சாப்பாடு சுவைக்காமல், நெஞ்சம் கசந்து போயிருந்தது.

விடை பெற்றுக் கிளம்பியும், ஏன் பெரியம்மாவுக்கு அம்மாவைப் பிடிக்கவில்லை என்ற வினா உறுத்தலாக எழுந்துவிட, அன்று முழுவதும் அதே யோசனையில் இருந்தாள் அவள்.

‘ஏதாவது சொத்து, பாகப் பிரிவினை பிரச்னையாக இருக்குமோ?’ ஏதோ ஒரு புரியாத புதிரை நோக்கித் தான் பயணிப்பதைப் போலிருந்தது.

இத்தனை வருடம் சொந்த ஊருக்கே வராத தாய், தந்தை... இப்போது தான் வருவதையும் அவர் தடுத்த தருணங்கள்..

பெரியம்மாவின் வெறுப்பு... இந்த பூர்விக மாளிகை... எல்லாவற்றுக்கும் மேலாக ப்ரனேஷின் திடீர் வரவு.. எண்ணச் சூழல்களில் மாட்டி மீளமுடியாமல் தவித்தாள் பவித்ரா.



# 7



மறுநாள் காலையில், பவித்ரா எழும்போதே, அன்று ஞாயிற்றுக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது!

பனிப்பாறையாய் இறுகி இருந்த உள்ளம் வெளிக் காற்றை சுவாசிக்க விரும்ப, எங்காவது சென்று வர வேண்டும் போல் ஒரு உணர்வு.

சுற்றுலாத் தலங்கள் மாதிரி அருகில் ஏதாவது இருந்தால் போய் வரலாமென்று சீதாவும் கூற, இருவருமே டிரைவரை அழைத்துக் கொண்டு கிளம்பினர்.

முதலில், ஆழியார் அணைக்கட்டுக்குச் சென்றபோது, சரிவில் தெரிந்த தோட்டமும், பரந்து விரிந்த ஏரியும், பவித்ராவின் மனதை ஓரளவு அமைதிப் படுத்தின.

பாலத்தின் மீது நின்று நீர்ப்பரப்பை பார்த்தபோது, காற்று குளிர்ச்சியாக பரவி தேகம் எங்கும் தீண்ட, ஏனோ மனம் பரவசமாய்! இதழ்களில் நிர்மலமாய் ஒரு மென்னகை பூத்தது!



சூரியக் கதிர்களின் வீச்சில், பெரிய நீலநிறக் கல்லொன்று ஒளிவீசி, ஒய்யாரமாய் படுத்திருப்பது போல் ஒரு பிரமை!

மனம் சிறு குழந்தையாகி இயற்கையை ரசிக்க ஆரம்பித்தது.

அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறு பிள்ளைகளைப் பார்த்தபோது, பால்ய நினைவுகள் சுகமாய் உள்ளே புகுந்தன.

அவர்களுடன் இணைந்து கைதட்டிக் குதூகலமாய் ரசித்துக் கொண்டிருந்தபோது, தன்னை யாரோ உற்றுப் பார்க்கிற உணர்வில் திடுக்கிட்டுத் திரும்பினாள் பவி.

அங்கு யாருமே இல்லையென்றாலும், ஊசியாய் உரசப்பட்ட உள்ளுணர்வுகள், வேறு மாதிரி கூறின.

சிறிது தூரத்தில் பொதுப்பணித் துறையினரின் ஆய்வு மாளிகை மட்டுமே தெரிய, அங்கும் வெளியில் யாருமே இல்லை!

மெல்ல யோசனையுடன் திரும்பிய பிறகும், முதுகில் ஆழத் துளையிடுவது போன்ற ஒரு பார்வைத் தீண்டல், அவளை விதிர்க்க வைத்தது!

உடனே, சீதாவிடம் திரும்பியவள், ''போகலாமா?'' - குரலில் ஒருவிதத் தவிப்புடன் கேட்டாள்.

திடீரென்று பவியின் முகம் மாறியிருப்பதைக் கண்ட அவளும், ''சரி மேடம்'' என்றபடி கிளம்பினாள்.

சரிவில் இறங்கும் வரை ஏதோ ஒன்று உறுத்த, தோளைக் குலுக்கியபடிச் சென்றவளுக்கு, இனி வாழ்க்கை முழுவதும் அவன் நினைவுகள் தன்னை நிழலாய்த் தொடருமோவென்ற பரிதவிப்பு!

JUN 12 2010

காதலின் வலிமை புரிந்ததால், அதை சுலபத்தில் ஒதுக்கவும் இயலவில்லை!

அங்கிருந்து, திரும்பும் வழியிலேயே ஒரு 'மெஸ்'ஸில் சாப்பிட்ட இருவரும், குரங்கு அருவிக்குச் சென்றனர்.

மலைமகளின் மடியில் சுரக்கும் நுரைத்த பால் போல, மெல்லிய சாரலாய் வழிந்து கொண்டிருந்த அருவி.. மனதையும் ரம்யமாய் நனைத்து சுகமான இதமாய்ப் பரவியது.

மாற்றுடை எடுத்து வராததால், கைகளை மட்டும் அருவியின் சிதறலில் நனைத்து, பார்வையாலேயே இருவரும் சுகமாக நனைந்தனர்.

அதே நேரம், ஆழியார் கெஸ்ட் ஹவுஸுக்கு ஒரு டெண்டர் விஷயமாக வந்திருந்த ப்ரனேஷும், பவித்ராவைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

அங்கிருந்த அதிகாரிகளிடம் பேசிவிட்டு ஓய்வெடுக்கும்போது, எதேச்சையாக ஜன்னலருகில் சென்று பார்த்தபோதுதான், அவன் பவித்ராவைப் பார்க்க நேர்ந்தது.

சிறு குழந்தையாய் குதூகலமாய் கைதட்டியபடி நின்ற அவள் தோற்றம் பழைய ஞாபகங்களைக் கிளர்ந்தெழச் செய்தன.

அவளால் மட்டுமே ரம்யமாக்க முடிந்த சில தருணங்கள் நினைவுக்கு வர, தன் இதயப் புத்தகத்தின் முதல் அச்சுப் பிழையோ அந்தக் காதல் என ஒரு சந்தேகம் வந்தது.

நெஞ்சம் எரிமலையாகி விட, தீக்குழம்பாய் ஒருவிதக் கோபம் உள்ளே பொங்கியது.



உடனே, தன் செல்லை உயிர்ப்பித்தான் அவன்!

பவித்ராவும், சீதாவும் அருவியில் இருந்து கிளம்பி வேதாத்திரி மகரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்றனர்.

அங்கு, அமைதியாய் அமர்ந்து தியானம் செய்தபோது, மனதை அடக்கி கைவசப்படுத்தும் கலையை, தியானம் மட்டுமே தருவது புரிந்தது.

நெஞ்சுக்குள்ளிருந்து, ஏதோ ஒரு பாரம் விடுபட்டுச் செல்வது போன்ற ஒரு தெளிவு நிலை கைவசப்பட்டு, பிரமிப்பை ஏற்படுத்தியது.

பிறகு, அங்கிருந்து கிளம்பி இருவரும் கெஸ்ட் ஹவுஸுக்கு வரும்போது மாலையாகியிருந்தது.

அங்கிருந்த கேர்டேக்கர், பவிக்கு இரண்டு முறை போன் வந்ததாகக் கூறி, அந்த எண்ணைக் கொடுத்தார்.

அது ப்ரனேஷின் செல் நம்பர் என்பது புரிய, 'இன்று அவன் ஏன் அழைத்தான்?' என்ற யோசனையுடன் உள்ளே சென்றாள்.

ஓய்வு நாளிலும், அவனுடன் வார்த்தைகளால் போராட விருப்பமின்றி, உடை மாற்றி வந்து, வாக் மேனில் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தாள்.

**'அரபு நாடே அசந்து நிற்கும் அழகியா நீ..**

**உருதுக்கவிஞன் உமர்கய்யாமின் கவிதையா நீ..!'**

இசையில் சுகமாய் லயித்து தன்னை மறந்து அமர்ந்திருந்தவளை, போன் வந்திருக்கிறதென்று உசுப்பி அழைத்தாள் சீதா!

ஹாலுக்குச் சென்று ரிசீவரை எடுத்து ''ஹலோ... ஐ'யம் பவி ஹியர்'' இயல்பாக மொழிந்தவளுக்கு, ப்ரனேஷின் அழைப்பே மறந்திருந்தது.

JUN 12 2010

''நான் போன் பண்ணினேனே. யாரும் சொல்லலையா? இல்லை.. பதிலுக்கு போன் பண்ணணும்கிற கர்ட்டஸி உனக்கு மறந்துடுச்சா?'' அவன் குரல் இரும்பாய்!

''ஸாரி சார்! நாங்க வெளியே போயிட்டு இப்பதான் வந்தோம். சொல்லுங்க, என்ன விஷயம்?''

பொறுமையை இழுத்துப் பிடித்தபடி வினவினாள்.

''மதியமே அங்கேருந்து கிளம்பிட்டே?''

அவன் கேள்வியில் தொக்கி நின்ற அர்த்தம் புரிந்து, ஒருவித எச்சரிக்கை உணர்வு உள்ளே பரவியது!

உடனே, அவன் லைனில் இருப்பது நினைவு வர, ''எங்கேயிருந்து சார்?'' மெதுவாகக் கேட்டாள்.

''ம்.. நான் போற இடத்துக்கெல்லாம் என்னை இம்ப்ரெஸ் பண்றதுக்காகவே தொடர்ந்து வந்து ஆட்டம் போட்டுட்டு... எங்கேன்னு தெரியாத மாதிரி கேக்கறே?'' நக்கல் நெடியுடன் வார்த்தைகள் வந்தன.

''ஒரு நிமிஷம்... எனக்குப் புரியலை!''

''எனக்கு எல்லாம் புரிஞ்சிடுச்சே! ஒரு டெண்டர் விஷயமா, இன்னிக்கு நான் ஆழியார் கெஸ்ட் ஹவுஸுக்குப் போறேன்னு தெரிஞ்சுதானே, நீயும் அங்கே வந்தே! அதுக்கப்புறம்... எங்கே... யாரைத் தேடிப் போனேனு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''சார்... போதும்! உங்ககிட்டே நான் வேலை செஞ்சாலும், பேசறதுக்கு ஒரு எல்லை இருக்கு! உங்க பின்னாடியே வர்றதுக்கு, நான் ஒண்ணும் உங்க 'ப்ளாக் கேட்' இல்லை!''

''தெரியும்.. நீ ஒரு 'ப்ளாக் ஷீப்'னு எனக்கு நல்லாவே தெரியும்!'' குரூரமாய் சொற்களைச் சிதற விட்டான்.



காதல் மனமென்னும் கண்ணாடியை அவனுடைய வார்த்தைகள் கல்லெறிந்து சிதைக்க, அவளுக்குள் அதுவரை இருந்த இதம் தொலைந்து போனது!

''அதோட, இன்னொண்ணையும் தெரிஞ்சிக்கங்க சார்! ஹூம், இன்னிக்கு நீங்க போறது மட்டும் எனக்குத் தெரிஞ்சிருந்தா, அங்கேருந்து எவ்வளவு தூரம் விலகிப் போக முடியுமோ, போயிருப்பேன்.''

''ஓ! எவ்வளவு தூரம்? கோயம்புத்தூருக்கு.. உன் பழைய காதலனைத் தேடியா? நீ சொல்றதை எல்லாம் நம்பச் சொல்றியா?'' ஏளனத்துடன் கேட்டான்.

தன்னைச் சுற்றி, ஏதோ ஒருவித அக்னி ஜ்வாலை வலம் வருவதைப் போல் உணர்வுகள் தகித்தன.

''இனிமே, பர்சனல் மேட்டர் எதுவும் வேணாம்னு நினைக்கிறேன்.. எதுக்கு சார் கூப்பிட்டீங்க?'' இறுகிய குரலில் வினவினாள் பவி!

''ஆமாம்.. மறந்திட்டேன் பாரு! பர்சனலாய் பேசத் தகுதியில்லாத ஒருத்திகிட்டே அப்படிப் பேசினது தப்புத்தான்!''

நக்கலாகக் கூறியவன், மறுநாள் செய்ய வேண்டிய வேலையை நினைவுபடுத்தி விட்டு, பட்டென்று வைத்தான்.

பிறகு தொடர்ந்த நாட்களில் வேலைகள் முழு வேகத்துடன் நடந்தன.

வேலையைப் போலவே, ப்ரனேஷின் சுடுகின்ற பார்வைகளும், குத்தல் பேச்சுக்களும் தொடர்ந்தன!

அவளுடைய 'பாஸ்' ரத்தினம், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பொள்ளாச்சிக்கு வந்து, நடந்து

JUN 12 2010

முடிந்திருக்கும் வேலைகளை மேற்பார்வையிட்டு விட்டுச் சென்றார்.

பவித்ரா கவனித்துக் கொள்வதால், தான் அங்கு நிம்மதியாக இருப்பதாக அவர் கூறியபோது, நெஞ்சம் நெகிழ்ந்து போனது அவளுக்கு!

ஒரு நாள் காலையில், பங்களாவுக்கு சென்றபோது, சூபர்வைசர் அவளைத் தேடி வந்தார்.

"நீங்க சொன்ன மாதிரி, அந்த சாண்டிலியர், லஸ்தர் விளக்கெல்லாம் சுத்தம் பண்ணியாச்சு, மேடம்!" என்றார்.

அந்த அறைக்குள் சென்றவள், மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கும்படி அமைக்கப்பட்ட இடத்தில், அதை மாற்றி மின் விளக்குகளைப் பொருத்தும்படி எலக்ட்ரீஷியனிடம் பேசிக் கொண்டு இருந்தபோதுதான், ப்ரனேஷ் வருவது தெரிந்தது!

வரும்போதே, தன் கூர்மையான பார்வையால் அவளையே ஊடுருவியபடி வந்தான்.

"ஒரு நிமிஷம் மாடிக்கு வர முடியுமா? அங்கே செய்ய வேண்டிய சில மாற்றங்களைப் பத்திப் பேசணும்!"

அவன் அழைக்க, மறுக்க முடியாமல் மௌனமாய்ப் பின் தொடர்ந்தாள் பவித்ரா.

இன்று, இவனுடைய நாள்காட்டியில் என்ன பழிச் சொற்கள் மீதமிருக்கிறதோ என்ற பெருமூச்சு, அனலாய் வெளிவந்தது.

வலம்புரிச் சங்கின் நுழைவாயிலில் கேட்கும் 'ஓ..' வென்ற ஏகாந்த இரைச்சல்... அவள் மனதிலும்!

பங்களாவின் இரண்டாவது மாடியிலிருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றான் ப்ரனேஷ்!



அங்கிருந்த இரு அறைகளில் ஒன்று, பாதி தடுக்கப் பட்டு இப்போது குளியலறையாக மாறியிருந்தது.

அங்கு நுழைந்ததும், "இதில் ஒரு 'பாத் டப்' வேணும்னு கேட்டிருந்தேனே... கொஞ்சம் பெரிசா இருந்தா பரவாயில்லை!" என்றான் ஒரு மாதிரி குரலில்!

அவன் வார்த்தைகள் கூரிய அம்பாய்... அர்த்தம் பொதிந்ததாய்!

உடனே, அதன் பொருள் புரிந்து விதிர்த்துப் போய், "ப்ச்" என்றபடி திரும்பியவளை, இரும்பாய்த் தடுத்தது அவன் கரம்!

"ஏன்.. உனக்கென்ன அதில் அவ்வளவு கஷ்டம்? என் மனைவியோட நான் மகிழ்ச்சியா கழிக்கப் போற தருணங்கள் அது! அதுக்கு ஏன் நீ முகம் திருப்பிக்கறே?"

கூர்மையுடன் கேட்டவனின் விழிகள், மெல்ல உயர்ந்து அவளையே ஆழ்ந்து நோக்கின.

பிறகு தோளைக் குலுக்கியபடி திரும்பி அவன் முன்னால் செல்ல... மௌனக் கோபத்துடன் பின் தொடர்ந்தாள்.

செல்லும் வழியிலேயே அந்த அறையில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் தனி லிஃப்டின் தேவையைப் பற்றியும் கூறியவன், ஏதோ நினைவு வந்தாற் போல அவள் பக்கம் திரும்பினான்.

"மிஸ்... பவித்ரா! கீழ் அறையில் ஒரு பழைய ரோஸ் வுட் கட்டில் பெரிசா... பாத்தேன்!

"அதையே நல்லா பாலிஷ் பண்ணி என் பெட்ரூமுக்கு உபயோகப்படுத்தலாம்னு [illegible] அது... உங்க குடும்பத்துல ஆகி வந்த கட்[illegible] இல்ல[illegible]

JUN 12 2010

அவன், குரலில் புரியாத ஏதோ ஒரு செய்தி!

ஆனால், உடனே புரிந்து கொண்ட அவள் மனதின் உயிர்வலி, ஒரு கணம் கண்களில் கசிவதாய்..!

மறுநொடியே அதை மறைத்தவள், ''ஓகே சார்!'' என்று கூறிவிட்டு அவன் மேலே பேச ஆரம்பிப்பதற்குள், வேகமாகக் கீழே இறங்கிச் சென்றபோது, எதிரே மேனேஜர் வந்து கொண்டிருந்தார்.

''நேத்து, எல்லா இடத்தையும் நீங்க சொன்ன மாதிரியே போட்டோ எடுத்திட்டேம்மா! நானே டெவலப் பண்ணக் குடுத்திடவா?'' என்றபடி இரண்டு ஃபிலிம் ரோல்களை அவளிடம் கொடுத்தார்.

''இல்லை! கெஸ்ட் ஹவுஸுக்கு போற வழியில் ஒரு ஸ்டூடியோவைப் பார்த்தேன்! குடுங்க... நானே குடுத்திடறேன்.''

சிறு முறுவலுடன் கூறியபடி, தன் கைப்பையில் அவற்றை பத்திரப்படுத்தினாள் பவி!

'சைட்'டில் பாதிக்கும் மேல் வேலைகள் முடித்திருந்ததால், எல்லாவற்றையும் போட்டோ எடுத்து, தனது 'பாஸ்' ...ரத்தினத்திற்கு கூரியரில் அனுப்ப ஏற்பாடு செய்திருந்தாள்.

அன்று மாலை வரையிலும், ப்ரனேஷ் அவளருகி...லேயே வராவிட்டாலும், கவனம் மட்டும் அவளிடமே ...பதிந்திருந்தது!

அவளும் அதை உணர்ந்திருந்தாலும், தன் நேசப் ...க்களை தினமும் மாலையாக்குவதும், ஆனால் எத்தனை ...றை தொடுத்தாலும், அவன் தோள் சேர அது மறுப் ...், புரிந்தது.



மாலையில், கெஸ்ட் ஹவுசிற்குச் செல்லும்போது, வழியில் இருந்த போட்டோ ஸ்டூடியோவில் காரை நிறுத்தச் சொல்லி இறங்கியவள், மெதுவாக உள்ளே சென்றாள்.

அந்தக் கடைக்காரரோ, பவியைக் கண்டதும் முகம் மலர வரவேற்று, ''என்னம்மா? ரொம்ப நாளா உங்களைப் பார்க்க முடியலை? ஊரிலிருந்து இப்பதான் வந்தீங்களா?'' என்றபோது, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை!

அவள் வியப்புடன் நிமிர, ''இந்தாங்கம்மா! தாத்தா பாட்டியோட சதாபிஷேகத்தில் எடுத்த போட்டோ! இதை வாங்கத்தானே வந்தீங்க? ஏம்மா ஃபங்ஷனுக்கு நீங்க வரலை?''

மிகவும் தெரிந்தவர் போல அவர் கேட்டபோது, மனதிற்குள் ஏதோ ஒரு புதிர் முடிச்சு மெல்ல அவிழ்வது போல், சுகமான ஒரு படபடப்பு!

அவர் கொடுத்த கவரை வாங்கும்போதே, ''சார் கூட வரலையாம்மா? உங்க ஜோடிப் பொருத்தம் பாத்து கண்ணு வெக்காதவங்களே கிடையாது போங்க...'' என்றபடி உற்சாகத்துடன் அவர் திரும்ப, அவள் பார்வையும் அவரைத் தொடர்ந்தது.

பார்வை அந்தச் சுவரில் பதிய, முதலில் வியப்புடன் விரிந்து, மறுகணமே ஸ்தம்பித்துப் போனது!

இது எப்படி சாத்தியம்...? உள்ளுணர்வுகள் பதறித் தவித்தன.

தலைக்குள்... மரங்கொத்திப் பறவையொன்று, தன் கூர் அலகால் தாள லயத்துடன் விடாமல் தொடர்ந்து கொத்த ஆரம்பித்த உணர்வுடன், உறைந்து நின்று விட்டாள் பவித்ரா!

JUN 12 2010



# 8



எதிரே தெரிந்த சுவரில், தானும் முகமறியா ஒரு இளை ஞனும், ஒரு படகில் அணைத்தாற் போல் புன்ன கையுடன் அமர்ந்திருப்பது போன்ற ஒரு புகைப்படத்தைக் கண்டவுடன், இதயம் படபடவென்று அடித்துக் கொண் டது பவிக்கு!

வேகமாக அருகில் சென்று பார்த்தபோது, தன் விழி களையே நம்ப முடியாமல் எதிரில் தெரிந்த உருவம், கண்ணாடியில் தெரியும் தன் நிழல் பிம்பமாய்!

'யாரிவள்...? என்னைப் போலவே, அதுவும் அச்சு அசலாக என்னையே ஜெராக்ஸ் பிரதி எடுத்ததைப் போல் மர்மமாய், மௌனமாய் புன்னகைப்பவள்?'

மனதிற்குள் கோடி ஆச்சர்ய மின்னல்கள் உருவாகி, விடை தெரியாப் புதிராய் நெஞ்சமெங்கும் பரவின.

பார்வை மட்டும் அந்தப் புதிய மனிதனிடம் நிலைத்து வேகமாய் அவனை அளவிட்டது!

அன்று புரியாத பல விஷயங்கள் இன்று புரிய ஆரம் பிக்க, உள்ளே கலங்கலாய் ப்ரத்யுவின் நினைவு!

கூடவே, அவன் பொய்த்துப் போகவில்லையென்ற நிறைவும்!

குறுகுறுத்த நெஞ்சிற்குள், பரீட்சை முடிவுகளை ...ரியத் துடிப்பது போல் தவிப்பு கலந்த ஒரு பரபரப்பு! ...போட்டோகிராபரின் குரல், அவளின் எண்ணக் ...ங்களைக் கலைத்தன!



"என்னம்மா... தாத்தா... ...வரை நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லுங்க..."

"ம்.. இந்தக் கவரிலே ரெண்டு ஃபிலிம் ரோல்ஸ் திருக்கு... அதையும் டெவலப் பண்ணிடுங்க!"

என்று கொடுத்து விட்டுத் திரும்பியவளின் விழிகள், மீண்டும் அந்த நிழற் படத்திலேயே பதிவதாய்!

ப்ரத்யுவின் மனமாற்றத்திற்கு, இந்தப் பெண் மட்டுமே காரணமாக இருந்திருக்க முடியுமென்ற எண்ணம், அவளுக்குள் உறுதியாய் பரவி, சிறு நம்பிக்கை அரும் புகள் உள்ளே மொட்டு விட்டன.

கூடவே, நெஞ்சக் கூட்டினுள், அந்தப் பெண்ணைப் பற்றிய குழப்ப ரேகைகள் பரவ, எண்ணங்கள் எதிர்பார்ப் பின் விளிம்பில் நின்று எட்டிப் பார்க்க ஆரம்பித்தன.

விடைபெற்று காரில் புறப்பட்டவள், சீதாவை கெஸ்ட் ஹவுசில் இறக்கி விட்டு, முக்கியமாக ஒருவரைப் பார்க்க வேண்டியிருப்பதாகக் கூறிவிட்டுக் கிளம்பினாள்!

போட்டோ கவரில் எழுதியிருந்த முகவரியை டிரை வரிடம் கூறி, வழி விசாரித்து அங்கு சென்றபோது, இதயம் வேகமாகத் துடிக்க, நூலறுந்த பட்டமாய் திக்குத் திசை தெரியாது திணறிப் போனாள்.

அழைப்பு மணியை அழுத்தியதும், கதவைத் திறந்த வயதான ஒரு பெண்மணி, அவளைக் கண்டதும் வேக மாக முன்னால் வந்தார்.

"கல்பனா... எப்படா வந்தே? போன வாரம் போன் பண்ணினப்பகூட சொல்லலையே.. மாப்பிள்ளை வர லையா?" வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார்.

JUN 12 2010

பல வருடங்களுக்கு முன்பு இறந்து போன தன் பாட்டியின் பரிவும், அணைப்பும் நினைவுக்கு வந்து.. பவியின் நெஞ்சம் நெகிழ்ந்தது.

சிறிது நேரம் கழித்து அவளை விடுவித்தவர், "ஏன்டா இப்படி இளைச்சிப் போயிட்டே... டயட்டா? இல்லை, வேற கவலையா?

"நான்தான் சொல்லியிருக்கேனே.. குழந்தை இல்லைன்னு வருத்தப்படக் கூடாதுன்னு?" என்றபோது, அவளால் பேசாதிருக்க முடியவில்லை.

"பாட்டிம்மா.. நான் உங்க கல்பனா இல்லை. என் பேர் பவித்ரா! நான் உங்களோட கொஞ்சம் பேசலாமா?"

அவள் கேட்டதும், அதிர்ச்சியுடன் பின் வாங்கியவரின் விழிகளில், புதிதாய் ஒரு கலக்கம்!

முகம் வெகுவாய் மாறிவிட, யோசனையுடன் அவளை உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தவர், வேகமாக உள்ளே சென்றார்.

மறுகணமே, ஒரு முதியவருடன் அவர் வெளியே வர, எழுந்து வணங்கிய பவி, கவரை அவரிடம் கொடுத்தாள்.

அவர் பார்வையும் நம்ப இயலாத பிரமிப்புடன் அவளையே நோக்கின. "உன் பேர் என்னன்னு சொன்னே?" அழுத்தமாய் வந்தது அவர் குரல்!

"என் பேர் பவித்ரா... நான் ஒரு ப்ராஜெக்ட் விஷயமா இங்கே வந்திருக்கேன்! இன்னிக்கு... ஸ்டூடியோவுக்கு போனப்பதான், அந்தப் போட்டோவைப் பாத்தேன்.

"நான்தான் அவங்கனு நினைச்சி அந்தக் கடைக்காரர் [illegible]ண்கிட்ட இந்தக் கவரைக் குடுத்தாரு! அப்புறம்தான்,



உங்களை நேரா பார்த்துப் பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்!"

"என்ன தெரியணும் உனக்கு? அந்தப் பொண்ணு யாருன்னா? அவ என் பேத்தி கல்பனா! வெளியூர்ல இருக்கா... போதுமா? நீ கிளம்பலாம்.."

அவளை விரட்டும் தொனியுடன், கடுமையும் இணைந்திருந்தது அந்தக் குரலில்!

உடனே, அந்தப் பெண்மணி முன்னால் வந்து, "ஒரு நிமிஷம்! உன் அம்மாவோட பேர் என்னன்னு சொல்ல முடியுமா?" யோசனையுடன் கேட்டார்.

"ம்.. வண்டார்குழலி. அப்பா பேர் கதிர்வேலு! இங்கே பக்கத்து கிராமம்தான் எங்க சொந்த ஊர்! அங்கே, எங்களுக்கு ஒரு பூர்வீக பங்களா இருந்தது!"

எனும்போதே இடைமறித்த அந்தப் பெண்மணி, "செங்கமலத்தம்மாதானே உங்க பாட்டி?" என்றார் கேள்வியாக!

"ஆமாம்.. எங்க பாட்டியை உங்களுக்குத் தெரியுமா? எனக்கு.. கல்பனா யாருன்னு மட்டும் தெரிஞ்சா போதும் பாட்டிம்மா! ப்ளீஸ்..."

கெஞ்சிப் பழக்கமில்லாததால், மெதுவாகவே கேட்டாள்.

"உங்க பாட்டிகிட்ட போய்க் கேளு... அவங்க எல்லாம் சொல்லுவாங்க.." முதியவர் கன்னென்று முடித்தார்.

"அவங்க... இப்போ உயிரோட இல்லை! அப்பாவும் இறந்துட்டாங்க. என்னை மாதிரியே ஒருத்தரை போட்



JUN 12 2010

டோவுல பார்த்தவுடனே, தாங்க முடியாத ஒரு ஆர்வத்துலதான் நான் இங்கே வந்தேன்...'' தவிப்புடன் சொன்னாள்.

இருவர் முகமும் பாறையாய் இறுகியிருக்க, ''நீ கல்பனாவைப் பத்தி உங்கம்மாகிட்டேதான் கேக்கணும்!'' என்றார் அந்தப் பாட்டி!

மெதுவாக எழுந்து கை கூப்பினாள் பவி!

''கல்பனாவோட அட்ரஸ் மட்டும் கொடுத்தீங்கன்னா, நானே நேர்ல போய் பார்த்துக்குவேன்!''

அவள் விழிகளில் தெரிந்த வேதனையும் தேடலும் இருவரையும் ஒரு கணம் அசைத்தன!

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, ''என் மக கோயம்புத்தூர்ல இருக்கா! அவ பொண்ணுதான் கல்பனா! ஆனா, அங்கே உனக்குத் தேவையான விபரம் கிடைக்கும்னு எங்களுக்குத் தோணலை!'' என்று கூறிவிட்டு ஒரு முகவரியை எழுதிக் கொடுத்தனர்.

அவர்களுக்கு நன்றி கூறி வணங்கி, அந்த முகவரியை வாங்கி விடைபெற்று வெளியில் வந்தபோது, மனம் ஆழ்கடலின் ரகசியத்தை அறியத் துடிக்கும் ஆர்வத்துடன் படபடப்பதாய்!

அன்றிரவு.. உறக்கமே வராமல், ஏதோ ஒரு விடுகதையின் புதிரை தெரிந்து கொள்ளும் ஆர்வம் மனதில்! ஒரு சிக்கலான நூல்கண்டின் நுனியாவது கிடைத்துவிட்டதே என்ற நிம்மதியும்!

மறுநாள், காலையிலேயே கிளம்பி பங்களாவிற்குச் சென்று, நடந்து கொண்டிருந்த வேலைகளைக் கவனித்தாள்!



பிறகு, சீதாவிடம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்படி பணித்துவிட்டுக் கிளம்பியபோது, முன் வாசலில் ப்ரனேஷின் கார் வந்து நின்றது.

கம்பீர நடையுடன் வேகமாக அவளருகே வந்தவன், ஹேண்ட் பேகுடன் நிற்பதைக் கண்டதும், ''எங்கேயோ கிளம்பியாச்சு போலருக்கு..'' என்றான்.

''ம்.. கோயம்புத்தூருக்கு ஒரு அவசர வேலையா போறேன்... நாளைக்கு வந்திடுவேன்!'' மெல்லிய குரலில் நிறுத்தினாள்.

உடனே அவன் முகம் சீற்றமாய்.. ''இப்ப என்ன திடீர்னு.. ஓ.. பழைய காதலனோட நினைப்பு வந்திடுச்சா? உன்னைப் போய் ஒரு காலத்துலே... ப்ச்.. போ! இனிமே நீ என் கண்ணுல படாம போனாக்கூட நிம்மதிதான்!''

யாருக்கும் கேட்காத அடிக்குரலில் சீறினாலும், முகம் இயல்பாய்.. குரல் மட்டுமே வெறுப்பை உமிழ்வதாய்!

பதில் ஏதும் கூறாமல் சென்று காரில் அமர்ந்தவளுக்கு, நெஞ்சம் இரும்புக் குண்டாய்க் கனத்தது.

முன்பு, அவ்வளவு நேசத்துடன் சிரிப்பும் கேலியுமாக இருந்தவன், இன்று இப்படி அணுக முடியாத பனிப் பாறையாக மாறி விட்டானே என்ற நினைவு பெரும் சோகமாய்!

அதற்குக் காரணமான அந்தக் கல்பனா யாரென்று கண்டுபிடிக்க வேண்டும் என்கிற உத்வேகமும், சினமும் மனதில் கிளர்ந்தெழுந்தன.

அன்று.. தாங்கள் இருவரும் பிரிவதற்கு முதல் நாள், அந்தப் பெண்ணைப் பார்த்து[illegible]... [illegible] என்று ப்ரத்யு நினைத்திருக்க வேண்[illegible]

அவன் காரணமின்றிக் கோபப்பட்டு தன்னை விலக்க வில்லையென்ற உண்மை, தவிப்பாய் பரவி உயிர் வரை தாக்கியது.

அது மட்டும் உண்மையாக இருந்தால், ப்ரனேஷிடம் சென்று, 'நீ நினைப்பதைப் போல் நான் இரட்டை வேடம் போடுகின்ற மாயக்காரி இல்லை. இன்று வரை பவித்ர மாய்... முதல் காதலை மட்டுமே மனதில் சுமக்கும் உத்தமப் பெண்' என கூற வேண்டும் போல் ஒரு உணர்வு!

'எனக்கு மட்டும் ஏன் இப்படி... நான் என்ன தவறு செய்தேன்...'

இதயத்திற்குள் ஒரு கேள்வி ஜனித்தது! உடனே சமீபத்தில் படித்த ஜென்கதையில் வந்த ஓஷோவின் வரிகள்தான் நினைவிற்கு வந்தன.

''வாழ்க்கையை முன்கூட்டியே திட்டமிட்டு நடத்துவது என்பது முட்டாள்தனம்.

ஏனெனில், வாழ்வுக்கு எந்த இலக்கும் கிடையாது!

அது தன்னியல்பில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்! நேற்று என்பது முடிந்த கதை. நாளை என்பது பொய். இங்கே, இப்போது என்பதுதான் நிஜம்!

இந்தக் கணம் முழுமையாக கேள்வியின்றி வாழுங்கள். நாளை, தானே முழுமையாய் இயங்கும்!''

மனம் திடீரென்று அமைதியாய்... நிர்மலமாய் மாறி து!



கோயம்புத்தூருக்குச் சென்று, அந்த முகவரியைக் கண்டு பிடித்தபோது, ஏதோ ஒரு புதிரின் மாய விடு விப்பை எண்ணி நெஞ்சம் தடதடத்தது.

அங்கிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி. அவளைக் கண்டதும், விழிகளில் ஆச்சர்யப் பூக்கள் மின்ன, சட்டென்று கையிலிருந்த செடிகளுக்கு நீர் விடும் தண்ணீர்க் குழாயைத் தவற விட்டார்.

''நீ...'' நம்ப முடியாத வியப்புடன் அவர் விழிக்க, தன்னை அறிமுகம் செய்து கொண்டாள் பவித்ரா.

நேற்றிரவு, தன் தாயும் தந்தையும் குறிப்பிட்ட பெண் இவள்தான் என்பதை உணர்ந்தவர், அவளை உள்ளே அழைத்துச் சென்றார்.

ஆனால், பவித்ரா எவ்வளவோ கெஞ்சியும், இறுதி வரை அவர் தன் மகளைப் பற்றிய உண்மைகளைக் கூற மறுத்து விட்டார்.

இனி, கல்பனாவைப் பற்றி விசாரிக்க இங்கு வரக்கூடா தென்றும் எச்சரிக்கை விடுத்தார்.

''நான் என் பொண்ணை எந்த நாள்லயும் விட்டுக் கொடுக்க மாட்டேன்னு உங்கம்மா கிட்டே சொல்லு.

''கல்பனாவை, ஒரு அநாதை இல்லத்திலிருந்து எடுத்து வளர்த்ததா தான் அவகிட்ட நாங்க சொல்லியிருக்கோம்! எல்லாத்தையும் ஒரே நாள்ல மாத்திடலாம்னு நினைக் காதே.. நீ கிளம்பலாம்!''

அவர் குரலில் தெரிந்த வெறுப்பும், உறுதியும், அர்த்தம் புரியாக் கேள்விகளாய் மனதிற்குள் நிறைந்து, பெரும் குழப்பத்தை விளைவிப்பதாய்!

JUN 12 2010

"சரிம்மா... நான் கிளம்பறேன்.. தேங்க்ஸ்" பெரும் தோல்வி உணர்வுடன் விடைபெற்று வெளியே வந் தாள்.

வாசலில் காத்திருந்த ஆட்டோவில் ஏறி பேருந்து நிலையத்திற்கு வந்தவள், அங்கிருந்த சென்னை செல்லும் பஸ்ஸில் ஏறியபோது மனமே முட்காடாய்!

பயணத்தின் நடுவே 'செல்'லில் சீதாவுடன் பேசிய வள், தான் இரண்டு நாட்கள் விடுமுறையாக சென் னைக்கு செல்வதாகக் கூறினாள்.

அவளும், தான் பார்த்துக் கொள்வதாகக் கூற, நிம்மதி யுடன் சாய்ந்தாலும் கல்பனாவின் ரிஷிமூலத்தை அறி யாமல் தன்னால் நிம்மதியாக இருக்க முடியாதென்பது புரிந்தது.

மறுநாள்.. பனிமூட்டத்துடன் பொழுது புலர்ந்து கொண்டிருக்க, வாடகை தராமலே புற்களின் நுனியில் குடியிருந்த பனித்துளிகள் வைரங்களாய் மின்னின.

அந்த அதிகாலைப் பொழுதில் பவி தன் வீட்டுக் கதவைத் தட்டியபோது, தூக்கக் கலக்கத்துடன் திறந்த குழலியின் முகம் இன்ப அதிர்ச்சியில் விரிந்தது.

"என்னடா... திடீர்னு வந்து ஷாக் குடுக்கறே. எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

பாசத்துடன் வரவேற்ற குழலி, பவிக்குப் பிடித்த டிபனை செய்து சூடு ஆறும் முன்பு சாப்பிட அழைக்க வந்தபோதும், ஏதோ ஒரு யோசனையிலேயே அவள் ருக்க.. அவளிடம் இனம் புரியாத ஒருவித பயமும், படப்பும்!



"என் செல்லப் பொண்ணுக்கு அப்படி என்ன தீவிர யோசனை? கப்பலே கவிழ்ந்த மாதிரி...?"

பாசத்துடன் அவள் முகம் வருடிக் கேட்ட குழலியின் கையை அப்படியே தன் கன்னத்தில் இறுகப் பதித்துக் கொண்டாள் பவித்ரா!

"கப்பல் இல்லைம்மா.. என் வாழ்க்கைதான் கல்ப னான்ற ஒரு பொண்ணால கவுந்திடுச்சி. ஆனா அவ யாருன்னு நீங்கதான் சொல்லணும்..."

என்றவள், அச்சு அசலாக தன்னைப் போலவே இருந்த ஒரு பெண்ணின் போட்டோவைப் பார்த்ததிலிருந்து நடந்ததையெல்லாம் சொல்லி முடித்து நிமிர்ந்தபோது, நிலை குத்திய பார்வையுடன் சிலையாய் உறைந்து நின்றிருந்தார் குழலி!

அவர் உதடுகள் துடித்து.. முகம் கோணி, விழிகளில் நீர்ச்சரங்கள் இறங்க ஆரம்பித்தன.

"கல்பனா... அந்தப் பொண்ணு என் குழந்தைடா... என் வயித்துல பிறந்த ஒரு பாவக் குழந்தை!"

கண்ணீருடன் கூறியவரின் பார்வை எங்கோ வெறிக்க, அவருடைய ஞாபகங்கள் சரம் கோர்த்து பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தன!



## 9



வண்டார்குழலியின் மனதிலோ கல் விழுந்த குளம் போல், நினைவுகளின் சுழற்சி!

JUN 12 2010

அவளுடைய தாய் செங்கமலம், தன் தம்பி கதிர்வேலுவுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருந்த நேரம் அது!

அப்போது, குழலி பத்தாவது படித்துக் கொண்டிருந்தாள்.

ஊரில் பெரிய குடும்பம் என்பதால், பஞ்சாயத்து, தீர்ப்பு என்று செங்கமலமும் மூத்த தம்பி கந்தவேலுவும் முனைப்பாக இருந்ததில், அவர்களுக்கு நிறைய எதிரிகளும் இருந்தனர்.

அதில் ஒருவன் மலைச்சாமி! கற்பழிப்புக் குற்றத்திற்காக செங்கமல நாச்சியாரால் போலீஸில் மாட்டி விடப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டவன்!

அன்றுதான் சிறையிலிருந்து அவன் விடுதலையாகி இருந்தான்.

எவரும் அறியாமல் ஊருக்குள் புகுந்தவன், செங்கமல நாச்சியார் குடும்பத்தைப் பழிவாங்க ஒரு சதித் திட்டம் தீட்டினான்.

அன்று, பள்ளி ஆசிரியர் ஒருவர் திடீரென்று இறந்து விட விடுமுறை அறிவிக்கப்பட்டது.

வீட்டிற்குத் திரும்பும் வழியில் தன் வகுப்புத் தோழனின் அழைப்பை ஏற்று அவன் தோப்பிற்கு சென்று இளநீர் பருகிய குழலிக்கு, அந்த அழைப்பின் பின்னணியிலிருந்த சதித்திட்டம் புரியவில்லை.

அந்த வகுப்புத் தோழன் சிறிது நேரத்திற்கு முன்புதான் மலைச்சாமியின் மிரட்டலுக்கு ஆளாகியிருந்தான்.



அந்த மிரட்டலுக்கு பயந்து இளநீரில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்தவன் பயந்து போய் ஓட்டம் எடுக்க, மலைச்சாமிக்கு எல்லாமே இலகுவாயிற்று!

சுயநினைவின்றி கிடந்த அந்த சின்னப் பூவை நாசம் செய்ய ஆரம்பித்தது அந்த மிருகம்!

ஆளரவமற்ற அந்தத் தோப்பில், மரங்களும், மலைக்காற்றுமே அந்த அக்கிரமத்திற்கு சாட்சியாகிப் போயின!

கண் விழித்ததும், தன் நிலை கண்டு மிரண்டு போய் கதற ஆரம்பித்தாள் குழலி.

உடனே அவளை பயமுறுத்திய மலைச்சாமி, இதை யாரிடமும் சொல்லக் கூடாதென்று மிரட்டி, செங்கமல நாச்சியாரை பழிவாங்கி விட்டதாக கொக்கரித்து விட்டுப் போய் விட்டான்.

சிறிது நேரம் கழித்து எழுந்து வீட்டிற்குச் சென்றவள், தோப்பில் மாடு துரத்தியதாகக் கூறி தன்னிலையை மறைத்து ஓடிச் சென்று தன் அறைக்குள் தஞ்சம் புகுந்தாள்.

தனது கற்பு பறிபோனதை வெளியில் சொல்லவும் பயந்து கூனிக் குறுகி, பித்துப் பிடித்தவள் போலிருந்தாள் குழலி.

பள்ளியிலும் வீட்டிலும் எவரிடமும் பேசப் பிடிக்காமல் ஒதுங்கிப் போனாள்.

நாட்கள் நகர, தான் இழந்ததை உணர்ந்தாலும், அதன் பலனாக தனக்குள் வளர்ந்ததைப் பற்றிப் புரியாமல் இருக்கும்போதே, அடி வயிறு மேடாகி வெளியே தெரிய ஆரம்பித்தது.

JUN 12 2010

கடந்த சில மாதங்களாக, ஒருவிதமான சித்தப்பிரமை நிலையில் வித்தியாசமாக ஒய்ந்திருந்தவளை, அந்த வீட்டில் மற்றவர்கள் கவனிக்காவிட்டாலும், மெதுவாகக் கண்காணிக்க ஆரம்பித்தது கந்தவேலுவின் மனைவி ராசாத்திதான்!

ராசாத்தி மூலமாக விபரமறிந்து அதிர்ந்து போன செங்கமலம், அவளைத் தவறாக எண்ணி, பின்னி எடுத்து விட்டார்.

பிறகு உண்மை தெரிய வர, அந்த மலைச்சாமியைப் பிடித்து கதிர்வேலு அடித்து நொறுக்க, பயந்து ஊரை விட்டே ஓடினான் மலைச்சாமி!

செல்லும் வழியிலேயே தான் செய்த தப்புக்கு பிரதி பலனாய் ஒரு லாரியில் அடிபட்டு இறந்துவிட, அவனுடைய அத்தியாயம் அன்றே முடிந்தது.

ஆனால், அவனுடைய வாரிசு மட்டும் அழிக்க முடியாமல் ஐந்தாவது மாதத்தையும் தாண்டி குழலியின் வயிற்றில் வளர ஆரம்பித்தது.

ஊரில் அனைவரும் இதுபற்றி அவதூறு பேச ஆரம்பிக்க, அவளை இந்த சிக்கலில் மாட்ட விட்ட மாணவனின் குடும்பமோ, சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டே சென்றிருந்தது.

எதையும், யாருக்கும் நிரூபிக்க வழியின்றி அவர்கள் தவித்து ஒடுங்கியிருந்தபோதுதான், கதிர்வேலு தன் சகோதரியின் துயர் துடைக்க முன் வந்தான்.

இருவருக்கும் பத்து வயதுக்கும் மேல் வித்தியாசம் இருந்தாலும், தானே குழலியை மணந்து கொள்வதாகக் கூறினான்.



ஆனால், பிறக்கப் போகின்ற குழந்தையை மட்டும் தன்னால் ஏற்க முடியாதென்றும் முடிவாகக் கூறிவிட்டான்.

குழலிக்கு இது எதுவுமே தெரியாமல், அவள் மறுப்புக்கும் மதிப்பின்றி உடனே திருமணமும் முடிய, இருவருமே கோயம்புத்தூருக்குச் சென்று விட்டனர்.

செங்கமலம் அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டாலும், குழலி மட்டும் பிரமை பிடித்தாற்போல், தன்னைச் சுற்றி ஒரு தனிமைச் சிறையை அமைத்து ஒடுங்கியிருந்தாள்.

அதன் பிறகு, பிரசவ காலத்தில் குழந்தையும் இறந்து விட, ஒரு வருடம் வரை அவளுக்கு வாழ்க்கையே நரகமாய்...!

எங்கும் செல்லாமல், யாரையும் பார்க்கப் பிடிக்காமல் மறுகிப் போயிருந்தவளை, பழைய சம்பவங்கள், துர்சொப்பனங்களை மறக்கும்படி அன்பில் நனையச் செய்து, புது ஜனனமெடுக்கச் செய்தது, கதிர்வேலு தான்!

பிறகு, குழலியின் மாற்றம் கதிர்வேலுவுக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் தர, கோயம்புத்தூரிலேயே ஒரு வீட்டை வாங்கி அங்கு செட்டிலானவர்கள்தான்... பிறகு சொந்த ஊருக்கேப் போகவில்லை!

செங்கமலமும் பாதி நாட்களை அவர்களுடனே கழிக்க, பவித்ராவும் பிறக்க, பிறந்த மண்ணுடைய நினைவே மறந்து போனது!

கந்தவேலுவும், ராஜாத்தியும் மட்டுமே அங்கிருக்க, விடுமுறைக்கு மட்டும் செங்கமலம் பவித்ராவை சொந்த ஊருக்கு அழைத்துச் செல்வது வழக்கமானது.

JUN 12 2010

பிறகு பழைய கடன்களுக்காக, அந்த பூர்வீக வீட்டை விற்று, இரு சகோதரர்களும் பிரித்துக் கொண்டனர்.

திடீரென்று ஒரு நாள், செங்கமலமும் ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட, கதிர்வேலுவின் வீட்டிலேயே வைத்து ஈமடச் சடங்குகள் நடத்தப்பட்டன.

இரு வருடங்களுக்கு முன்பு, கதிர்வேலு மரணப் படுக்கையில் இருக்கும்போதுதான், தன் குழந்தை மரித்துப் போகவில்லையென்ற உண்மையே குழலிக்குத் தெரிய வந்தது.

மருத்துவமனையில், பக்கத்து அறையில் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணிற்கு குழந்தை பிறந்து இறந்து விட்டதால், அவர்களிடம் தங்கள் பெண் குழந்தையைக் கொடுத்து விட்டதாக கதிர்வேலு கூறியபோது, குழலியின் நெஞ்சமே இரண்டாகப் பிளந்தது.

தன் முதல் குழந்தை இப்போது எங்கே இருக்கிறாளோ என்று அந்தத் தாயுள்ளம் ஏங்கித் தவிக்க ஆரம்பித்தது.

மௌனக் கண்ணீருடன் விசும்பியவர், தன் சோகங்களை பவித்ரா அறியாமல் மறைத்துக் கொண்டார்.

எல்லாக் காரியங்களும் முடிந்து, பவித்ரா அவரைத் தேற்றியபோதுதான், சிறிது தெளிவடைந்து அவரால் யோசிக்கவே முடிந்தது.

ஆனால், முகமறியா அந்தப் பெண்ணைத் தேடிச் சென்று கண்டு பிடித்து பாசத்துடன் இணைகின்ற நேரம், தான் உயிராய் வளர்த்த பவியின் வாழ்க்கை கேள்விக் குறியாகி விட்டால் என்ன செய்வதென்ற பயம் அவர் மனதை உடைப்பதாய்!



தான், பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாகி, திருமணத்திற்கு முன்பே தாயான விபரம் தெரிந்தால், தன் பெண்ணுடைய எதிர்காலமே வீணாகி விடும் என்ற பயம் வேறு, அவரை வாய்மூடி மௌனியாய் மறுகச் செய்தது.

அதனாலேயே, தொலைந்த அந்தப் பெண்ணைப் பற்றிய உண்மைகளையும் ஞாபகங்களையும், சோக நினைவுகளாய் ஆழ் மனதிலேயே போட்டு புதைத்துக் கொண்டார் குழலி.

"அம்மா..."

மயிலிறகாய் வருடிய பவியின் குரல், அவரின் நினைவுத் திரையை மூட, மனம் வேதனையுடன் இறந்த காலத்திலிருந்து நிகழ்காலத்திற்கு வர முயற்சித்தது.

பாசத்துடன், அவருடைய கையைப் பற்றி அழுத்தினாள் பவி.

நினைவுகளின் தேரோட்டம் மெல்ல தன் உலாவை முடித்து, இருப்பிடம் சேர்ந்தது.

"என்னம்மா? ஏன் இப்படி ஒய்ஞ்சு போய் உக்காந்திருக்கீங்க? நான் கேட்டது தப்போ? என் கேள்வி உங்களை இவ்வளவு கஷ்டப்படுத்தும்னு தெரிஞ்சிருந்தா கேட்டிருக்கவே மாட்டேன்மா.

"என்னோட சேர்ந்து பிறந்த 'ட்வின்ஸ்'ல ஒரு குழந்தையைத் தத்து குடுத்திருக்கீங்கன்னு நினைக்கிறேன். அப்படித்தானேம்மா!" ஆர்வத்துடன் கேட்டாள்.

"இல்லை..." எனத் தலையசைத்தவரின் கண்களில் கண்ணீர் வெள்ளம் உடைப்பெடுத்தது.

JUN 12 2010

மனதில் பதுங்கியிருந்த சோகங்கள் வார்த்தைகளாய் வெளிவர, விமானத்தின் கறுப்புப் பெட்டியாய் திறக்க ஆரம்பித்தது குழலியின் நெஞ்சம்!

எல்லாவற்றையும் கேட்ட பவித்ராவோ, எங்கோ பதிந்திருந்த விழிகளுடன் சிலையாக அமர்ந்திருந் தாள்.

புதையல் எடுக்க நினைக்கும்போது பூதம் கிளம்பியது போல், தன் தாயின் வாழ்க்கைப் புத்தகத்திற்குள் விரிந்த பக்கங்கள், பவியை சில்லிட வைத்தன.

அப்போது, குற்றவுணர்ச்சியும் வேதனையும் ஒன்று சேர மகளையே தவிப்புடன் நோக்கினார் குழலி!

"என்னோட கடந்த கால வாழ்க்கை உனக்குத் தெரியக் கூடாதுனு நான் ரொம்ப பயந்தேன் பவி! அதனாலதான், நான் ஊர்ப் பக்கமே போறதில்லை... உன்னையும் தடுத் தேன்!

"நீ என்னை மாதிரியே இருக்கியா.. ஊரிலே யாராவது ஏதாவது பேசிட்டா என்ன செய்யறதுனு ரொம்பத் தவிச் சிட்டிருந்தேன்.. அது நடந்துருச்சி! என்னை வெறுத்திட மாட்டியே பவி?'' என்று கேட்டுவிட்டு, பெரும் கேவ லுடன் விம்மி அழ ஆரம்பித்தார்.

அந்த அழுகை, உயிரையே உலுக்கிவிட, தன்னை சுதாரித்துக் கொண்டு திரும்பினாள் பவி!

"அம்மா.. அழாதீங்க ப்ளீஸ்! நான் உங்களை வெறுத் திடுவேனோனு எப்படி உங்களாலே கேக்க முடிஞ்சுது! நீங்க கொலையே செஞ்சுட்டு வந்தாலும், அதுக்கு சரியான காரணம் இருக்கும்னு நம்பறவ [illegible]!"



"இது.. உங்களோட சின்ன வயசுல உங்களை அறியாம நடந்த தப்பு! அதுக்கு உங்களைப் பொறுப்பாளியாக்கற துலே எனக்கு சத்தியமா உடன்பாடு இல்லைம்மா.

"கற்பழிப்பாலே பாதிக்கப்பட்டவங்க தூய்மையான பெண்கள்தான்னு காந்தியடிகளே சொல்லியிருக்காரு! ப்ளீஸ்மா.. இனிமே நீங்க அழவே கூடாது"

விழியோரம் கசிந்த நீருடன், மென்மையாக ஆறுதல் படுத்தினாள்.

உடனே ஒரு குழந்தையைப் போல் அவள் மடியில் முகம் புதைத்து அவர் அழ ஆரம்பிக்க, ஒரு தாயாய் மாறி அவரை சமாதானப்படுத்திய பவிக்கு உடலும் உள்ளமும் குலுங்கி உள்ளூர ஒரு குளிர் பரவ, அவரை வாஞ்சை யுடன் அணைத்துக் கொண்டாள்.

குழலி, தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு, இயல்பு நிலைக்கு வர, அன்று வெகு நேரமாயிற்று!

அவர் சிறிது தெளிந்ததும், பவி மெதுவாக ஆரம்பித் தாள்.

"ஏம்மா, உங்களுக்கு அந்தப் பொண்ணைப் பாக்க ணும்னு தோணவே இல்லையா?"

மெல்ல நிமிர்ந்தவரின் கண்களிலோ, எல்லையில்லா சோகம்! பிறகு இல்லையென தலையசைத்தவர், "பிறந்த உடனே என் முகம் பார்க்காமப் பிரிஞ்சி போன அந்தக் குழந்தையைவிட, நான் உயிரா வளர்த்த நீதான் எனக்கு முக்கியம்டா!

"அப்படி ஒருத்தி என்னோட வாழ்க்கையோட தொடர்பு உள்ளவள்னு தெரிஞ்சா, [illegible] பண்ணிப்பாங்க... உன்னோ[illegible]?

அதான் என் ஆசைகளை மனசுக்குள்ளேயே போட்டுப் புதைச்சிட்டேன்!'' என்றார் வேதனையுடன்!

அவரை சமாதானப்படுத்தி ஓய்வெடுக்க வைத்து விட்டு வெளியே வந்தவளின் உள்ளத்திலோ கோடி நினைவுகள் எண்ணைத் தோரணங்களாய்!

தன் தாய் கூறியதையே மனம் அசைபோட, ஒரு பெண்ணுடைய எதிர்காலத்திற்காக, மற்றொரு பெண்ணைப் பற்றி அறிந்து கொள்ளவே அவர் மறுப்பது, நெஞ்சை உலுக்குவதாய்!

எப்படியாவது, தன் சகோதரி கல்பனாவைத் தேடிக் கண்டு பிடித்து தாயுடன் சேர்த்து வைக்க வேண்டும் என்று நினைக்கும்போதே, அப்போதுதான் தன் வாழ்க்கையும் நோகுமென்று தோன்றியது.

உடனே ப்ரத்யுவிடம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் ஒரு தவிப்பு!

''நீ புரிந்து கொண்டபடி நானும்... நான் கணித்தபடி நீயும் மோசமானவர்கள் இல்லை.. நீ பார்த்து கோபப்பட்டுப் பிரிந்தது என் சகோதரி கல்பனாவை!'' என்று உடனே கூற வேண்டும் போல் ஒருவிதப் பரபரப்பு!

இதுவரை அவனை வெறுத்து விட்டதாக தன்னையே ஏமாற்றிக் கொண்டிருந்த மனதுக்கு, அவனுடைய அன்புக்கு முன் வேறெதுவும் தேவையில்லை என்பது இன்று புரிவது போல்!

நெஞ்சில், மலராய் பூத்திருந்த அவன் நினைவு, இன்று வரை உதிரவில்லை என்பது மட்டும் தெள்ளிவாகத் தெரிவதாய்!



அதே நேரம், ப்ரத்யுவைப் பற்றி குழலியிடம் கூறி விடலாமென்று யோசித்துக் கொண்டிருந்த பவியை ஏதோ ஒன்று சீனச்சுவராய்த் தடுத்தது!



## 10



ப்ரனேஷிடம் தன் தாயைப் பற்றிய எல்லா உண்மைகளையும் கூறிய பிறகு, அவன் அவரைத் தவறாகக் கணித்து விட்டால் என்ன செய்வதென்ற கவலை, பவியை உடைத்துப் போட்டது!

ஒருவேளை.. அவன் எதையுமே நம்பவில்லை என்றால்?

அவனிடம் கல்பனாவைப் பற்றி பேசி, புரிய வைத்த பிறகே தாயிடம் சொல்லலாம் என்று எண்ணியபடி அமர்ந்திருந்தவளை குழலியின் குரல் கலைத்தது.

''பவி... நீ படிக்கிற காலத்திலயும் சரி... இப்பவும் சரி.. நான் உன்கிட்ட ரொம்பக் கண்டிப்பா இருந்திருக்கேன், ஏன்னா நீயும் என்னை மாதிரி நண்பர்களை நம்பி ஒரு தப்பான ஆள்கிட்டே மாட்டி ஏமாந்திடக் கூடாதேன்னு தவிச்ச தவிப்பு தான்டா அது!''

ஒரு நீண்ட பெருமூச்சுடன் அவர் கூறியபோது, உடல் குலுங்கி மனம் விதிர்த்தது.

''எதுவுமே சொல்ல வேண்டாம்மா.. [illegible] இன்னிக்கு உங்களுக்கு ரெஸ்[illegible]

போறேன்!'' - ஆர்வத்துடன் எழுந்தவளைத் தடுத்தார் குழலி.

அவரைப் பிடிவாதமாகப் படுக்க வைத்துவிட்டு, சமைத்துப் பரிமாறி, அவர் ஆவலுடன் சாப்பிடுவதைக் கண்டபோது மனதில் பெரும் நிம்மதி வந்தது பவிக்கு!

குழலிக்கோ... அவளைப் பார்த்தால் மாபெரும் சக்தியாய், இருபத்தைந்து வருடங்களாய் தன் நெஞ்சம் எனும் நிலத்திற்குள் புதைந்து போயிருந்த கனவுப் புதையலை வெளிக் கொணர்வதற்கென்றே ஜனித்த ஒரு தேவதையாய் தோன்றியது!

மேலும் இரண்டு நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து அம்மாவுக்கு தைரியம் கூறி, வீரம்மாப் பாட்டியை துணைக்கு வைத்துவிட்டுக் கிளம்பினாள் பவி.

ரயிலில் ஏறி அமர்ந்தவுடனே, நேற்று பெய்த மழையின் ஈரம் உலராப் புல்வெளியாய், ப்ரத்யுவின் நினைவுகள் அவளை முழுதாய் ஆக்ரமித்தன.

கரைக்குள் அடங்கிய நதியாய் சலனமின்றி ஓடிக் கொண்டிருந்த உள்ளம், அவன் நினைவுப் பெருக்கால் கரை உடைத்து, காட்டாறாய் மாறி மகிழ்ச்சிச் சாரலுடன் பயணித்தது!

அதே நேரம்... ப்ரனேஷ் கடும் கோபத்திலிருந்தான்.

நேற்று, தன் டிஜிட்டல் கேமராவை எடுத்துக் கொண்டு அந்த போட்டோ ஸ்டுடியோவுக்குச் சென்றவன், அங்கு கல்பனாவும் அந்த மனிதனும் இணைந்திருந்த புகைப்படத்தைக் கண்டதில் மிருகமாகிப் போயிருந்தான்.



அந்த ஜமீன் பங்களா புகைப்படங்களை கேமராவிலேயே பார்த்த போட்டோ கிராபர், ''இதே பங்களாவைதான், அதோ... அந்தம்மாவும் போட்டோ புடிச்ச டெவலப் பண்ணக் குடுத்தாங்க! நீங்க 'சி.டி..'யா போட்டுக் கேக்கறீங்க, சார்!'' என்று புன்னகைத்தார்.

அப்போதுதான் திரும்பி அந்தப் புகைப்படத்தைக் கவனித்தபோது, மனம் ரௌத்ரமாகி புகைந்தது.

''முந்தாநாள்தான் அவங்க வந்திருந்தாங்க..'' என்றபடி அவன் கேமராவை எடுத்து 'சிடி'யாக மாற்ற ஆயத்தமாக, அவசரமாக கோயம்புத்தூருக்குக் கிளம்பிச் சென்ற பவியின் நினைவுகள் முள்ளாக உறுத்தின!

பழைய காதலனைப் புகைப்படத்தில் கண்டவுடன் மலரும் நினைவுகளில் மகிழ்ந்து கோயம்புத்தூருக்கு அவள் சென்று விட்டதாக அவன் இதயம் தப்புக் கணக்குப் போட்டது!

அதுவும் இரண்டு நாட்களாக... இன்று வரை அவள் திரும்பவில்லையே என்ற கோபம் ஆழமாய் இம்சை செய்ய... நெஞ்சம் ரணமாகியது.

இதயத்திலிருக்கும் அவளை வெளியேற்றவும் துணிவு இன்றி தவித்தபடி, காயங்களை நாக்கால் வருடும் கூண்டுப் புலியாய் நடை பயின்று கொண்டிருந்தான் அவன்.

மூன்று வருடம் முன்பு, பவியைப் பிரிவதற்கு முதல் நாளிரவு.

அவளை ஹோட்டலில் வேறு ஒருவனுடன் நெருக்கமாய்ப் பார்த்ததும், உடனே [illegible]ம் பேசியதும் நினைவில் அணி[illegible]து!

தன்னை யாரென்றே அறியாதவள்போல அவள் அன்று நடித்ததும், இன்று நடந்ததைப் போல் ஞாபக அடுக்குகளில் மேலெழும்பின.

நேற்று புகைப்படத்தில் கண்டவன், கோபத்துடன் அப்போது தன்னை மிரட்டியதும், அவள் அவனுடைய தோள் சாய்ந்து சென்றதும் ஒரே நொடியில் தன் உலகம் இருண்டதும், இன்னும் மனசைக் குலுங்கச் செய்தன!

மறுநாள், வாழ்க்கையே வெறுத்துப் போய் பவியிடம் கேட்டபோது, அவள் பொய் கூறியதும் நிழற்படமாய் சுழன்றாடியது.

அதன் பிறகு, தன்னைப் பிரிந்து அவள் சென்னைக்குச் சென்றதும், அங்கு வேலை பார்த்ததும், திருமணமாகாமல் இருந்ததும் புதிராகத் தோன்றின.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, சென்னையில் ஒரு கம்ப்யூட்டர் நிறுவன விழாவில்தான் ப்ரனேஷ் அவளை மீண்டும் சந்தித்தான்.

அப்போதுதான், அவளை மறந்து விட்டதாகத் தனக்குள்ளேயே ஒரு வர்ணம் தீட்டியிருந்தது பொய்யென்று புரிவதாய்!

அன்று தனது 'பாஸ்' ரத்தினத்துடன் வந்திருந்த பவி, அவனைப் பார்க்கவில்லை.

ரத்தினம், ப்ரனேஷின் குடும்ப நண்பர் என்பதால் அவளைப் பற்றிய விபரங்கள் அறிய எளிதாக இருந்தது.

அவள் ஏன் அந்த இளைஞனைத் திருமணம் செய்து கொள்ளவில்லை என்ற கேள்வி மட்டும் அவனுள் நெருடலாய்!



இரவு நேரத்தில் மலர்ந்து, சில மணித் துளிகளிலேயே மரித்துவிடும் நிஷாகந்திப் பூவாய் தன் வாழ்வில் வந்து மறைந்தவளை மறக்க, ஏனோ மனம் மறுத்தது.

அப்போதுதான் அந்த பங்களா விலைக்கு வர, உடனே தன் தந்தையிடம் பேசி அதை வாங்கி ரிஸார்ட்டாக மாற்றப் போவதாக அவன் கூற.. அவருக்கும் சந்தோஷம்!

விளம்பரத் துறையில் கொடிகட்டிப் பறக்கும் தன் மகன், தங்களுடைய குடும்பத் தொழிலான ஹோட்டல் சம்பந்தமான ஒரு புது ப்ராஜெக்டில் ஆர்வம் காட்டியதில் மகிழ்ந்தவர், உடனே அதை வாங்க ஏற்பாடு செய்தார்.

இரண்டே மாதங்களில் எல்லாமே சுபமாக முடிய, ரத்தினத்திடம் பேசி பவித்ராவையே அனுப்பும்படி கேட்டபோது, அவரும் சம்மதித்தார்.

அவளைத் தன் அதிகாரத்துக்கு உட்படுத்தி, தன்னை ஏமாற்றியதற்கும் பிரிந்து சென்றதற்கும் பழிவாங்க வேண்டுமென்ற வன்மம் மனதில் நீண்ட காலமாய் வேரூன்றியிருந்தது.

அவளுக்கு இந்த புராஜக்ட் லட்சியக் கனவென்று அவன் அறிந்திருந்ததால், எதிர்பார்க்காமலே அவன் விரித்த வலையில் பவி சுலபமாக மாட்டிக் கொண்டாள்.

எல்லாம் செய்து முடித்ததும், அவளை வார்த்தைகளால் முட்களாய்க் கீறி காயப்படுத்[illegible] மன[illegible]த்த அமைதி மட்டும் ஏனோ வர மறுத்தது.

JUN 12 2010

அவன் கோயம்புத்தூருக்குச் சென்றதை அறிந்ததும் 'மர்மங்கள் பூட்டிக் கிடக்கும் மாயமாளிகையோ பெண் களின் மனது' என்று ஒருவித விரக்தி சூழ்ந்தது.

அதுவும், இப்போது பழைய காதலைப் புதுப்பிக்க அவள் சென்றிருப்பதாகத் தோன்றியவுடன், கண்கள் தீச்சுடராகி பெரும் வன்மம் வந்தது, ப்ரனேஷின் உள் ளத்தில்!

அவள் நினைவுகள் தந்த துரோகத் தகிப்பால் உறக்கம் கைவசப்பட மறுத்து கண்ணாமூச்சி ஆட, உடனே ஒரு தீர்க்கமான முடிவையும் எடுத்தான்.

மறுநாள் காலை, ரயிலிலிருந்து இறங்கி பொள்ளாச் சியில் காலடி வைத்ததுமே, பவியின் மனதில் உற்சாகம் வெள்ளமாய்க் கரை புரண்டது.

மகிழ்ச்சியில் துள்ளிய நெஞ்சம், கவிதைச் சரங்களைக் கோர்த்தது.

கோபக் காற்றடித்து அணைவதில்லை காதல் அகலின் ஒளி என்பது, இன்று புரிவதாய்!

வெளியே பூத்தூவலாய் சிரித்துச் சிதறிய மழையைக் கண்டபோது, புது வசந்தம் வாசல் வந்த உணர்வு!

காருக்குச் செல்லும் வழியில், குடையுடன் ஓடி வந்த டிரைவரிடம் அதை மறுத்து, இதமான பன்னீர்ச் சாரலில் நனைய ஆரம்பித்தாள் பவி.

நாபியெங்கும் ஒருவித சிலிர்ப்பு வந்து கோடி மின்னல் கள் மனதில் கோலமிட அவளுக்குள்ளும் சுகமாய் ஒரு மழைச்சாரல்!



விடுமுறையை அறிந்த சிறு பிள்ளையாய்த் துள்ளிய மனதை அடக்கியபடி காரில் ஏறினாள் பவித்ரா.

"ஏம்மா குடையை வேண்டாம்னுட்டீங்க... சளி பிடிச்சுக்கப் போகுது!" - டிரைவர் அக்கறையுடன் வினவி னார்.

"பரவாயில்லைங்க.. பூமிக்கு, மழை ஒரு அற்புதமான வரம் மாதிரி! அதைக் குடை பிடிச்சி, என்னைத் தொடா தேனு தீண்டத் தகாத மாதிரி சொல்ல எப்பவுமே எனக்குப் பிடிக்கறதில்லை!"

சிறுமுறுவலுடன் அவள் பகர்ந்தபோது, அவர் விழிகளில் ஒரு ஆச்சர்ய மின்னல்!

"இது மாதிரி யாருமே என்கிட்ட சொன்னதில்லைம்மா! ஏன் குடை எடுத்துட்டு வரலைன்னுதான் எல்லாரும் திட்டுவாங்க!" என்றார் தயக்கத்துடன்!

புன்னகையுடன் திரும்பியவள், "ஏம்பா... 'சைட்'ல வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதில்லே?" ஆர்வத் துடன் கேட்டாள்.

"ம்... நடக்குதும்மா! மேனேஜர் ஐயா, சதீஷ், சீதாம்மா எல்லாரும் பாத்துக்கிட்டாங்க!"

"ஓ! அப்புறம்... மிஸ்டர் ப்ரனேஷ் வந்திருந்தாரா?" எனும்போதே தன் தவிப்பு குரலில் தெரிந்து விடாம லிருக்க, அவள் பெரும்பாடு பட்டாள்.

"இல்லைம்மா! ரெண்டு நாளா அவரும் வரலை!"

கூறிவிட்டு கார் ஓட்டுவதில் அவர் கவனம் செலுத்த, இன்றாவது அவன் வருவானா [illegible] மனதில் வெடித்தது.

JUN 12 2010

கெஸ்ட் ஹவுஸுக்குச் சென்றவுடன், ப்ரத்யுவிற்காக அவசரமாகக் குளித்து, விசேஷமாய் அலங்கரித்துத் தயாராகி வெளியே வந்தாள் பவி!

இங்கு வந்ததிலிருந்து, முதன் முதலாக இன்றுதான் புடவை அணிந்து மிகவும் அழகாக இருப்பது புரிந்து, கன்னங்கள் சிவந்தன.

மகிழ்ச்சியும் வெட்கமும் போட்டி போட்டுக் கொண்டு அணிவகுத்ததில், இன்று சித்திரப்பாவை போலிருந்தாள் பவி!

தன்னைப் பற்றிய உண்மையைக் கூறினால், அவன் முகம் எப்படி மாறும்? தன் தவறை உணர்ந்த பிறகு என்ன பேசுவான் என்ற கற்பனைகள், இதயச் சிறகிற்குள் கதகதப்பாய் ஒளிந்திருந்தன.

அவளிடம் பெரிய மாற்றம் ஒன்று தெரிவதாகச் சீதாவிற்குத் தோன்றினாலும் வாய்விட்டுக் கேட்காமல் மௌனமாகவே காரில் ஏறினாள்.

எப்போதுமே காரில் செல்லும்போது வேலைகளைப் பற்றியே பேசியபடி வரும் பவித்ரா, அன்று அமைதியான பரவசத்துடன் அமர்ந்திருந்தது வேறு அவளுடைய ஆவலைத் தூண்டுவதாய்!

பங்களாவுக்குள் நுழையும்போதே, அங்கு அவ னுடைய கார் இருக்கிறதாவென்று பவியின் விழிகள் அவசரமாக ஆராய்ந்தன.

இல்லையென்று தெரிந்தவுடனே மனம் வாடிய மலராய் மூடியது. தனக்குள்ளேயே போராட ஆரம்பித்தன உணர்வுகள்!



பிறகு மேனேஜரிடம் பேசும்போதும், சீதாவிடம் வேலைகளைப் பற்றி விசாரித்த போதும், புலன்கள் அனைத்தும் அவனுடைய வருகைக்காக தவமிருந்தன.

இரண்டாவது மாடியில் அவனுடைய 'ப்ரைவேட் சூட்'டில் லிஃப்டிற்கான வேலையை மேற்பார்வை யிட்டுக் கொண்டிருந்தபோதுதான், அவனது காரின் ஓசையை, செவிகள் இதயத்துக்கு வருடலாய் அறி வித்தன.

சிறு சிறகாய் படபடத்து தொண்டை வரை வந்து துடித்த மனது, அழுத்தமான காலடித் தடத்தை எதிர் நோக்க ஆரம்பிப்பதாய்!

சீதாவிடம், கீழே போய் அங்கு நடக்கும் வேலை களைக் கவனிக்குமாறு பணித்துவிட்டு, சுகமான கற்பனை களுடன் அவனைத் தனிமையில் சந்திக்கும் எதிர்பார்ப் புடன் விழிகள் மின்னக் காத்திருந்தாள்.

திடீரென்று அவனுடன் யாரோ பேசியபடி வருவது போல் புதிதாய் ஒரு குரல்!

உள்ளம் பரவசத்தில் மூழ்கித் ததும்ப, வேகமாகத் திரும்பியபோது, பவியின் பார்வை அந்தரத்தில் அப் படியே உறைந்தது.

ப்ரத்யுவிடம் உற்சாகமாகப் பேசியபடி, கைகளை அன்யோன்யமாய் பிடித்து நெருக்கமான உணர்வுடன் இணைந்து வந்த ஒரு பெண்ணைக் கண்டதும், ரணமாய் ஒரு வலி எழும்பி தேகமெங்கும் பரவியது.

உயரமாக, ஒல்லியாக ஒரு மாடல் போலத் தோற்ற மளித்த அந்தப் பெண்ணை [illegible] முதலில் பவியிடம் அறிமுகப்படுத்தினான் அவன்.

JUN 12 2010

''மிஸ் பவித்ரா! இவங்கதான் என்னோட வருங்கால மனைவி ரூப்கலா! இங்கே வேற யாருக்குமே தெரியாது. உன்கிட்ட தான் இதை முதல்லே சொல்லணும்னு தோணுச்சி! அதான் சொன்னேன்!''

அவன் முடித்தபோது, அவள் உற்சாகத்துடன் முன்னால் வந்து, பவியின் கையைப் பிடித்து ''ஹலோ...'' என்றாள்.

ஆனால், நெஞ்சமே இரண்டாக உடைந்து, விழிகள் தெறித்து விடும் போல வெறித்தாள் பவித்ரா.

நேச அரும்புகள் மலர்ந்த உடனே சருகாகி உதிர்ந்ததைப் போல், ஒரு உயிர்வலி தேகமெங்கும் பரவியது.

தன் ஆணிவேரையே இழந்த விருட்சமாய் உள்ளே உடைந்து சரிய ஆரம்பித்தது அந்தப் பெண்மை!



# 11



பவித்ரா, தன் உள்ளத்தின் வலியை விழிகளுக்குள் காட்டாமல், புன்னகை திரை வைத்து மறைத்து நின்றாலும், அவளின் வெளிறிய முகத்திலேயே உட்புதைந்த உண்மைகளை, அறிந்து கொண்டான் ப்ரனேஷ்.

விழிகளில் புதிதாய் ஒரு எதிர்பார்ப்பும், சுவாரசியமும் தொற்றிக் கொள்ள, உள்ளூர ரகசியமாகப் புன்னகைத்துக் கொண்டான் அவன்.



அந்தப் பெண்ணிடம், ''ரூபா... நீ இந்த இடத்தை சுத்திப் பாத்துட்டு இரு! நான் மிஸ். பவித்ராகிட்ட முக்கியமாப் பேச வேண்டியிருக்கு... வந்திடறேன்'' என்றான்.

பிறகு பவியிடம் திரும்பியவன் ஒரு கை அசைவில் அவளைத் தன்னுடன் வரும்படி ஏவிவிட்டுக் கீழே இறங்கினான்.

முதல் மாடிக்குச் சென்றவுடன், காரிடாரில் யாருமில்லாத தனிமையில், ''என்ன.. உன்னோடப் பழைய காதலனைப் பார்த்தாச்சா? அதான், இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கற மாதிரித் தெரியுது. ரெண்டு நாளா மத்ததெல்லாம் மறந்து போயிருக்குமே...!'' ஏளனமாகக் கேட்டான்.

கண்ணீர், வழிந்து விடுவேன் என்று எச்சரிக்கை செய்தது. மெதுவாக நிமிர்ந்து பார்த்த அவனுடைய விழிகளில் தெரிந்த கடலளவு சோகத்தைக் கண்டபோது உடனே அவன் முகம் பாறையாய் இறுகியது.

வேகமாகத் திரும்பிச் செல்லும் அவள் உருவம், ஏனோ தன் மீதே கோபத்தையும் தவிப்பையும் வரவழைத்தன.

வேகமாக மாடிக்குச் சென்றவன், அந்தப் பெண்ணுக்கு நன்றி கூறி அனுப்பி விட்டுக் கீழே வந்தபோது, எங்கு தேடியும் பவியைக் காணவில்லை.

எங்கு செல்கிறோம் என்று புரியாமலே திசை தேடும் பறவையாய் ஒரு அலைப்புறு... ஒரு காட்டேஜுக்குள் நுழைந்த... நல்ல ...யாக அங்கு ஒருவரும் இல்லை.

JUN 12 2010

ப்ரனேஷிடம் உண்மையைக் கூற முடியாமல் ஊமையாய் அழுத நெஞ்சத்தின் ஓசைகள், விழிகளின் பாஷைகளாய் கண்ணீர்ச் சரங்களைத் தொடுத்தன.

அப்படியே சரிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தாள் பவி.

மனமே கரைந்து விடும் அளவு அழுதவள், யாரோ வரும் அரவம் கேட்டு கண்களைத் துடைத்து அவசரமாக எழுந்தபோது, கண்களில் ஒரு அலைப்புறுதலுடன் ப்ரனேஷ் அங்கு நின்றிருந்தான்.

அவன் தன்னை அறிந்து கொள்வானோ என்ற பயத்துடன், அவள் வேகமாக ஜன்னல் புறம் திரும்பிக் கொண்டாள்.

தனக்காகக் கண்ணீர் சிந்தும் ஒருத்தியாய் அவளை கண்ட உடனே மனம் உயிர்ப்புடன் மலர்ந்தது அவனுக்கு!

மெதுவாக அவளருகில் சென்று அணைத்து, உன்னை வெறுப்பேற்றி பொறாமைப் பட வைப்பதற்காகத்தான் இந்தப் பொய்யைக் கூறினேன் என்று கூற வேண்டும் போல் அவன் மனம் தவித்தது.

ஆனால், சில வருடங்களுக்கு முன்பு அவளுடன் கண்ட, முகவரி தெரியாத அந்த மனிதனின் முகம் கண் முன் உடனே நிழலாடியது.

"என்னாச்சு? என் ஒரு மாதிரி இருக்கே...?" என்றான் வறண்ட குரலில்.

"ஒண்ணுமில்லை சார்... லேசா தலைவலி! நான் கெஸ்ட் ஹவுசுக்குப் போயிட்டு மதியானம் வந்திடுறேன்."



அவன் பதிலை எதிர்பார்க்காமல் விரைந்து சென்றவள், [illegible]ரை எடுக்கும்படி டிரைவரிடம் கூறிவிட்டு, சீட்டின் பின்புறம் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டாள்.

தனக்குள்ளே மூண்ட யோசனையுடன் வெளியே வந்தான் ப்ரனேஷ்.

அவளைத் தேடிய சீதாவிடம் "மிஸ் பவித்ரா, ஒரு [illegible]ஃபைல் விஷயமா கெஸ்ட் ஹவுசுக்குப் போயிருக்காங்க... [illegible]தியம் வந்துடுவாங்க... நீங்க வேலையைக் கவனிங்க" என்றான்.

பிறகு தனிமையில், அவளுடைய சிவந்த விழிகளும், ஒய்ந்து வெளிறித் தெரிந்த தோற்றமும், சோகத்தை சுமந்த முகமும் உள்ளே குடிபுகுந்து, அவன் நெஞ்சம் ஆற்ற முடியாத சினத்தைத் தத்தெடுத்தது.

* * *

கெஸ்ட் ஹவுசிற்குச் சென்ற பவித்ரா, கண்கள் வறண்டு போகும் வரை, தன் சோகத்தைக் கண்ணீரில் கரைத்தாள்.

வெகு நேரம் கழித்து எழுந்தவள், தலை பாரமாகி சோர்ந்து சிவந்திருந்த தன் தோற்றத்தைக் காணச் சகிக்காமல் முகம் கழுவி அமர்ந்தாள்.

தன்னைப் பற்றியும், தங்கள் பிரிவுக்குக் காரணமான தன் சகோதரியின் ரிஷிமூலத்தையும் கூறவந்தபோது, இடி விழுந்தாற் போல் ப்ரனேஷ் தன் வருங்கால மனைவியை அறிமுகப்படுத்தியது, மனதைக் கசக்கிப் பிழிந்தது.

கடலுக்குள் புதைந்திரு[illegible]ல[illegible] ரகசியங்களைப் போல் தன் அம்மாவைப் பற்றிய உண்மைகளையும் உள்ளேயே [illegible]

வெகு நேரத்துக்குப் பிறகு, மெல்லிய குயிலோசை யாய் 'செல்' அழைத்து.

நினைவுகள் காற்றடித்த மேகங்களாய் கலைய எடுத்த போது, சீதாதான் பேசினாள்.

அவளிடம் தனக்கு லேசாக காய்ச்சல் இருப்பதாகக் கூறி, இன்று மட்டும் அவளையே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்படிக் கூறினாள் பவித்ரா.

மதியம் சிறிது நேரம் படுத்து எழுந்தபோது, வானம் கருமையை விரிக்க ஆரம்பித்திருந்தது.

மழை வருவதற்கு அறிகுறியாய் மின்னல் தன் முக வரியை பூமியில் விதைக்கத் துவங்கியது!

மெல்ல எழுந்து காபி மட்டும் குடித்த பவித்ரா, இரவு உடைக்கு மாறி பாட்டு கேட்க ஆரம்பித்த பிறகுதான் மனம் கையகப்பட்டு ஒரு நிலைக்கு வந்தது.

அன்று தாமதமாக வந்த சீதா, 'சைட்'டில் நடந்த வேலைகளைப் பற்றி விவரித்தாள்.

''என்னே தெரியலை மேடம்... இன்னிக்கு ப்ரனேஷ் சார் எல்லாரையும் வறுத்தெடுத்துட்டார்... ஒரே டோஸ் தான்!

''அவர் கிளம்பிப் போனப்புறம், புயலடிச்சு ஓய்ஞ்ச மாதிரி இருந்தது... அதுக்கப்புறம் சில வேலைகளைப் பாத்துட்டுக் கிளம்பி வந்தேன்'' என்றாள் பெருமூச் சுடன்.

திருமணம் முடிவானதற்கு சந்தோஷப் படாமல் ஏன் கோபப் பட்டிருக்கிறான் என்ற கேள்விக்கு விடை தெரியாமலே தவித்தது மனது.



அவனுடைய நினைவின் வேர்கள், நெஞ்சமெங்கும் பரவி இருந்தன.

ஏனோ ஒரு வித இறுக்கம் வந்து இதயத்தைத் தழுவியது.

# 12

மறுநாள் விடியும் போதே, வானில் மேக முடிச்சுகள் மெதுவாக அவிழ்ந்து, லேசான தூறல் போட்டுக் கொண் டிருந்தன.

பவியின் மனதிலும் வேதனை முடிச்சுகள் இறுகின.

ப்ரனேஷை இன்று எப்படித்தான் எதிர்கொள்ளப் போகிறோமோ என்பதிலேயே ஆழ்ந்து போய் இருந்தது நெஞ்சம்!

கார் பங்களாவிற்குள் நுழையும் போதே, அவனுடைய ஹோண்டா சிட்டி நிற்பதை ஓரக் கண்ணால் கவனித் தாள்.

இனி அவன் இருக்கும் இடத்தைக் கட்டாயம் தவிர்த்து விட வேண்டும் என்ற உறுதி கொண்டாள்.

ஆனாலும், உள்ளிருந்த ஜீவன் மட்டும் உருகி நின்றது.

அவன் மாடியிலிருப்பது தெரிந்ததால், சீதாவை அங்கு அனுப்பினாள்.

JUN 12 2010

பின்புறம் நீச்சல் குளத்தருகில் நடக்கும் வேலைகளைப் பார்வை இட்டுக் கொண்டிருந்தபோதுதான், அவனுடைய அழுத்தமான காலடி ஓசைகள் மனதில் எதிரொலித்தன.

சுழற்காற்றாய் தன்னைச் சுழற்றி அடித்து விடும் அவன் பார்வையையும் பேச்சையும் நினைத்து அஞ்சியவள், வேகமாக முன்னே சென்று ஆட்களுடன் இயல்பாகப் பேச ஆரம்பித்தாள்.

நீச்சல் குளத்திற்கும், சுற்றிலுமிருந்த அறைகளிலும், தரையில் டைல்ஸ் பதிக்கும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

திடீரென அவன் குரல் வெகு அருகில் சீறலாய், ஒரு வெப்ப மூச்சுடன் கேட்டது.

"நேத்து மதியமே திரும்பி வரேன்னு சொல்லிட்டுப் போனே...? ஆளையே காணோம்... நான் கூட இருந்து எல்லாத்தையும் முடிச்சிட்டுப் போய் டின்னருக்கு ரூபாவை அழைச்சிட்டுப் போக லேட்டாயிடுச்சி!

"எடுத்துக்கிட்ட வேலையை சரியா செய்யாம, இப்படிக் கனவில மிதந்துட்டிருந்தா, என்னோட இன்வெஸ்ட்மெண்ட் என்னாகிறது?

"இனிமேயாவது வேலையில கவனத்தை செலுத்து! என்ன... தூண்டில்லே மீன் சிக்கிடுச்சா?"

நக்கலாக, ஆனால் ஆணையிடும் குரலில் கேட்டு விட்டுச் சென்றான்.

பவி அவனைத் திரும்பிப் பார்த்தபோது, ஈரத்தில் பளபளத்த விழிகள் அவன் உருவைக் கலங்கலாய், நிழல் பிம்பமாய்க் காட்டின.



திடீரென்று நின்று திரும்பிப் பார்த்தவனின் பார்வை, ஒரு கணம் உறைந்தது.

'இந்த உலகத்தையே என்னால் வசப்படுத்த முடியும்... உன்னை தவிர!' என்ற செய்திகளை அவள் விழிகளில் வாசித்து அறிந்தபோது, மனம் இளகி, ஏனோ இதயம் குலுங்கியது.

பவி, தன் பார்வையைக் கஷ்டப்பட்டு விலக்கினாள்.

"கடவுளே இந்த வேலையை முடித்து, இந்த வேதனையிலிருந்து சீக்கிரமே என்னை விடுபடச் செய்துவிடு!" என்று இறைஞ்சியது இதயம்!

காலையில் சிறு தூறலாய் சிதறிய வானம், இப்போது நன்றாக வெளுத்து சூரியனை அறிமுகப்படுத்தி இருந்ததால், வேலைகள் தடையின்றி நடந்தன.

தன் மனதிலும் இந்தக் கருமை இருட்டு சீக்கிரமே விலகி ஒரு நாள் வெளிச்சம் வருமென்றும் மனம் தெளிவடைவதாய்...!

அன்று முழுவதும் முதுகில் ஊசியாய் குத்திய பார்வைகளைத் தவிர்த்து வந்தாலும், அவள் கிளம்பும் போது ஏதோ ஒரு தவிப்புடன் நிமிர்ந்தாள்.

மாடியிலிருந்து ப்ரனேஷின் ஊடுருவுகின்ற பார்வை மட்டுமே பதிலாய்...!

மனதை வசியம் செய்த பார்வையை விலக்கி, தலையைக் குலுக்கியபடித் திரும்பி வெளியில் வந்தாள் பவி!

இந்தக் கல் நெஞ்சக் காரனின் மனம் என்றாவது கனிந்து என்னைப் புரிந்து [illegible] தெரியா எதிர்பார்ப்பு!



JUN 12 2010

கெஸ்ட் ஹவுசிற்கு வந்ததும், இந்த வாரக் கடைசியில், மீண்டும் கல்பனாவின் பாட்டி தாத்தாவைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் நிலை பெற்றது.

மனதை மாற்றி கல்பனாவைப் பற்றி சிந்தித்தபோது புதிதாய் ஒரு பாச ஊற்று பீறிட்டுக் கிளம்புவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

* * *

மறுநாள் 'சைட்'டுக்கு வந்தபோது, ரிசார்ட்டுக்கான வேலைகள் முக்கால்வாசி முடிந்திருப்பதை உணர்ந்ததும், பிரிவின் தாக்கம் மனதினுள் எழ ஆரம்பித்தது.

உட்புற வேலைகள் முடிந்து, மூங்கில் குடில்களும் கட்டி முடிக்கப்பட்டிருந்தன.

இரண்டு நீச்சல் குளங்களும் தயாராகி, மற்ற வேலைகளும் முடியும் தருவாயிலிருந்தன.

செயற்கை நீர்வீழ்ச்சியிலிருந்து சலசலத்த நீரின் சப்தம், எங்கோ ஒரு காட்டுக்குள் சிரித்துச் சுழித்தபடி ஓடும் சிற்றோடையை நினைவு படுத்தியது.

பின்புறமிருந்த பெரிய கிணறை சுத்தம் செய்து தூர் வாரிப் பயன்படுத்திக் கொண்டிருந்தாலும், வேலை ஆரம்பித்தவுடனே ஈசான்ய மூலையில் ஒரு போர் வெல்லும் போட்டிருந்தனர்.

இன்று புதிதாய்ப் போட்டுக் கொண்டிருந்த இன்னொரு ஆழ் துளைக் குழாயின் சப்தம், பின்புறமிருந்து வந்தது வேறு பெரும் இரைச்சலாய்...!

ஆனால், முன்புறமிருந்த புல்வெளியும், தோட்டத்து மலர்களும் பவியின் மனதில் மாயம் செய்து இதப் படுத்தின.



குழந்தைகள் விளையாட்டுமிடம் தயாராகிக் கொண… …ருக்க, வரிசையாக வண்ணக் குடைகள் அமைக்கும் வேலை மட்டும் மீதமிருந்தது.

மேல்மாடியிலும் ரூஃப் கார்டனுக்கான வேலைகள் முடியும் நிலையில் இருந்தன.

எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு, பின்புறம் சென்றபோது, மனம் பனிப்பாறையாய் இறுகி உறைந்திருந்தது.

தன்னையே யோசனையுடன் தொடர்ந்த ப்ரனேஷின் பார்வைகளை, பவித்ரா உணரும் நிலையில் இல்லை.

போர்வெல் போட்டு முடித்து வெள்ளமாய்ப் பெருகிய நீரைக் கண்டபோதுதான், மனதில் மெல்ல மெல்ல ஒரு தெளிவு வந்தது.

பூமித்தாயின் பொறுமையை நினைத்தால் விழி ஓரம் கசிந்தது.

என்றுமே பூமி பேசுவதில்லை... முகம் சுருக்குவதில்லை!

எவ்வளவு ஆழமாக அதன் இதயத்தில் துளையிட்டாலும், மனிதனுக்குத் தண்ணீரை மட்டுமே பரிசளிக்கிறது...

எத்தனை முறை தோண்டி விதைத்தாலும், பூக்களால் புன்னகைத்து, வள்ளலாய் கனிகளைத் தருகின்ற அதன் பொறுமையை நினைத்தால் மனதிற்குள் பிரமிப்பாய்...!

அன்றிரவு அம்மாவுடன் பேசி [illegible] போது, மறுநாள் காலையிலிருந்தே மனம் [illegible] சலனங்களற்ற அமைதியான [illegible]

எது வந்தாலும் எதிர்கொள்ளும் நேர்ப் பார்வையும், எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவமும், கைவசப்பட்டிருந்தன.

பங்களாவுக்கு வந்தவுடனே சதீஷும், மேனேஜரும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, மெதுவாக அங்கு சென்றாள் பவித்ரா.

''சதீஷ்... எனக்கு இன்னிக்குக் காலையிலதான் ஒரு ஐடியா வந்தது... ஹனிமூன் காட்டேஜுக்குப் பின்னாடி நிறைய மரங்கள் இருக்கில்லையா?

''அங்க ரெண்டு மரங்ளுக்கு இடையில ''ஹேமக்''ன்னு சொல்வோமே, அந்தக் கயித்து ஊஞ்சலை அங்கங்கே கட்டி வச்சிடலாம்...

''அது தேனிலவுத் தம்பதிகளையும், வெளிநாட்டுப் பயணிகளையும் ரொம்ப அட்ராக்ட் பண்ணும்... அங்கயும் சுத்தம் பண்ணி, புல்வெளி மாதிரி செஞ்சிடலாம்!

''அங்கங்கே தொட்டியிலே செடிகளை வச்சி, நடுவுல இருக்கற அந்த இடத்துல ஒரு சின்ன தாமரைக்குளம் மாதிரி செயற்கையா வெச்சிட்டோம்னா... டூரிஸ்ட்டுங் களுக்கும் அது ரொம்பப் பிடிக்கும்!'' என்றாள் புன் னகையுடன்.

மேனேஜருக்கும், சதீஷுக்கும், அந்தத் திட்டம் மிகவும் பிடித்துப் போனது.

''ஓ.கே. மேடம்! ப்ரனேஷ் சார் கிட்ட சொல்லிட்டீங் கன்னா, நாளைக்கே அந்த வேலைங்களை ஆரம்பிச்சிட லாம்'' என்றான் சதீஷ்.

மேனேஜர் விடைபெற்றுப் பின்புறம் சென்றார்.



...திருவரும் அதைப் பற்றி சுவாரசியமாகப் பேசிக் ...கொண்டே வந்தபோது, எதிரில் வந்த ப்ரனேஷை ...இருவருமே கவனிக்கவில்லை.

...எவ்வளவு இடைவெளியில் ஒவ்வொரு 'ஹேமக்' ...யும் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று விவரித்துக் ...கொண்டு வந்தாள் பவி.

...திடீரென்று யார் மீதோ இடித்துக் கொள்ள, துள்ளி ...விலகியவள், ''சாரி...'' என்றபடி நிமிர்ந்தாள்.

எதிரே, விழிகளில் கோபச்சாயலோடு ப்ரனேஷ் நின் ...றிருந்தான்.

''என்ன சதீஷ்... எதிர்ல வரவங்க மேலக்கூட கவன ...மில்லாம, வேலை நேரத்தில அப்படி என்ன பேச்சுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

குத்தலாக வந்தது அவன் குரல்.

''இல்லை சார்... மேடம் புதுசா ஒரு அரேன்ஜ்மெண்ட் சொன்னாங்க... அதப்பத்தி டிஸ்கஸ் பண்ணிட்டு இருந்தோம். அதான்!'' என்றவன், பவியின் ஐடியாவைக் கூற ஆரம்பித்தான்.

அலட்சியமாகக் கேட்க ஆரம்பித்தவனின் முகபாவம் மாறி, விழியோரம் ஆச்சர்ய மின்னல் ஒன்று புதிதாய் வந்தது.

''எக்ஸ்கியூஸ் மி சார்... எனக்கு வேலையிருக்கு நான் வரேன்!''

வேகமாகச் சென்ற பவித்ராவிடமே, அவன் விழிகள் கூர்மையுடன் பதிந்தன.

* * *

JUN 12 2010

மதியம், நீர் வீழ்ச்சியின் அருகே சென்று நின்று, அது சிதறலாய் வழியும் அழகில் மனம் லயித்து நின்றிருந்த பவியின் மனதில் பல எண்ணங்கள் மிதந்தன.

எல்லாவற்றையும் ஒரு நொடியில் கலைத்தது. காதோரம் கேட்ட அழுத்தமான ஒரு குரல்!

''ஹூம்! நான்கூட எவ்வளவோ கற்பனை பண்ணி வச்சிருந்தேன்... நம்ம ஹனிமூன்லே, அது மாதிரி ஒரு 'ஹேமக்'கிலே நீ ரிலாக்ஸ் பண்ணிட்டு இருக்கும்போது, நான்.... சே! எல்லாம் வேஸ்ட்!

''தகுதி இல்லாத ஒருத்திய விரும்பினதாலே என் ஆசையெல்லாம் நிராசையாய் போயிடுச்சி!''

கோப நெருப்பாய் சுடும் விழிகளுடன் அவளை ஊடுருவினான் ப்ரனேஷ்.

உடனே அதை மறுக்கும் வேகத்துடன் திரும்பி, ''நான்...'' என்றவளின் வார்த்தைகள் உதட்டுக்குள்ளேயே உறைந்தன.

ஒரு வித இயலாமையோடு குனிந்தவளுக்கு, வேறு ஒரு பெண்ணை மணம் செய்து கொள்ளப் போகும் ஒருவனிடம்... தன் மீது வெறுப்பை மட்டும் உமிழ்பவனிடம்... தன் தாயின் வாழ்க்கையில் நடந்த இருண்ட பக்கங்களை விவரிக்க மனம் ஒப்பவில்லை.

எப்போதுமே, சொல்லிப் புரிவதில்லை நேசத்தின் அளவென்று தோன்றியது.

அப்படியே, தன் சகோதரியைப் பற்றிக் கூறினாலும் அதனாலேயே அவன் தன்னையும், தன் அம்மாவையும் தவறாகவே கணித்து, கேவலமாக நினைக்க மாட்டா



ளென்பது என்ன நிச்சயம் என்றும் எதிர்க் கேள்வி கேட்டது, உள்ளம்!

முகத்துக்கு எதிரே சொடக்குப் போட்ட விரல்களால், நினைவுகளில் இருந்து கலைந்து நிமிர்ந்தாள்.

''என்ன யோசனை...? இப்போ என்ன பொய் சொல்லி இவனை ஏமாத்தலாம்னா...? இனிமேலும் ஏமாற நான் ஒன்னும் முட்டாள் இல்லை... தெரியுதா?

''எனிவே... உருப்படியா ஒரு ஐடியா குடுத்ததுக்கு தேங்க்ஸ்!'' என்று கூறிவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்றான் அவன்.

மனம் ஊமையாய் அழ, தனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்க வேண்டும் என்ற சுயபச்சாதாபம் எழுந்தது.

அவளை பலவீனப்படுத்திய அவனுடைய பொன்னான நினைவுகளின் தாக்கத்தால் மௌனக் கண்ணீரில் கரைந்தாள் அவள்.



## 13



பவித்ரா, அந்த ஞாயிற்றுக் கிழமையும் காரை எடுத்துக் கொண்டு கல்பனாவின் வீட்டுக்குச் சென்ற போது, பெரியவர்கள் இருவருமே அவளைப் பற்றி [illegible] றக்க மறுத்து விட்டனர்.

தங்களுடைய பேத்தியின் வாழ்க்கையைப் பற்றி

மேலும் அவர்களைத் தொந்தரவு செய்ய மனமின்றித் தோல்வியுடன் அவள் திரும்பி வந்தபோது, சீதா ஏதாவது சினிமாவுக்குப் போகலாம் என்றாள்.

அவளுக்கும் ஒரு மாற்றம் தேவையாக இருந்ததால், கிளம்பிச் சென்றனர்.

அது நல்ல காமெடித் திரைப்படம் என்பதால், வேறு எந்த நினைவுமின்றி வேதனைகளைக் கரைத்து நெஞ்சமே லேசாகிப் புன்னகைத்தபடி வெளியே வந்தபோது, அங்கு சதீஷை எதேச்சையாக சந்திக்க நேர்ந்தது.

மூவரும், திரைப்படத்தை விமர்சனம் செய்தபடி வெளியே வந்தபோது, சீற்றத்துடன் அவர்களையே நோக்கியபடி காரில் ஏறிய ப்ரனேஷை அவர்கள் கவனிக்கவில்லை.

அன்றிரவு அவளிடம் பேசிய குழலி, மிகவும் ஓய்ந்து போயிருப்பதும், தன் பிரிவினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதும் பவிக்குப் புரிந்தது.

ஒரு மாதத்திற்குள் வேலை முடிந்து விடும் என்று ஆறுதல் கூறிவிட்டு போனை வைத்தாலும், ஏனோ மனதிற்குள் சிறு வலியுடன், அவன் நினைவுகள்!

மறுநாள் ஏனோ அவளை சொல்லம்புகளால் தைத்தபடியே இருந்தான் ப்ரனேஷ்.

பிறகு வந்த நாட்களில் எல்லாம் தனிமையில் அவனிடம் பேச வகையின்றி சீதாவை தன்னருகிலேயே இருக்கும்படிப் பார்த்துக் கொண்டாள் பவித்ரா.

தற்காப்புக் கேடயமாக அவளுடன் ஒட்டிக் கொண்டே பொழுதைக் கழித்ததில், அவனும் ஏனோ அவளருகில் வரவே இல்லை.



நாட்கள் செல்லச் செல்ல, இந்த வேலை முடிந்த பிறகு அவனைப் பார்க்க முடியாதே என்ற ஏக்கமும், தவிப்பும் உள்ளே விரவிப் பரவின.

தன் மீதே கோபம் வந்தது அவளுக்கு!

* * *

காற்றாய்க் கடுகிச் சென்ற ஒரு மாதத்துக்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமை ரத்தினம் பொள்ளாச்சிக்கு வந்திருந்தார்.

எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, பவித்ராவின் கையைப் பற்றிக் குலுக்கி தன் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

"எக்ஸலண்ட் டீம் ஒர்க் பவித்ரா! நான் எதிர்பார்த்ததுக்கும் மேலேயே நல்லா வந்திருக்கு... நாம இது வரைக்கும் பண்ணினதிலே இந்த ப்ராஜெக்ட் தான் பெஸ்ட்டுன்னு நான் நினைக்கிறேன். தேங்க்யூ" என்றவரின் குரலிலேயே, ஒரு பெருமிதம் வெளிப்பட்டது.

அன்று ஞாயிறென்பதால் சீதா ஊருக்குச் சென்றிருந்தாள்.

வேலையாட்களும் வராததால், சதீஷிடமும், மேனேஜர், சூப்பர்வைசர் இருவரிடமும், அவர் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கும்போது தான் ப்ரனேஷின் கார் உள்ளே வந்தது.

ஏனோ, இதயம் தன் வசமின்றித் துடிக்க ஆரம்பிக்க வேகமாக உள்ளே சென்றாள்.

JUN 12 2010

லிப்ட் இயங்க ஆரம்பித்திருக்க, அழகான மர வேலைப் பாடுகளுடன்

பிரகாசமாய் ஒளிர்ந்த சாண்டிலியரும், லஸ்டர் விளக்குகளும், அந்தப் பெரிய கூடத்துக்குப் புதுப் பொலிவைத் தந்தன.

நடுவில் தொடங்கிய மாடிப்படிகள் இரண்டாகப் பிரியும் இடத்தில், எதிரிலிருந்த சுவரில் பெரிய ஓவியமொன்று புதிதாய் வரையப்பட்டிருந்தது... பவியின் யோசனைப்படி!

ஒரு பெரிய மரத்திற்கு அடியில் புல்லாங்குழல் இசைக்கும் கண்ணனும், அருகில் காதலாகிக் கசிந்துருகி அந்தக் குழலோசையில் மெய்மறந்து நிற்கும் ராதையின் ஓவியமும், அற்புதமாய் வரையப்பட்டிருந்தன.

அந்த மாயக் கண்ணனைப் பார்க்கும்போது, தன் உள்ளம் கவர் கள்வனின் நினைவு தான் உடனே வந்தது, பவிக்கு!

அவன் பெயரும் கண்ணன் தானே என்ற நினைவில், தன்னை ராதையாகக் கற்பனை செய்து ரசித்துக் கொண்டே மெதுவாக மாடிப்படிகளில் ஏறினாள்.

திடீரென ப்ரனேஷின் குரல் இடையிட்டு, அவளைத் தூக்கி வாரிப் போடச் செய்தது.

"மிஸ். பவித்ரா... ஒரு நிமிஷம்!" என்றபடி அவளுடன் சேர்ந்து மாடியேற ஆரம்பித்தான்.

"என்ன... ரொம்ப ரசிச்சிட்டே வந்த மாதிரித் தெரிந்தது! அந்த ஆயர் பாடியிலக் கண்ணனைச் சுத்திதான் நிறைய கோபிகைகள்...

"ஆனா உன் வாழ்க்கையில, உன்னைச் சுத்திதான் ஏராளமான கண்ணன்கள்... இல்லை?"



ஏளனமும் சீற்றமும் கலந்து வந்தவனின் குரலில், அவள் உள்ளம் பெரும் ஆயாசமாய்!

பதிலாக ஒன்றும் பேசாமல், அவள் வேகமாக முன்னே சென்றபோது, மாடியில் ஒருவர் கூட இல்லை.

தனிமையில் இவனிடம் மாட்டிவிடக் கூடாதென்ற எச்சரிக்கை உணர்வு உடலெங்கும் பரவி காரிடாரில் சென்று கீழே பேசிக் கொண்டிருந்த ரத்தினத்தின் பார்வை படும் இடத்தில் நின்று கொண்டாள்.

திடீரென்று ஒரு கை அவளைப் பற்றி வேகமாக இழுத்தது.

தன் இயல்பின்றித் தடுமாறியபோது, அடுத்த நிமிடமே ஒரு அறைக்குள் ப்ரனேஷின் கைப்பிடிக்குள் இருந்தாள், பவித்ரா.

கோபமும் தவிப்பும் சேர்ந்து முகம் சிவந்து விட, வேக மூச்சுடன் நிமிர்ந்தவளையே அக்னிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். அவன்... சூரியனைத் துண்டாக்கிச் செய்த விழிகளுடன்!

"என்னை விடுங்க... ப்ளீஸ்!" அவள் விலகப் போராடினாள்.

"உஷ்... சத்தம் போடாதே! மயிலே, மயிலேன்னா இறகு போடாதும்பாங்க! எல்லார்கிட்டயும் சிரிச்சிப் பேசற நீ, என்னைப் பாத்தா மட்டும் பெரிய பத்தினியாட்டம் நாடகமாடினா நான் நம்பிடுவேனா? உன்னோட 'ட்ருகலர்' என்னன்னு எனக்குத்தான் முன்னாடியே தெரியுமே...!"

நக்கலாகக் கூறியவன் அவளைப் பற்றி இறுக அணைத்தான்.

எலும்புகள் நொறுங்கி விடும் போல் உடல் வலிக்க உள்ளத்தில் அவன் மேல் [illegible]க்கை நொறுங்க ஆரம்பித்தது.

ப்ரனேஷ் இந்த அளவுக்கு இறங்குவானென்று எதிர்பார்க்காததால், மனம் விண்டு விடுவது போல் வலித்தது.

எங்கோ கேட்பது போல் ஒலித்த குரல்கள் இருவரையும் இவ்வுலகுக்கு மீட்டு வந்தன.

அவன் அவளை விடுவித்தவுடனே, பெரிய ஆபத்திலிருந்து தப்பித்த உணர்வுடன் வேகமாகச் சென்று குளியலறைக்குள் நுழைந்த பவித்ராவுக்கு உடல் பலமாய் நடுங்கியது.

அங்கு வந்தவர்களுடன் இயல்பாகப் பேசியபடி அவன் சென்ற காலடியோசையும், குரல்கள் தேய்ந்து மறைந்ததையும் உறுதிப்படுத்தியபடி, வெளியே வந்தாள்.

பிறகு, அருகிலிருந்த தூணில் சாய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

தனக்கு மட்டும் ஏன் இப்படி என்ற வேதனை, உயிரின் ஆழம் வரை சென்று தாக்கியது.

அவன் முகத்தில் விழிக்கவே பிடிக்கா விட்டாலும், வேலையும், ரத்தினம் சாரிடம் கொடுத்த வாக்கும் நினைவு வந்து அவளை சோர்வடையச் செய்வதாய்...!

அவன் என்னதான் கூறினாலும், இது என்னுடைய ஆணி வேர்களின் சுவடுகள் பதிந்த இடம் என்ற பெருமை, மனதிற்குள் வந்து தெம்பளித்தது.

* * *

இருவருக்குமிடையே, மேலும் மூன்று வாரங்கள் பனிப்போருடனே செல்ல, அந்த வாரம் சென்னையிலிருந்து வந்திருந்த ரத்தினத்திடம் பேசினாள் பவித்ரா.



மனதில் ஒரு முடிவுடன், "சார்... நான் இந்த வாரமே ஊருக்குக் கிளம்பிடலாம்னு இருக்கேன்... எல்லா வேலைங்களும் முடிஞ்சிட்டதாலே, இனிமே சதீஷும் சூபர்வைசரும் பாத்துப்பாங்க! அம்மா வேற, நான் இல்லாமே, ரொம்பக் கஷ்டப் படறாங்க!" என்றாள்.

அவர், ஒரு கணம் யோசித்தார்.

பிறகு, "ஓகே பவித்ரா! நமக்கும் புது வொர்க் ஒண்ணு அங்க வந்திருக்கு! ஆனா இடையில ஒரு முறை, நாம ரெண்டு பேருமே இங்க வர மாதிரி இருக்கும்.

"இன்னும் ரெண்டு மாசத்துல இந்த ரிசார்ட்டுக்கு ஆரம்ப விழா நடத்த ஏற்பாடு செஞ்சுருக்கறதா ப்ரனேஷ் இப்பதான் சொன்னாரு... அதுக்கும் நாம எல்லாரும் வரவேண்டி இருக்கும்!" என்றார்.

அவனை மீண்டும் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பங்களை எண்ணி மனம் விதிர்த்தாலும், அவனைப் பிரியவும் மனம் ஏனோ துணியவில்லை.

"என்னம்மா... ஏதோ யோசனை போலருக்கு!"

ரத்தினம் கேட்டபோது, "ஒண்ணுமில்லை சார்..." என்று மெலிதாக முறுவலித்தாள் அவள்.

* * *

மறுநாள் சீதாவிடம் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு, விடிகாலையிலேயே ஆட்டோவில் கிளம்பித் தங்கள் பூர்வீக பங்களாவுக்குச் சென்றாள்.

JUN 12 2010

விடியலின் சுவாசச் சீறலாய், தென்றலின் ஸ்பரிசமும், யாரும் இல்லாத ஒரு தனிமையும், ஒருவிதக் குளிருடன் மனதைத் தீண்டின.

அவ்வளவு காலையிலேயே அவளை எதிர்பார்த்திராத வாட்ச்மேன், புன்னகையுடன் ஓடி வந்து வணங்கினான்.

திரும்பிய இடமெல்லாம், அன்று தன்னுடைய முன்னோர்களின் கதையைச் சொல்வது போல்...!

பங்களாவின் உள்ளே சென்று முன்புற அலுவலக அறையில், சீர் செய்து வரிசையாய் மாட்டப்பட்டிருந்த ஓவியங்களைக் கவனித்தாள்.

தன் தந்தை கதிர்வேலுவுக்கு அடுத்ததாக, அப்பா சதுர்வேதியின் படமும், கடைசியாக ப்ரனேஷின் புகைப்படமும் மாட்டி இருந்ததைக் கண்கள் இமைக்காது அளவெடுத்தன.

அவன் முகத்தில் பதிந்த விழிகளை அகற்ற முடியாமல் தவித்த போது, அவனுடைய பார்வை நிஜம் போலவே அவளை ஊடுருவுவதாய்!

அந்த நிமிடம், தன் சுயத்தைத் தொலைத்து, காதலை வரமாக வேண்டி அந்த வனமெங்கும் தவமிருந்தது மனது.

பழைய புத்தகங்களைப் பொக்கிஷமாகப் புரட்டுவது போல், ஒவ்வொரு இடமாகச் சென்று எல்லாவற்றையும் தன் கேமராவிற்குள் பதித்துக் கொள்ள ஆரம்பித்தாள் பவி...

இளமைக் கால இனிய ஞாபகங்களுடன் அனைத்துமே அதில் பதிவாகின.



தோட்டத்திலும், பங்களாவின் உள்ளேயும், ஒவ்வொரு இடமாக 'க்ளிக்' செய்து கொண்டே வந்தபோது, காலுக்கடியில் பளபளத்த கிரானைட் அவளைக் கண்ணாடியில் பிரதிபலிப்பது போல்..!

பங்களாவின் பின்புறம் சென்று 'ஸ்டில்ஸ்' எடுத்து விட்டுத் திரும்பி வந்து, ஒரு பிலிம் ரோல் முடிந்து மற்றொன்றை மாற்றும்போது, திடீரென்று லிப்ட் இயங்கும் ஒலி கேட்க, யாராக இருக்கும் என்ற யோசனை வந்தது.

மனதைக் கையகப்படுத்தி, எதிரில் தெரிந்த காட்சிகளில் செலுத்தியபடி படிகளில் ஏறிக் கொண்டே படமெடுத்தபோது, மேல் மாடியில் அமைக்கப்பட்டிருந்த ரூஃப் கார்டன், மனதைப் பறித்தது.

வண்ண மலர்களும், அந்த மலர்களின் செவிகளில் காதல் வேதம் ஓதும் வண்ணத்துப் பூச்சிகளும், இதமாய் வருடிய தென்றலும் சோர்ந்திருந்த மனதிற்குள் சாமரம் வீசின.

அங்கிருந்த அழகை எல்லாம் ரகசியமாகத் தன் கேமராவில் பதித்து விட்டு, ப்ரனேஷின் ப்ரத்யேக அறைக்குள் நுழைந்தாள்.

ஏனோ அதைப் புகைப்படமாய் எடுத்து, அதன் நிழலை தரிசிக்கும் மன தைரியம் வரவில்லை.

கேமராவை மூடி வைத்து உள்புறமிருந்த பெட்ரூமுக்குள் சென்றபோது, ஜன்னலருகே நின்றிருந்த அந்த உயர்ந்த உருவத்தைக் கண்டு சிலையாய் உறைந்து நின்றாள் பவித்ரா.

JUN 12 2010



# 14



ஒரு சிறுத்தையின் லாவகத்துடன், 'வெல்கம் டு மை ஸ்வீட் நெஸ்ட்!'' என்றபடி மெதுவாக ப்ரனேஷ் முன்னால் வந்தான்.

கால்கள் பூமிக்குள் வேரோடினாற் போல அசையாமல் நின்றவளின் மனதில், பயக்குமிழ்கள் அமிழ்வதும் எழுவதுமாய் இம்சை செய்ய ஆரம்பித்தன.

இந்த நோத்தில் இவன் எப்படி இங்கு வந்தான் என்ற கேள்விக்கு விடை தேடியபடி, வசியம் செய்யப்பட்ட மான் போல், இமைக்காத விழிகளுடன் அவள் நின்றிருந்த போது அருகில் வந்து நின்றான் அவன்.

புருவங்களை நெறித்தபடி, ''என்ன... ஆச்சர்யமா இருக்கா? இவன் எப்படி இவ்வளவு காலையில இங்க வந்தான்னு.... ம்... நேத்து ரத்தினம் அங்கிள் எங்க வீட்டிலதான் டின்னர் சாப்பிட்டுட்டுக் கிளம்பிப் போனாரு!

''நீ இன்னிக்குக் கிளம்பறதா சொன்னப்பவே நான் யூகிச்சிட்டேன்... நான் 'சைட்'டுக்கு வரதுக்கு முன் னாடியே நீ வந்து பாத்துட்டுப் போயிடுவேன்னு!

''இந்த ஒரு விஷயத்துலயாவது உன்னைப் பத்தி என்னோட கணிப்பு சரியா இருந்ததே...!'' என்றான் விரக்தி யாக.

பவி, ஒன்றுமே கூறாமல் அவனையே வெறித்தாள். அவன் விழிகளும் காயப்பட்ட வலியும், எதையோ



...க்கப் போகிற அலைப்புறுதலும், ஒரு கணம் தோன்றி மறைந்தன.

உதிர்ந்த மலர்களின் சோக நிசப்தமாய், மனம் வாடிப் போய் அவனுடன் போரிட தைரியமின்றி அமைதியாய் நிருந்தது.

திடீரென்று அவன் முகம் புன்னகை தேசமாய் மாற, அவளுக்குள் பெரும் வியப்பு வந்தது.

வெகு அருகில் வந்தவன், ''ஜஸ்ட் எ குட்பை விஷ்!'' என்று முணுமுணுத்தபடி, மெதுவாக அவள் முகத்தை ...ந்தினான்.

இதழ்களில் அழுத்தமாய் தன் முத்திரையைப் பதித்த போது, நதியின் வேகச் சுழலில் சிக்கியது போல், பவிக்குள் ஒரு படபடப்பு!

அநத நிமிடம், மனதிற்குப் பிடித்தவரிடம் தோற்றுப் போவது கூட ஒரு சுகமாய்த் தோன்றியது.

மறுகணமே இன்றே இறந்துவிட மாட்டோமா என்ற ஏக்கம் உடல் முழுவதும் பரவியது.

ஆனால், வாழ்க்கையின் நிஜம் பளிச்சென்று முகத்தி லறைந்தது.

வேகமாகத் தன்னை விடுவித்துக் கொண்டு ஓடிய போது, வழிய ஆரம்பித்த கண்ணீர்த் துளிகள் வழியை மறைத்தன.

எப்படிப் படிகளில் இறங்கி வந்தாளென்றே புரியாமல் ஓடிச் சென்று ஆட்டோவில் அமர்ந்து ஒரு நெடுமூச்சுடன் நிமிர்ந்தாள்.

மேலே, கம்பீரமாய் நின்றிருந்த ப்ரனேஷைக் கண் டதும், இதயத்தில் ஒரு விதக் [illegible] பரவியது.



JUN 12 2010

'உனை விட்டு நீங்கிச் சென்றால், நான் இழக்க என்னிடம் ஏதாவது மிச்சப்படுகிறதா என்ன...? என் இனிமையான வாழ்க்கையைத் தவிர...' என்ற சங்ககாலத் தலைவியின் வரிகள் கண் முன் தோன்றி, உடலும் மனமும் குலுங்கின.

''என்னம்மா... பஸ் ஸ்டாண்டுக்குத் தானே?''

ஆட்டோ டிரைவர் கேட்க பதிலாக வார்த்தை வராமல் தொண்டையடைத்தது!

''ம்...'' என்றபடி பின்புறம் சாய்ந்தபோது, தொலைந்து போன இதயத்தைத் திருப்பிக் கேட்காமலே தான் செல்வது புரிந்தது.

இத்தனை வருடங்கள் கழித்தும், தன்னை அவனுடைய ஞாபகங்கள் இவ்வளவு ஆட்படுத்துமா என்ற வேதனை கண்ணீர்த் துளிகளாய் வழிந்தன.

* * *

கோயம்புத்தூருக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்த போது, இன்றாவது தன் தேடலுக்கான பதில் கிடைக்குமா என்ற ஆதங்கத்துடன் சென்றாள்.

ஆனால், கல்பனாவின் அம்மா வீடு பூட்டி இருந்தது.

ஆட்டோவை காத்திருக்க வைத்து விட்டு, பக்கத்து வீட்டில் போய் விசாரித்து வருவதற்காக அழைப்பு மணியை அழுத்தினாள்.

கதவைத் திறந்த பெண்ணைப் பார்த்ததும், பெரும் ஆச்சர்யம் வந்தது பவிக்கு!

அவளுடன் காலேஜில் படித்த வேணி அங்கு நின் றிருந்தாள்.



அவளும் ஆச்சர்யமாகி, ''நீங்க... என் ஃப்ரெண்ட் பவித்ராவோ? கல்பனா இல்லையே...?'' என்றாள் ஆர்வத் துடன்.

'ஆமாம்' என்று தலையசைத்தபடி புன்னகைத்து, பவி அவள் கைகளைப் பற்றினாள்.

''எவ்வளவு நாளாச்சு பவி... உன்னைப் பாத்து! எப்படி இருக்கே...? கல்யாணமாயிடுச்சா?'' படபடவென்று கேள்விகளை அடுக்கினாள் வேணி.

''நான் இப்போ சென்னையில இருக்கேன்... இங்கே ஒரு ப்ராஜெக்ட் விஷயமா வந்தேன்... நீ எப்படி இருக்கே...?''

''நான் நல்லாருக்கேன்... ரொம்ப நாள் கழிச்சி இன் னிக்கு தான் மீட் பண்ணி இருக்கோம்... நிறையப் பேச ணும் போலருக்கு! ஆட்டோவ கட் பண்ணி அனுப்பிட லாமா?'' என்றாள் வேணி.

''சரி'' என்றபடி ஆட்டோவை அனுப்பிவிட்டு வந்த பவித்ராவை உள்ளே அழைத்துச் சென்று அமர வைத் தாள்.

''அது சரி... என் அட்ரஸ் உனக்கு எப்படிக் கிடைச்சது? நம்ம ஃப்ரெண்ட்ஸ் யாராவது குடுத்தாங்களா?'' என்று கேட்டாள்.

''இல்லை வேணி! பக்கத்து வீட்டுக்கு வந்தேன்... அவங்க இல்லை, வீடு பூட்டி இருந்தது... அதான் இங்க விசாரிக்கலாம்னு பாத்தா, நீ இருக்கே...''

''பவி... உனக்கும் கல்பனாவத் தெரியுமா? நான் [illegible] வந்து புதுசில அவங்களைப் பாத்தது [illegible] ஓடிப் போய் விசாரிச்சா அப்புறமதான் தெரிஞ்சது...

அவங்க வேற யாரோன்னு! அசந்து போயிட்டேன் தெரியுமா?'' விழிகள் மின்னக் கூறினாள் வேணி.

''அது பத்தி விசாரிக்கத்தான் போன மாசமே வந்தேன். ஆனா, அவங்கம்மா எதுவுமே பேச மறுத்திட்டாங்க.

''கல்பனாவப் பத்திப் பேசினாலே கோபப்படறாங்க! என்ன பண்றதுன்னு புரியலை வேணி'' ஒரு பெருமூச் சுடன் கூறினாள்.

''ஒரு நிமிஷம் இரு... உனக்கு முதல்லே குடிக்க ஏதாவது கொண்டுவரச் சொல்றேன்'' என்று உள்நோக்கிக் குரல் கொடுத்து விட்டுத் திரும்பினாள் வேணி.

''எனக்கு ஒண்ணும் வேணாம்... கல்பனா இப்ப எங்கே இருக்காங்கன்னு மட்டும் தெரிஞ்சாப் போதும்... உனக்குத் தெரியுமா வேணி?''

ஆவலுடன் கேட்டாள்.

''ம்... தெரியும்! ஆனா நீ இந்த ஜூஸைக் குடிச்சப்புறம் சொல்றேன்.''

புன்னகையுடன் சமையல்காரம்மா எடுத்து வந்த டம்ளரை அவளிடம் கொடுத்தாள்.

அதை மெதுவாகப் பருகினாள் பவித்ரா.

''ப்ளீஸ் வேணி... அவங்க அட்ரஸை நீயாவது சொல்லு!'' என்றாள் கண்களில் கெஞ்சலுடன்.

ஒரு புன்னகையுடன் கூற ஆரம்பித்தாள் வேணி!

''கல்பனா இப்ப சிங்கப்பூரில் இருக்காங்க. நான் முதல்லே அவங்ககிட்டப் பேசினப்ப, என் ஃப்ரெண்ட் ஒருத்தி உங்களை மாதிரியே இருப்பான்னு உடனே அவங்களுக்கு ரொம்ப ஆச்சர்யம்!



''ஆனா, அவங்களை அநாதை ஆசிரமத்துல இருந்து எடுத்து வளர்த்ததா அவங்களோட அம்மா அப்பா சொன்ன தாலே, இதப் பெரிசா எடுத்துக்கலை... ஆனா அப்பவே உன்னைப் பாக்கணும்னு ஆசைப்பட்டாங்க...

''எனக்கும் உன்னோட டச் விட்டுப் போயிடுச்சா, என்ன செய்யறதுன்னு புரியலை... நம்ம ப்ரெண்ட்ஸ் சில பேர் கிட்டக் கேட்டுப் பாத்தேன்... நீ சென்னைக்குப் போயிட்டதா சொன்னாங்க!

''ஆமா... நான் கேக்கறேன்னு தப்பா நினைக்கக்காதே பவி... நீ ஏன் அவங்களைத் தேடுறே?'' எனும்போதே அவள் விழிகளில் சிறு ஆர்வம்!

பிறகு அவள் வேணியிடம் எல்லா விஷயங்களையும் கூறிய போது, அவளுக்கும் மிகுந்த ஆச்சர்யம்!

பரபரப்புடன் ''ஒரு நிமிஷம் இரு... வரேன்!'' என்றபடி உள்ளே சென்றாள்.

பிறகு, கல்பனாவின் போன் நம்பரை எடுத்து வந்து பவியிடம் கொடுத்தபோது, அவள் மனதிலோ மகிழ்ச்சி சலங்கைகளின் சப்தம்!

அப்போது அவள் முகத்தையே கவனித்தாள் வேணி.

''எங்க வீட்டுல ஐ.எஸ்.டி. இல்லை... நம்ம தெருமுனை யில ஒரு பூத் இருக்கு... சாப்பிட்டு முடிச்சப்புறம் போக லாமா?'' என்று கேட்டாள்.

''இல்லை வேணி! இப்பவே போகலாமே...'' என்ற பவியின் முகத்தைக் கண்டதும் மறுக்கத் தோன்றாமல் தானும் கிளம்பினாள் அவள்.

மனம் முழுக்கக் கல்பனாவின் நினைவுகள் அணி வகுக்க, தனக்குள்ளேயே யோசித்தபடி வந்தவளை வேணியின் பார்வை வாஞ்சை[illegible]

JUN 12 2010

பவியின் உடல் சிலிர்த்து, உள்ளங்கைகள் திடீரென்று வியர்த்துப் போயின.

'ஐ.எஸ்.டி.' பூத்துக்குள் சென்று, வேணி கல்பனாவின் எண்ணைத் தொடர்பு கொள்ளும்போது மனம் படபடத்து சிறகு கட்டிப் பறந்து புரியாத ஒரு உணர்வில் தவித்தது.

'அம்மா... நான் உன் மகளை உன்னிடம் சேர்த்து விடுவேன்' என்ற நம்பிக்கை ஒளி மனதில் வந்து, விழியோரங்களில் மின்னலாய் கசிந்தன.

* * *

போனில் லைன் கிடைத்ததும் கல்பனாவிடம் நடந்தவைகளை சுருக்கமாகக் கூறிய வேணி, பவியிடம் ரிசீவரைக் கொடுத்தாள்.

ஒரு நிமிடம் என்ன பேசுவதென்று புரியாமல் கண் கலங்கி, தொண்டையடைக்க நின்றவள் சமாளித்துக் கொண்டு, "நான் பவித்ரா பேசறேன்..." என்றாள் மெல்லிய குரலில்.

"பவித்ரா... ரொம்பத் தேங்க்ஸ்மா! என் சந்தோஷத்தை எப்படிச் சொல்றதுன்னே புரியலை... என்னோட ரிஷி மூலமே தெரியாம, எவ்வளவு நாள் நான் தவிச்சிட்டிருந்தேன் தெரியுமா...?

"கடவுள்தான் அதப் புரிஞ்சிக்கிட்டு உன்னை அனுப்பி இருக்கணும்..! அப்புறம், அம்மா எப்படி இருக்காங்க?" வார்த்தைகள் உணர்ச்சிக் குவியலாய் வந்தன.

"ம்... நல்லா இருக்காங்க! நீங்க எப்படி இருக்கீங்க? அம்மாதான் உங்களை நெனச்சி அழுதிட்டே இருக்காங்க... நீங்க இண்டியாவுக்கு எப்போ வருவீங்கன்னு இருக்கு!" மெல்லிய பெருமூச்சுடன் கூறினாள் பவி.



"எனக்கு உடனே அம்மாவப் பாக்கணும் போலருக்கு... அதுவும் என்னை மாதிரியே இருக்கற உன்னையும் பாத்துப் பேசணும். அப்புறம் அம்மா மடியிலப் படுத்து அழணும் போலத் தோணுது...!"

அவளுடைய குரல் கம்மி இருந்த விதத்திலேயே, கல்பனாவும் வெகுவாய் உணர்ச்சி வசப்பட்டிருப்பதை பவி புரிந்து கொண்டாள்.

"அம்மா உங்களைப் பாக்கணும்னு துடிச்சிட்டிருக்காங்க! ஏன்... நானும் தான்!

"ஆனா, இதனால உங்க வாழ்க்கையில ஏதாவது பாதிப்பு வந்திச்சின்னா... அதை எங்களாலத் தாங்கிக்க முடியாது. உங்க ஹஸ்பெண்ட் தப்பா நினைச்சிட மாட்டாங்களே...?" பரிதவிப்புடன் கேட்டாள்.

"இல்லை பவித்ரா... நிச்சயமா நினைக்க மாட்டார்! அவர் ரொம்ப நல்லவர்... மத்தவங்க உணர்வுகளை மதிக்கத் தெரிஞ்சவர்! எங்களோடது லவ் மேரேஜ்...

"அவரும் அநாதை ஆசிரமத்தில வளர்ந்தவர். அந்த வலி, ஏக்கமெல்லாம் அவருக்கும் புரியும்... எங்க ரெண்டு பேரோட அம்மாவும் அப்பாவும் கிடைச்சா, எந்த சூழ்நிலையிலயும் அவங்களை ஏத்துக்கத் தயாராதான் ரெண்டு பேருமே இருக்கோம்...

"இந்த விஷயத்தக் கேட்டா நாம எல்லாரையும் விட அவர்தான் அதிகமா சந்தோஷப்படுவாரு! அதனால நீ பயப்பட வேண்டாம் பவித்ரா... எந்தப் ப்ரச்னையும் வராது!"

அவள் முடித்தபோது, முகம் தெரியாத அந்த மனிதனை நினைத்தால் மனதில் பெரு[illegible]

JUN 12 2010

பவி அவளிடம், ''நான் இப்ப கிளம்பி, ராத்திரியே சென்னைக்கு போயிடுவேன்... நாளைக்குக் காலையில அம்மா உங்களோடப் பேசுவாங்க. சரியா...?'' என்றாள் குரலில் கசிந்த ஆர்வத்துடன்.

''இல்லை... நைட் எவ்வளவு நேரமானாலும் நான் காத்திட்டு இருக்கேன்... நீ அம்மாவப் பேசச் சொல்ல முடியாதா பவித்ரா?''

அவன் குரலில் தெரிந்த தவிப்பும் அழுகையும் பவியை மிகவும் பாதிப்பதாய்... விழிகளில் கண்ணீர் மொட்டு களை அரும்பச் செய்வதாய்...!

''ம்... சரி! நான் போய்ச் சேரவே எப்படியும் பத்து மணி ஆயிடும்... உங்க டைமுக்கு ஒரு மணிக்குள்ளே எப்படி யாவது ட்ரை பண்றேன்!''

உறுதியுடன் கூறியவள், அவளுடைய கணவர் கணேஷையும் விசாரித்து விட்டு வைத்தாள்.

வேணியுடன் திரும்பி வரும்போது மனம் லேசாகி, இலவம்பஞ்சு போல் மென்மையைத் தத்தெடுத்தது. வானையும் வசப்படுத்தியதைப் போன்ற ஒரு பிரமிப்பு வந்தது.

வேணியைப் பார்க்கும் போது, ''தெய்வம் மனுஷ்ய ரூபேண...!'' என்ற வரிகள் ஞாபகம் வந்தன.

எல்லா செயல்களுக்கும் ஏதோ ஒரு காரணமிருப்பது போல் தோன்றியது.

தன் அம்மாவிடம் இதைக் கூறினால் அவர் எப்படி மகிழ்வார் என்ற கற்பனையில் சுகமாய் மிதக்க ஆரம் பித்தது மனது.



வெயில் கூட இதமாய் இருக்க, தென்றல் காற்று வந்து விழி நீரைத் தன் வருடும் கைகளால் துடைத்தது.



# 15



கோவை எக்ஸ்பிரஸில் பயணித்தபோது, மனம் அதைவிட வேகமாகப் பறந்தது.

அதிகாலைப் பறவைகள் அலகினால் இதமாய் தன் சிறகுகளைக் கோதுவது போல், பவித்ராவின் மனம் பாச நினைவுகளை வருட ஆரம்பித்தன.

ஸ்டேஷனிலிருந்து ஆட்டோவில் கிளம்பிச் சென்று, வீட்டு வாசலில் இறங்கிய பவித்ராவை, குழலி சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

பாசத்தில் விழிகள் கசிய அவர் அவளை வரவேற்ற போது, பெட்டியை உள்ளே வைத்தாள்.

பிறகு ''அம்மா! உடனே என் கூட வாங்க!'' என்று அதே ஆட்டோவில் எஸ்.டி.டி. பூத்துக்கு அவரை அழைத்துச் சென்றாள்.

எதுவும் கூறாமல் வந்தவளிடம், ''எங்கே அழைச் சிட்டுப் போறே பவி?'' என்றார் குழலி யோசனையுடன்.

''பேசாம என் கூட வரணும்... உங்களுக்கு ஒரு இனிய அதிர்ச்சி காத்திருக்கு!'' என்றபடி ஐ.எஸ்.டி. எண்களை அழுத்தியவள், முதல் ரிங்கிலேயே ரிசீவர் எடுக்கப்பட் டதை உணர்ந்தாள்.

JUN 12 2010

உடனே கல்பனாவின் குரல் பெரும் தவிப்புடன், "ஹலோ அம்மா!" என்றது.

"அக்கா... நான் பவி! ஒரு நிமிஷம் இருங்க... இப்ப அம்மா பேசுவாங்க" என்றபடி குழலியிடம் கொடுத்தாள்.

உறைந்து நின்றிருந்த அவருக்கு ஒன்றுமே புரியாமல், முதலில் கண்ணீர்த் துளிகள் சரம் கோர்த்து இறங்கின.

பிறகு தன்னை சுதாரித்துக் கொண்டாலும், தவற விட்ட ஒரு பொக்கிஷம் கைக்குக் கிடைத்தது போல்!

அவளை உடனே பார்த்து உச்சி முகர்ந்து அணைத்து மகிழ வேண்டும் போல் ஒரு உணர்வு!

"கல்பனா..." கம்மிய குரலில் அவர் பேச ஆரம்பிக்க இருவருக்கிடையேயும் மௌன விசும்பல்களும், வார்த்தைகளில் உணர்வுகளின் விசுவ ரூபமுமே அங்கு ஆட்சி செய்தன.

நதிகள் எந்நாளும் பின் செல்வதில்லை... ரிஷி மூலத்தை அறிய நினைப்பதில்லை!

ஆனால் இன்று தன் ரிஷிமூலத்தை அறிந்த அந்த நதியின் மனதில் புதிதாய் ஒரு பரவசம்...!

பிறகு பவியிடம் பேசிய கணேஷ், எப்படியாவது இரண்டு மாதம் கழித்து லீவு எடுத்துக் கொண்டு இந்தியா வருவதாகக் கூறினான்.

கண்ணீருடன் வந்த குழலி, வீட்டுக்குள் நுழைந்தவுடன் "பவி..." என்று ஒரு விம்மலுடன் அவளை அணைத்துக் கொண்டார்.

வெகு நேரத்திற்குப் பிறகு இருவரும் சாப்பிட்டபோது, மனம் சிறிது தெளிந்திருந்தாலும், புதிதாய் ஒரு பிரமிப்பு வந்திருந்தது, குழலியின் மனதில்!



அன்றிரவு, இரு குடும்பங்களும் ஒரே விதமான மனநிலையிலிருந்தனர்.

புதையல் கிடைத்தது போல் ஒரு பரவசமும், பிரிவின் சோகமும் மனதை நிறைத்துவிட குழலி தன் துயரங்களை எல்லாம் கண்ணீரில் கரைத்துக் கொண்டிருந்தார்.

இப்படி இரு மகள்களைப் பெற என்ன தவம் செய்துவிட்டேன் என்று அவர் நெகிழ்ந்து உருகினார்.

அப்போது, கல்பனாவும் தன் ஏக்கங்களையும் சோகங்களையும், இன்று தனை விட்டு அவை நீங்கிப் போனதையும், கணேஷிடம் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

அன்றிலிருந்து, தினமும் ஒரு சில நிமிடங்களாவது, இருவரும் பேசிக் கொள்வது வழக்கமானது.

குழலியின் முகத்தில், புதிதாய் ஒரு தெளிவும், உயிர்ப்பும் வந்திருந்தன.

அவர் இனிமேலாவது, சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டுமென்று தோன்றியது, பவிக்கு!

திருமணத்துக்கு முன்பு குழந்தை பெற்றால், அதில் அவர் பங்கு என்னவென்று அறியாமலே, காயப்படுத்தும் சமூகத்தை நினைத்தாலோ நெஞ்சுக்குள் வேதனை எழுவதாய்...!

அதற்குப் பிறகு, தினமும் சென்னை அலுவலகத்துக்குச் செல்ல ஆரம்பித்த பவியின் மனதிலும் ஒரு தெளிவு வந்திருந்தது.

தன் அம்மாவுடனே கடைசி வரை இருந்து விட வேண்டும் என்ற முடிவு, நெஞ்சத்தில் உறுதியாய்...!

இப்போதெல்லாம் குழலியைப் பார்க்கும் ... அவர் தான் எத்தனை அழகென்று ... 

JUN 12 2010

தெய்வீகமாய்... பார்த்தாலே கையெடுத்துக் கும்பிடத் தோன்றும் கனிவும் கம்பீரமும் கலந்த அழகு தேவதை போலிருந்தார், அவர்!

மனம் தெளிந்து, முகத்தில் சந்தோஷப் பூக்கள் மின்ன, முகத்தின் சோகவரிகள் விடைபெற்றுச் சென்றிருந்தன.

தன் மகள் தன்னைப் புரிந்து கொண்டாளே என்ற பெருமிதம் அவருக்குள் அதிகமாய்...!

* * *

அந்த வாரம், பவியுடன் பேசிய கல்பனா, "எனக்கு இப்பதான் புதுசா ஒரு பயம் வந்திருக்கு. பவி... என்னை வளர்த்த அம்மா அப்பாகிட்டே இந்த விஷயத்தைப் பத்தி எப்படிச் சொல்றதுன்னே தெரியலை... கஷ்டமா இருக்கு... அவங்க இத எப்படி எடுத்துப்பாங்கன்னு வேற புரியலை" என்று வருத்தப் பட்டாள்.

"அக்கா... பாசத்துக்கு மட்டும் தான் ஊற்று மாதிரி அள்ள அள்ளக் குறையாம சுரக்கற வித்தை தெரியும்...

"நீங்க மாமாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட உடனே, அம்மா அப்பா மேல உள்ள பாசம் என்ன குறைஞ்சா போயிடுச்சி? அது மாதிரிதான் இதுவும்னு, நீங்க அவங்களுக்குப் புரிய வைக்கணும்...

"எப்பவுமே, மனசுல ஒவ்வொருத்தருக்கும் தனி இடம் இருக்கும்... அதை இன்னொருத்தராலே எப்பவுமே அடைய முடியாதுங்கறதுதான் உண்மை!

"அவங்களுக்குப் புரியற மாதிரி அதச் சொல்லுங்க... அவங்க உங்க லைஃப்லே எவ்வளவு முக்கியமான வங்கன்னு அவங்களை உணர வைச்சிட்டீங்கன்னா, அப்புறமா எந்தப் பிரச்னையும் இருக்காது!" என்றாள்.



"சரி பவி... தேங்க்ஸ்! நான் ரொம்பக் குழம்பிப் போயி ...ந்தேன்! நீ சொன்னபடி முயற்சி செஞ்சு பாக்கறேன்... ...பா!"

...ரிசீவரை வைத்த கல்பனாவுக்குள், இந்தச் சிறு பெண்ணுக்குத் தான் எவ்வளவு பக்குவம் என்று பெருமிதமானது உள்ளம்.

* * *

பிறகு வந்த நாட்களில், பவியின் மனம் முழுவதும் ப்ரணேஷ் தன் நினைவுகளை ஆழப் பதித்திருந்தான்.

அவன் வார்த்தைகள் கசையடியாய் உள்ளத்தில் வடுக்களை ஏற்படுத்தி இருக்க, மென்மையான மனம் தான் அதிகம் காயப்படுத்தப்படும் என்ற உண்மை புரிவதாய்!

ஆனாலும் அவன் கல்பனாவைப் பார்த்து, தானென்று நினைத்துத்தான் கோபப் பட்டிருக்கிறான்...

அப்படி என்றால், அவன் காதலின் வலிமை எவ்வளவு ஆழமானது என்று புரிந்து இதயம் கசிந்து, மனம் அவனுக்காகப் பரிந்து வந்தது.

தினமும் அலுவலகத்துக்குச் சென்றாலும், உள்ளே ஒரு வெற்றிடம் உருவாகியது.

ப்ரத்யுவைக் கண்டதும் ஃபீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுந்த காதல் உணர்வுகள் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தன.

தன் ஆசைகள் நிறைவேறப் போவதில்லை என்று தெரிந்தும், அவன் ஞாபகமும் நேசமும் நெஞ்சுக்குள் முழுமையாய் வியாபித்திருக்...

JUN 12 2010

காதல் கூட்டிற்குள் மூச்சு விட முடியாமல் தவித்துத் திணறிய போதும் பவியின் நினைவுச் சாம்ராஜ்யம் முழுவதும், அவனே முழு பலத்துடன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் ஸ்டூடியோவிலிருந்து, தங்கள் பூர்வீக பங்களாவை எடுத்திருந்த புகைப்படங்கள் வாங்கி வந்து, குழலிக்குக் காட்டினாள்.

அவர் நெகிழ்ந்து போன நெஞ்சத்துடன், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

பழைய நினைவுகளை, நூலாம்படையாய் தூசி தட்டிப் பார்த்தது மனது.

ஆனால், இப்போது எங்கிருந்தோ வந்து ஒட்டிக் கொண்ட தெளிவும் தீர்க்கமும் அவர் முகத்தில் புது தேஜஸை தந்திருந்தது.

பவியின் அன்பில் மனம் உருகி, இப்படி ஒரு மகளைப் பெற்றது பெரும் வரமாய்...!

ஒரு பெண்ணின் உண்மையான பலம் அவளுடைய தன்னம்பிக்கையும் தைரியமும்தான் என்பதை, இன்று அவளுடைய செயல்கள் மெய்ப்படுத்தின.

கல்பனா, மறுவாரத்தில் ஒரு நாள் பேசினாள்.

"பவி... நீ சொன்ன மாதிரியே, அம்மா அப்பாவுக்குப் புரியற மாதிரி என் அன்பை எடுத்துச் சொன்னேன்...

"யாராலயும் அத மாத்த முடியாதுங்கறதையும், குறைக்க முடியாதுங்கறதையும், நீ சொன்ன மாதிரிப் புரிய வச்சேன்... ஓரளவுக்கு கன்வின்ஸ் ஆயிட்டாங்க! தேங்க்ஸ் பவி!" என்றாள்.



பிறகு பேசிய கணேஷ், "பரவாயில்லையே..! என் மைத்துனி புத்திசாலிதான்... என்னோட மனைவி அளவுக்கு மக்கா இல்லாம, நல்ல ஐடியா கொடுத்திருக்கியே... தேங்க்ஸ்" என்றான் குறும்புடன்.

"மாமா... போதும் உங்க கிண்டல்! எப்பவுமே நம்ம பிரச்னைக்கு தீர்வு காணறதை விட, மத்தவங்களோட பிரச்னைக்கு சுலபமா ஒரு தீர்வு சொல்லலாம்!

"அது மாதிரிதான் இதுவும்... சரியா? உங்க ஒய்ஃபும் புத்திசாலிதான்!" என்றாள் பவி விட்டுக் கொடுக்காமல்.

* * *

அந்த வாரக் கடைசியில், ரத்தினத்துடன் பவித்ராவும் பொள்ளாச்சிக்கு செல்ல வேண்டியிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் அங்கு சென்றபோது, இன்னும் சிறிது நேரத்தில் ப்ரத்யுவைப் பார்க்கப் போகிறோம் என்ற தவிப்பில், நெஞ்சம் வேகமாக முரசு கொட்டியது.

எவ்வளவு தான் வலிகள், அவமானங்களை சுமந்தாலும், நீ மட்டும் திருந்தவே மாட்டாயா என்று மனதை செல்லமாகக் கடிந்தாள் பவித்ரா.

ரிசார்ட்டுக்குச் செல்லும் வழியெல்லாம், சுகந்தமாய் சுகந்தம் பாடிய உள்ளத்தை அடக்கியவளுக்கு, அவன் நிழல் கூட இப்போது தனக்குச் சொந்தமில்லை என்ற நினைவு உள்ளத்துக்குள் வேதனையை விதைப்பதாய்...!

பங்களாவுக்குச் செல்லும் பாதையின் பெரிய கிரில் கதவுகள் திறக்கப்பட்டது.

இருபுறமும் சூழ்ந்த மரங்களின் நடுவே தெரிந்த தார்ப்பாதையில் சென்று [illegible] நின்றது.

JUN 12 2010

எதிரில் தங்கள் யூனிட்டிலிருந்த அனைவரும் சேர்ந்து, ஒரு புதிய சொர்க்கத்தையே அங்கு சிருஷ்டித்திருப்பது போல் ஒரு மாயை எழுந்தது.

சுற்றிலும் தெரிந்த பசுமையும், புல்வெளியும், மலர்களும், நீர் வீழ்ச்சியும், மூங்கில் குடில்களும், மனதிற்குள் ஒரு சிலிர்ப்பை தந்து, முகம் மலர்ந்து விகசிக்கச் செய்தன.

விழிகள் உயிர்ப்புடன் ஒளிர, இதழ்களில் ஒரு நிறைவான புன்னகையுடன், இன்று புதிதாய் பிறந்தது போல் ஒரு பரவசம் தெரிய உள்ளே நுழைந்தாள்.

பளிங்காய் பளபளத்த தரைகளும், உள்புறம் அமைக்கப்பட்டிருந்த இன்டீரியர் டெகரேஷனும், கண்களைத் தன் வசம் ஆட்படுத்திக் கொண்டன.

பெரிய அலங்கார மண் பானைகளில் தெரிந்த செயற்கைச் செடிகளும் மலர்களும், ஆங்காங்கு மாட்டப்பட்டிருந்த விலையுயர்ந்த ஓவியங்களும், பிரமிப்பூட்டின.

உயர்ந்த விதானத்தில் தெரிந்த மிருகங்களின் தலைகளும், சாண்டிலியர்களும், லஸ்தர் விளக்குகளும் மின்னலாய், ஒளிர்ந்த அழகும், இந்தச் சிந்தனைச் சிற்பத்தை செதுக்கிய சிற்பிகள் நாங்கள் என்ற பெருமிதத்தை உள்ளத்தில் வரவழைப்பதாய்!

அவளுடைய பார்வை படிகளில் உயர்ந்த போது, அங்கு அழுத்தமான காலடிகளுடன் ப்ரணேஷ் மெதுவாக இறங்கி வந்து கொண்டிருந்தான்... உணர்ச்சிகளைத் தொலைத்த முகத்துடன்!

விளக்கைச் சுற்றும் விட்டில் பூச்சியாய், காயப்படப் போகிறோம் என்று தெரிந்தே அவனைச் சுற்றின... அவள் விழிகள்!



விழி எடுக்காது, நோக்கியவளை, அவனும் இமைக்காமல் அளவெடுத்தபடி அருகில் வந்தான்.

"ஹலோ ப்ரணேஷ்... ஹௌஆர்யூ?"

மகிழ்ச்சிக் குரலில் விசாரித்தபடி முன்னே சென்ற ரத்தினத்தின் குரலில், இருவருக்குமிடையே உருவமின்றிக் கனவிழைகளால் நெய்யப் பட்டிருந்த ஒரு மாயத்திரை அறுபட்டு விழுந்து, நிஜம் அவனைத் தாக்கியது.

ஒரு பெருமூச்சுடன் முன்னே சென்று "ஹாய்..." என்றாள் பவி மென்மையாக!

அவனுடைய நீட்டிய கையைப் பிடித்துக் குலுக்கிய போது, அதன் அழுத்தமும் ஸ்பரிசமும் நீங்காது இதயத்தில் பதிந்து, இனி ஒரு இணையில்லை என்று நினைவு படுத்தின.

முகத்தில் சில்லென்ற பனி நீரை யாரோ வீசியது போல் சிலிர்த்தது!

பிறகு அவனும் ரத்தினமும் பங்களாவைச் சுற்றிப் பார்த்தனர்.

அங்கு செய்ய வேண்டிய வேலைகள் ஏதும் மீதம் இருக்கிறதா என்று குறித்துக் கொண்டபோது, சதீஷும் சூபர்வைசரும் வந்தனர்.

ரத்தினம் அவர்களுடன் பேச ஆரம்பிக்க, பவித்ரா, மூங்கில் குடில்களில் பின்புறம் சென்றாள்.

அங்கு கட்டப்பட்டிருந்த கயிற்று ஊஞ்சல்களும், சிறிய தாமரைக்குளமும், கவிதையான [illegible] விருந்தன... மனதை ரம்யமா[illegible]!

JUN 12 2010

எதையுமே ரசிக்கின்ற மனநிலையில் இல்லை என்றாலும், மனதை இயல்பாக்கியபடி உள்ளே வந்தபோது, அவள் முதுகில் ஊசியாய் உரசிய பார்வை, ப்ரணேஷின் வரவை உணர்த்தியது.



## 16



ப்ரணேஷ் நேரே ரத்தினத்திடம் வந்தான்.

''அங்கிள்... எங்க வீட்டில உங்க ரெண்டு பேருக்கும் இன்னிக்கு நைட் டின்னர் அரேஞ்ச் பண்ணிருக்கேன். அப்பா உங்களைக் கட்டாயம் வரச் சொன்னாங்க.''

அவன் குரல் புரியாத ஒரு செய்தியுடன், ஓரக் கண்கள் அவளையே நோக்கின.

எத்தனை நாள் காத்திருந்தாலும், தன் கனவுகள் நனவாகப் போவதில்லை என்பதை உணர்ந்திருந்ததால், அவள் இதழ்களில் ஒரு விரக்திப் புன்னகை!

ஆனால் அவள் மௌனம், கோடி வார்த்தைகளை அவனுக்கு அறிமுகப்படுத்துவதாய்!

அவளையே கவனித்துக் கொண்டிருந்தவனுக்கு முகம் உடனே இறுகியது.

ரத்தினம் அவனிடம், ''ப்ரணேஷ்... என்ன பெயர் செலக்ட் பண்ணி இருக்கீங்க இந்த ரிசார்ட்டுக்கு...?'' என்றார்.

''என்னோட வருங்கால மனைவியோட பேர் அங்கிள்... உங்களுக்கு இப்ப சொல்ல மாட்டேன்! சர்ப்ரைஸ்...!''



என்றபடி இயல்பாகத் திரும்பி அவளிடம் விடை பெற்றுக் கிளம்பினான்.

ருப்கலாவின் நினைவுகளால் மனம் உடைந்து சிதறியது.

ரத்தினத்திடம் திரும்பியவள், ''சார்... நான் டின்னருக்கு வரலே... தப்பா நினைச்சுக்காதீங்க! ஒரே தலைவலி... ஃபீவரிஷ்ஷா வேறே இருக்கு! நீங்க போயிட்டு வாங்க'' என்றாள்.

அவரும் யோசனை கலந்த வியப்புடன் 'சரி'யென்றார்.

அன்றிரவு வானம் மேகமூட்டமாக இருந்தாலும், விண்மீன்கள் சோகமாக விழித்திருந்தன.

எங்கோ தெரிந்த சிறு மின்னல் கீற்று, மழை வரப் போவதை சாரல் காற்றுடன் அறிவித்தது.

மழைமகளின் வருகைக்கு முன் 'பராக்... பராக்' எனக் கட்டியம் கூறும் மண்வாசனை, திடீரெனப் பரவி நாசியை சுகமாய் நிறைத்தது.

தோட்டத்து பெஞ்சில், மெல்லிய நிலவொளியில் வாக்மேனில் பாட்டு கேட்டபடி தனியாக அமர்ந்திருந்தாள் பவித்ரா.

மனம் இயற்கையின் ஆட்படுத்தலிலும், இசையின் ஆக்ரமிப்பிலும் குழைந்துருகிக் கசிந்து கொண்டிருந்தாலும், எங்கோ ஒரு மூலையில் இனம் தெரியாத சிறுவலி!

'இன்னிசை மட்டும் இல்லை என்றால், என்றோ நான் இறந்திருப்பேன்' என்ற [illegible] வரிகள், மனதில் உயிர்ப்புடன் எழுந்து தனக்குள்ளே எழுதப்பட்டது போன்ற ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தின.

JUN 12 2010

கண் மூடி இசையில் லயித்திருந்தபோது, யாரோ மெதுவாகத் தோளைத் தொடும் உணர்வு, இதயத்தை இதமாய்த் தட்டியெழுப்பியது.

திடுக்கிட்டு நிமிர்ந்தால், எதிரே அம்பாய்த் தைக்கும் பார்வையைத் தாங்கியபடி, ப்ரணேஷ் அங்கு நின்றிருந் தான்.

அவன் கையில் ஒரு கிஃப்ட் பார்சல் தெரிந்தது.

முகம் உணர்ச்சிகளைத் துடைத்திருக்க, விழிகளில் சில்லென்ற ஒரு குளிர்ந்த பார்வையுடன் அதை அவனிடம் நீட்டினான்.

"நீ வருவேன்னு எங்கம்மா வாங்கி வச்சிருந்தாங்க... ம்... ம்... குட்பை!" என்றவன், அதை பெஞ்சில் வைத்து விட்டுத் திரும்பியும் பார்க்காமல், வேகமாகச் சென்று காரில் ஏறிக் கிளம்பினான்.

ஒரு நொடி, மனம் எதையோ இழந்தது போல் துடிக்க, தன்னுயிரில் பாதி தொலைந்தது போல் ஒரு தவிப்பு நிலை வந்து, உடல் முழுவதும் மரத்துப் போனாற் போல் ஒரு உணர்வு!

காத்திருக்கும் போது தான் ஒரு பெண்ணின் மனதில் காதல் இன்னும் அதிகமாகிறது என்பது அப்போது புரிவ தாய்!

தன் வாழ்க்கை முழுவதும் காத்திருந்தாலும் கனவுகள் மெய்ப்படப் போவதில்லை என்ற உண்மையும் கூடவே புரிந்தது.

அறைக்குள் சென்று அந்தப் பார்சலைப் பிரித்தபோது, அழகிய பட்டுப்புடவையொன்று கற்கள் பதிக்கப்பட்டு முந்தானையில் கண்ணனின் உருவத்துடன் காட்சி யளித்தபோது, விழியோரங்கள் கசிய மார்போடு அதை அணைத்துக் கொண்டாள் பவி.

* * *



அன்றைய இரவு பழைய நினைவுகளின் நைல் நதியாய் நீள, அதன் கரை உடைக்க முயன்று தோற்றுப் போனது, உறக்கம்!

மெதுவாக, எழுந்து ஜன்னலருகில் நின்று நிலவைப் பார்த்தபோது, மனதில் பாரதியின் பாடல் வரிகள் சுகமாய் நுழைந்தன.

**"தூண்டிற் புழுவினைப் போல், வெளியே சுடர் விளக்கினைப் போல்... நீண்ட பொழுதாக என் நெஞ்சம் துடித்ததடீ! கூண்டுக்கிளியினைப் போல், தனிமை கொண்டு மிகவும் நொந்தேன்.. வேண்டும் பொருளை எல்லாம் மனது வெறுத்து விட்டதடீ!**

**எண்ணி எண்ணிப் பார்த்தேன்... அவன் யாரெனச் சிந்தை செய்தேன்... கண்ணன் திருவுருவம் அங்கு கண்முன் நின்றதடீ!"**

கண்ணனைக் காதலனாக உருவகப்படுத்திய அந்த வரிகள், நெஞ்சக் கூட்டிற்குள் 'ப்ரத்யு'வை நேசத்துடன் சிறை செய்தன.

* * *

மறுநாள் காலையில் விடிந்து வெகு நேரம் கழித்து தான் எழுந்தாள்.

டிபன் சாப்பிட்டுவிட்டு ஓய்வாக அமர்ந்து பாட்டு கேட்டுக் கொண்டிருந்த போது, 'செல்' அழைத்தது.

சென்னையிலிருந்து பக்கத்து வீட்டுப் பரந்தாமன் பேசினார்.

குழலிக்கு நெஞ்சுவலி வந்து ஹாஸ்பிடலில் சேர்த் திருப்பதாக அவர் கூறிய போது அப்[illegible] ஆடிப் போனது மனது.

JUN 12 2010

உடலும் உள்ளமும் பயத்தில் உதற, என் தாயை என்னிடமிருந்து பறித்து விடாதே இறைவா என்று உள்ளம் நெகிழ்ந்து மன்றாடியது.

உடனே ரத்தினத்திடம் சென்று கூறிவிட்டு, கிடைத்த பஸ்ஸில் கிளம்பிச் சென்றால், இரவாகி விட்டது.

அங்கு, குழலி ஐ.சி.யூவில் அப்சர்வேஷனில் வைக்கப் பட்டிருந்தார்.

டாக்டரிடம் பேசிய போது காலையில் அறைக்கு மாற்றிவிடுவார்கள் என்று அவர் கூறினார்.

மனம் உடைந்து அழ ஆரம்பித்த பவியை, பரந் தாமனும் அவருடைய மனைவியும் சமாதானப்படுத் தினர்.

இன்டென்சிவ் கேர் யூனிட்டில் தங்க அனுமதி இல்லாததால், இரவு வீட்டிற்குக் கிளம்பிய பவி, செல்லும் வழியிலேயே பூத்தில் இறங்கி கல்பனாவிடம் பேசினாள்.

மனம் வெடித்துச் சிதறி விடுமோ என்ற பயத்துடன், தன் குரலில் பதட்டத்தை வெளிப்படுத்தாமல், குழலிக்கு இப்போது தேவலாமென்று கூறினாள்.

ஆனாலும் அதை நம்பாமல் வெடித்து வந்த விம்ம லுடன் கல்பனா அழுவதும் கேட்டது.

பிறகு பேசிய கணேஷிடம் எல்லாம் கூறியபோது, அந்த வாரத்திற்குள் எப்படியாவது தாங்கள் இருவரும் கிளம்பி வருவதாகக் கூறினான்.

வீட்டு வாசலிலேயே காத்திருந்த வீரம்மா பாட்டி ''அம்மாவுக்கு எப்படி இருக்குடா கண்ணு..?'' என்றார் அழுகையுடன்.



அவரை சமாதானப் படுத்தியவளை, சாப்பிட வைத்த பிறகுதான் படுக்கச் சென்றார் அவர்.

இரவு, இமைக்காமல் விழித்திருந்த நேரத்தில், ''ஒரு வாசல் மூடி மறுவாசல் வைப்பாயாமே.. எனக்குப் புது உறவாய் கல்பனாவை கொடுத்துவிட்டு, என் அம் மாவைப் பறித்து விடாதே'' என்று இறைவனிடம் இறைஞ்சினாள் பவித்ரா.

அழுதழுது இரு கண்களும் வறண்டு பாலைவனமாய் இருந்தன. விழிகள் இமைப் பெட்டகத்துக்குள் பூட்டப் பட்டாலும், ஞாபகங்கள் உறங்கவில்லை.

ஆழ்மன வெளியில் தெரிந்த ஒரு விழிப்பு நிலையை, காற்றில் மிதந்து வந்த மெல்லிசை இரவு நேரத் தாலாட் டாய் வருட, கண் செருகியது.

அப்படியே உறங்கிப் போன போதும், விடியுமுன்பே விழிப்புத் தட்ட, அவசரமாக எழுந்து குளித்துவிட்டுக் கிளம்பிய போது, மனம் புயல் கடந்த பூமியாய்...!

அங்கு குழலி, நார்மலாகி இருப்பதைப் பார்த்த போதுதான், உயிரே திரும்பி வந்தது போல் ஒரு உணர்வு!

அவரை அறைக்கு மாற்றிய பிறகு, இனி ஒன்றும் பயம் இல்லை... மைல்ட் அட்டாக்தான் என்று டாக்டர் கூறியபோதும், மனம் அலைப்புற்றுத் தவித்துக் கொண் டிருந்தது.

குழலிக்கு முன் எதையும் வெளிக்காட்டாமல் மறைத் தாள்.

ஒரு வறண்ட புன்னகையுடன் அவருடைய கைகளைப் பற்றியபடி அமர்ந்திருந்த [illegible] தான் [illegible] ஒரு தோள் தேவை என்பது புரிந்தது.

JUN 12 2010

உடனே ப்ரனேஷின் நினைவு வந்தது.

என் முகம் பதித்து அழ ஒரு நிமிடம் உன் பரந்த மார்பைக் கடனாகக் கொடுப்பாயா என்று கேட்க வேண்டும் போல் ஏக்கம் எழ, அதை விலக்கி தாயிடம் கவனத்தை செலுத்தினாள்.

ஆர்வத்துடன் பேச ஆரம்பித்தவரை, அமைதிப் படுத்தி உறங்க வைத்தாள்.

பிறகு, இமை போல் தன்னை இதுவரை காத்த அன் னையைப் பார்த்தபடியே, நிச்சலனமாய் அமர்ந்திருந்தாள்.

அவர் தந்த அன்புக்கு முன் வேறு எதுவும் பெரிதாகத் தோன்றவில்லை.

தன் தாய் மடியைத் தொலைத்து விடுவோமோ என்ற பயத்தை மனதிலேயே புதைத்தவள், கண்களை மெது வாய் துடைத்துக் கொண்டாள்.

* * *

ஹாஸ்பிடலில் இருந்த மூன்று நாட்களும், குழலியை ஒரு சேய் போல் தாங்கினாள் பவித்ரா.

அவளுக்குத் துணையாக, இன்னும் இரு தினங்களில் வந்து விடுவதாகக் கல்பனா கூறினாள்.

குழலியை வந்து பார்த்துச் சென்ற ரத்தினமும், அலு வலக நண்பர்களும், அவளுக்கு எந்த உதவி தேவை என்றாலும் தயங்காமல் கேட்கும்படிக் கூறினர்.

எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் விடுப்பு எடுத்துக் கொள்ளும்படிக் கூறினார் ரத்தினம்.

குழலியை வீட்டுக்கு அழைத்து வந்த பிறகுதான் ...மதியானது பவித்ராவுக்கு.



சமையலுக்கென்று ஒரு பெண்மணியை வீட்டோடு ஏற்பாடு செய்தாள் அவள்.

கல்பனாவுடன் இருக்க வேண்டும் என்பதால், இன்னும் ஒரு வாரம் விடுப்பு எடுத்திருந்தவளுக்குள், அக்காவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாய் இருந்தது.



## 17



மறுநாள் இரவு கல்பனா வருவதாக இருந்ததால், முதல் நாளிலிருந்தே ஒரு வித அலைப்புறுதலுடன் தெரிந்தார் குழலி.

அவரை கண்டபோது, விழுதைத் தேடும் வேராய்.. மனதில் பாசவிதைகளை சுமந்து கனிகளை எதிர்நோக்கும் அன்னை பூமியாய் தோன்றியது.

அன்று மாலை ஏர்போர்ட்டுக்குச் சென்றிருந்த பவித் ராவுக்கு, கல்பனாவைக் கண்டதும் விழிகளைத் தட்டி இமைக்க முடியவில்லை.

தன்னைக் கண்ணாடியில் பார்ப்பதுபோல்.. தன் உருவமே சிறிது பூசினாற் போன்ற தோற்றத்துடன், நிழல் பிம்பமாய் எதிரே தெரிவது போல் ஒரு பிரமிப்பு வந்தது.

பவியைக் கண்டதும் ஓடி[illegible] வேகத்தில் கல்பனாவின் அன்பும் ஏக்கமும் புரிவதாய்..!

JUN 12 2010

நான்கு கண்களின் தேடலும் ஒரு முடிவுக்கு வர, என்ன பேசுவதென்று புரியாமல், இனிய மௌனமே அங்கு பேச்சு வார்த்தைகளாய்..!

"அம்மா எப்படி இருக்காங்க பவித்ரா?" ஆர்வத்துடன் கேட்டாள், அவள்.

"நல்லாருக்காங்க.. உங்க ஞாபகம்தான் ரொம்ப! என்னை விட, அவங்க இன்னும் ரெஸ்ட்லெஸ்ஸா இருக்காங்க! எவ்வளவு நாள் பிரிவு.. பாவம் அம்மா!" என்று புன்னகைத்தாள்.

கல்பனாவுக்கு உடனே, தான் இன்னும் கணேஷை அவளுக்கு அறிமுகப்படுத்தவில்லை என்பது புரிந்தது.

"பவி... இவர்தான் உன் கணேஷ் மாமா!" என்றாள் பெருமையுடன்!

இருவரின் உருவ ஒற்றுமையைப் பார்த்த அவனாலும் தன் விழிகளை நம்பமுடியவில்லை என்பதை அவன் முக பாவமே கூறின.

மெதுவாக "ஹலோ.. மாமா எப்படி இருக்கீங்க?" என்று கேட்டு மென்மையாக முறுவலித்தாள் பவி.

"ரொம்ப நல்லாருக்கேன்.. உன் அக்காவோட புண்ணியத்துல!"

குறும்புடன் கூறிவிட்டுக் கல்பனாவைப் பார்த்துக் கண்சிமிட்டினான் கணேஷ்.

அவர்களுடைய இதமான பார்வைப் பரிமாற்றம் இருவரின் அன்யோன்யத்தைப் புரிய வைப்பதாய்...!

* * *



வீட்டுக்குச் சென்றபோது, வாசலிலேயே ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்து, வீரம்மாபாட்டியின் துணையுடன் அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தார் குழலி.

கல்பனாவைக் கண்டதும், வேகமாக எழுந்தவரின் உடல் ஒரு முறை குலுங்கி கண்கள் கண்ணீரை உகுக்க ஆரம்பித்தன.

பிரிந்தவர்கள் மீண்டும் சேரும்போது அழுகை ஒரு பாஷையாய்...!

ஒருவரை ஒருவர் அணைத்துத் தேற்றுவதிலும், முகத்தை வருடி முத்தமிடுவதிலும், பாசத்துடன் உச்சி முகர்வதுமென, உணர்வின் நீட்சியாய் இணைந்த உறவுகள்!

அன்று வெகுநேரம் விழித்திருந்து அனைவரும் பழைய கதைகளை எல்லாம் பேசி மகிழ்ந்தனர்.

கல்பனா அவளிடம், "பவி.. நான் அம்மாவோடப் படுத்துக்கவா?" மிகுந்த தயக்கத்துடன் கேட்டாள்.

"இதுக்குப் போய் என்கிட்டக் கேக்கணுமா...? அம்மாவும் பொண்ணும் எவ்வளவு வேணுமானாலும் கொஞ்சிக்கலாம்... ஆனா அங்க கெஸ்ட் ரூமிலே ஒரு அப்பாவி பாவம், உங்களுக்காகக் காத்துட்டு இருக்காருங்கறதை மட்டும் கொஞ்சம் ஞாபகம் வச்சிக்கங்க... மறந்துடாதீங்க..!" குறும்புடன் கூறினாள்.

"ஏய்.. அவருக்குத் தெரியும்..! நான் இங்கே இருக்கற வரைக்கும் என் அம்மாவோடதான் இருப்பேன்னு சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன் [illegible] லாகக் கூறினாள் கல்பனா.

JUN 12 2010

பவி, தன் அறைக்கு உறங்கச் செல்லும்போது மணி இரண்டைத் தாண்டி இருந்தது.

நெடு நாட்களுக்குப் பிறகு, கல்பனாவின் வருகை அமைதியையும் சந்தோஷத்தையும் அந்த வீட்டில் மீட்டுத் தந்திருந்தது.

இனி வரும் இரவுகளாவது, இனிய நிலாக் காலமாய், வளர்பிறையாக வேண்டும் என்று மனம் வேள்வி செய்தது.

உடனே மறந்து போன ப்ரத்யுவின் முகம் தேடி அலைந்தது, இதயம்.

பிறகு நிம்மதியுடன் மெதுவாக உறங்கத் தொடங்கியவள், காலையில் விழித்தபோதும், மனம் மட்டும் துயிலெழுந்தது.

கண்கள் திறக்காமல், மெதுவாகப் புரண்டு, சோம்பலாய் அந்த சுகத்தை அனுபவித்தபடி, அதில் இதமாய் லயித்திருந்தாள் பவி.

திடீரென்று, ஏலக்காயின் மணமும், நெய்வாசமும் வீட்டையே மணக்கச் செய்தன.

படுக்கையிலிருந்து வேகமாக எழுந்தவள், குளித்து விட்டு வெளியே வந்தபோது, கல்பனா, சமையல்காரம்மாவுடன் சேர்ந்து சமைத்துக் கொண்டிருந்தாள்.

''ஓ.. சாரிக்கா! ரொம்ப நாளைக்கப்புறம் நிம்மதியாத் தூங்கிட்டேன்... அதான் லேட்டாயிடுச்சி!''

குற்றவுணர்வுடன் கூறியபோது, கல்பனா அவளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டாள்.



''பவி.. இந்த நிமிஷம் நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். அந்த சந்தோஷத்தை எனக்குப் பரிசா கொடுத்தது நீதான்!''

''நம்ம பாசத்திலப் பங்கு போட இன்னொருத்தர் வந்துடுவாங்கன்ற எண்ணம் கொஞ்சம் கூட இல்லாம, எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கே.. அம்மாவையும் என்னையும் சேத்து வைக்க! ரொம்பத் தேங்க்ஸ் பவி!''

அவள் குரலில் நன்றியுணர்ச்சி கசிந்தது.

''வெல்கம்...! அப்புறம் ஏன் இங்க நின்னுட்டுருக்கீங்க. போய் மாமாவையும் அம்மாவையும் கவனிங்க.. இங்கே நான் பாத்துக்கறேன்'' என்று அவளை அனுப்பிவிட்டு, சமையலில் ஈடுபட்டாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏனோ மனம் நிறைந்திருப்பது போல் ஒரு உணர்வுடன், மனதிற்குப் பிடித்த பாடலொன்றை இதழ்களில் முணுமுணுத்தபடி நின்றிருந்தபோது, அழைப்பு மணி ஒலித்தது.

* * *

காலையில் யாரென்று யோசித்தபடி வேகமாகச் சென்று கதவைத் திறந்த பவியின் விழிகள் வியப்பில் விரிந்தன.

கையில் இன்விடேஷன்களோடு நின்றிருந்த ப்ரணேஷை, அந்த நிமிடம் அவள் எதிர்பார்க்கவில்லை என்பதை, அவள் முகமே கூறியது.

ஆனால், காதல் மனம், போட்டு வைத்த கோட்டுக்குள் நில்லாமல் தடை தாண்டித்

JUN 12 2010

ப்ரனேஷ் அழுத்தமான குரலில் ''நான் உள்ளே வரலாமா...?'' என்று கேட்கும்போதே, ஒரு கணம் சிலிர்ப்புடன் தடுமாறினாள்.

''வா.. வாங்க..!'' என்று விலகி வழி விட்டு அழைத்த போது, முன்னறையிலிருந்து வெளியில் வந்தான் கணேஷ்.

''பவி.. யார் வந்திருக்கிறாங்க..?'' அவன் இயல்பாகக் கேட்டான்.

அவளைக் கண்டதும், மனம் எரிமலையாகக் குமுறி, ப்ரனேஷின் விழிகள் உடனே சிவந்தன.

உடலில் திடீரென்று ஒரு விறைத்த நிலை வந்து, கையிலிருந்த அழைப்பிதழ்கள் தரையில் சிதறின..!

ரௌத்ரமாய் இருந்தது அவன் முகம்!

கடித்த பற்களிடையே, ''ஏய்.. நீ இவன் கூடக் குடித்தனம் நடத்தவே ஆரம்பிச்சிட்டியா..? நான் ஒரு முட்டாள்! நாமதான் சரியாப் புரிஞ்சிக்காமத் தப்பா நினைச்சிட்டோம்னு, எல்லாத்தையும் மறந்துட்டு என் கூட வருவியான்னு கேட்க வந்தா.. சே!'' என்று சீறினான்.

ஒன்றும் புரியாமல் உறைந்து போய் நின்றிருந்த கணேஷும், நிலைமை புரிந்து, அவன் வார்த்தைகளால் பேச வாய் வராமல் சிலையாய் சமைந்திருந்த பவியும், இயல்பு நிலைக்கு வரும் முன்பே வெளியில் செல்லத் திரும்பினான் ப்ரனேஷ்.

அப்போது சப்தம் கேட்டு வெளியே வந்த கல்பனாவைப் பார்த்ததும், ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்தான்.



அவனுக்குள் ஆச்சரியமும், நம்ப முடியாத குழப்பமும் கை கோர்த்தன.

பவியை திரும்பிப் பார்த்தபோது, அவள் இதழ்களில் ஒரு பொருள் பொதிந்த புன்னகை கசிந்தது.

கல்பனாவிடம் திரும்பியவள், ''அக்கா.. மாமா.. ரெண்டு பேரும் இங்கே வாங்களேன்!'' என்று அழைத்தாள்.

அவனிடம் ''சார்.. இவங்க என்னோட அக்கா கல்பனா... இவர் எங்க மாமா கணேஷ்!'' என்று அறிமுகப் படுத்த, அவன் முகத்திலிருந்த இறுக்கம் சட்டென்று நீங்கியது.

எல்லாம் விளங்கியது போன்ற ஒரு புன்னகையுடன் பிரமிப்பும் பெருமூச்சும் இணைந்து வந்தன.

அவர்களுக்கு பதில் வணக்கம் கூறிவிட்டு, ''நான்... பவியோடக் கொஞ்சம் தனியாப் பேசணும்.. அழைச்சிட்டுப் போகலாமா?'' என்றபோது, பெரும் தவிப்பு தெரிந்தது, அந்தக் குரலில்!

யுகங்களாகிய வருடங்களுக்குப் பிறகு, 'பவி' என்ற அவனுடைய அழைப்பு மனதை சிறகால் வருடி, அவள் வயிற்றுக்குள் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகளைப் பறக்கவிடுவதாய்!

கண்களில் குறும்புடன் இருவரையும் நோக்கினாள் கல்பனா.

''ம்... அழைச்சிட்டுப் போங்க! ஆனா [illegible] ணாடி எங்க அம்மாகிட்ட நீங்க [illegible]'' என்றாள் மெதுவாக.

JUN 12 2010

"நிச்சயமா! அவங்க எங்கே இருக்காங்க..?" என்று கேட்டவனை, அறைக்குள் அழைத்துச் சென்றாள் பவி.

புதிதாய் ஒருவரைக் கண்டதும், குழலி எழுந்து அமர முயற்சி செய்தார்.

"நீங்க படுத்திருங்க.. நான் ப்ரனேஷ்! உங்க பூர்வீக பங்களாவை வாங்கி, ரிசார்ட்டா மாத்த சொன்னது நான்தான்.. பவியும், நானும் மனப்பூர்வமா விரும்பறோம்!

"உங்களோட சம்மதத்தோட அவளைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசைப்படறேன்... இனிமே அந்த பங்களா உங்க சொத்துதான்! எனக்கு.... உங்க முடிவு தெரியணும்!

"நம்ம ரிசார்ட்டுக்கு "பவித்ரம் ரிசார்ட்ஸ்"ன்னு தான் பெயர் ரிஜிஸ்டர் பண்ணியிருக்கேன்" மென்மையான குரலில் மொழிந்தான்.

முதலில் ஒன்றும் புரியாமல் விழித்தவரின் பார்வையில், புதிதாய் ஒரு ஒளியும்.. முகம் நிறைந்த புன்னகையும் மின்னலாய் ஒளிர்ந்தன!

"பவித்ரம் ரிசார்ட்ஸ்..." உதடுகள் நிறைவுடன் முணுமுணுத்தன!

உடனே பவித்ராவிடம் திரும்பி, தலையசைத்து அழைத்தார்.

அவள் அருகில் வந்ததும், "பவி.. இதனாலதான் இத்தனை நாள் கல்யாணமே வேணாம்னு பிடிவாதமா ...ருந்தியாடா?" என்றபடி அவள் கையைப் பிடித்து ...னேஷிடம் ஒப்படைத்தாள்.



அவளிடம், "என் பொண்ணைக் கண் கலங்காமப் பாத்துக்கங்கப்பா...! எனக்கு வேற எதுவும் வேணாம்! அவ அற்புதமான பொண்ணு.. ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்!" எனும் போதே அவர் விழிகள் நிறைந்தன.

ஆழமான பார்வை ஒன்றை அவளிடம் பதித்தவன், "நீங்க கவலைப்படாதீங்க.. அவளை என் உயிராப் பாத்துப்பேன்! இவ என்னோட ஆதர்ச தேவதை! உங்க பூர்வீக வீடு, இனிமே இந்த தேவதை வாழப்போற வீடு! இப்போ நாங்க ரெண்டு பேரும் கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாமா?" என்று கேட்டான்.

உடனே, மகிழ்ச்சியுடன் அவர் சம்மதம் கூறினார்.

கல்பனா மனம் நிறைந்த புன்னகையுடன், "ஒரு நிமிஷம் இருங்க.. அவ இப்ப ரெடியாயிடுவா!" என்றபடி, பவியை அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

ப்ரனேஷும், கணேஷும் ஹாலுக்கு வந்தனர்.

"நான் உங்களை எங்கியோ பாத்திருக்கேன் போலத் தோணுது!" என்றபடி, கீழே சிதறிக் கிடந்த அழைப்பிதழ்களை சேகரித்தான் கணேஷ்.

நினைவுகளைக் கலைத்து அவன் யோசிக்கும்போதே, ப்ரனேஷ் அவர்கள் இருவரையும் தான் ஹோட்டலில் சந்தித்ததையும், கல்பனாவை பவித்ரா என்று நினைத்து அவர்களிடம் பேசியதையும், நினைவு படுத்தினான்.

கணேஷின் விழிகள் வியப்பில் விரிந்தன.

"அப்போ.. நீங்க ரெண்டு [illegible] ஒருத்தரை ஒருத்தர் விரும்பறீங்களா?" நம்ப முடியாமல் கேட்டான்.

JUN 12 2010

'ஆமாம்' என்று தலையசைத்தான் ப்ரனேஷ், கண்கள் குறுகுறுக்க!

பிறகு "எங்க பிரிவுக்கு ஒரு விதத்துல நீங்க காரணமா இருந்தாலும், நாங்க சேரும்போது, நீங்க ரெண்டு பேரும் இங்க இருக்கறது எனக்கு ரொம்ப சந்தோஷம்!" என்றான் யோசனையோடு.



18



கனேஷ், அழைப்பிதழ்களை அவனிடம் கொடுத்தான்.

இருவரும் பொதுவாகப் பேச ஆரம்பித்தபோது, தேவதை போல் வெளியில் வந்தாள் பவித்ரா.

தன் பார்வையை, அவள் மீதிருந்து நொடியும் விலக்காமல், ஒரு கண் அசைவில் கிளம்பலாமா என்று கேட்டான் ப்ரனேஷ்.

ஒரு இன்விடேஷனை எடுத்துப் பெயரெழுதி கனேஷிடம் கொடுத்துவிட்டு, பவியை அழைத்துக் கொண்டு அவன் கிளம்பினான்.

கல்பனா அவனிடம், "மிஸ்டர் ப்ரனேஷ்... டிபன் சாப்பிட்டுட்டுப் போகலாம்.. இருங்க! பவியும் இன்னும் [illegible]ப்பிடலை.. இப்பதான் எழுந்திரிச்சா!" என்று அழைத்[illegible]ன்.



பவியையே குறும்புடன் நோக்கியவன், "உனக்குப் பசிக்குதா?" மயிலிறகாய் வருடியது போன்ற மென் குரலில் கேட்டான்.

அவள் உடனே, "ஊஹூம்..." என்று தலையசைத்தாள்.

கல்பனாவிடம் திரும்பி, "நாங்க லன்சுக்கு வந்திடறோம்.. ஒன் மினிட்... நீங்க என்னைப் 'ப்ரனேஷ்'னே கூப்பிடலாம்..! முன்னாடி மாதிரி என்னன்னு தெரியாம வந்து உங்களை மிரட்ட மாட்டேன்" என்ற போது, அவன் குரலில் இதமான கேலி!

பிறகு, இருவரும் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தனர்.

முகத்தில் புதிதாய் பூத்திருந்த வெட்கப்பூக்கள், பவியின் அழகை அதிகமாக்கி இருக்க, அவள் புது மணப்பெண் போலிருந்தாள்.

அவளுடைய அன்புக்கு முன் வேறெதும் தேவையில்லை என்று, இன்று புரிந்தது ப்ரத்யுவிற்கு!

காரில் செல்லும் போதுதான், எதிரில் டேஷ் போர்டில் இருந்த அந்த அழைப்பிதழ்களை கவனித்தாள் பவித்ரா.

மேலே தங்க நிற எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்த பெயர் "பவித்ராம் ரிசார்ட்ஸ்" என்று பெரிதாய் தெரிந்து கண்களைப் பனிக்கச் செய்தன.

மெதுவாகத் திரும்பிய[illegible] பார்வையாலேயே நேசத்துடன் கோதியவன், இதமாகப் புன்னகைத்தான்.

மெல்ல அவன் தோளில், பவி உரிமையுடன் சாய்ந்த போது, ஒரு வண்ணத்துப் பூச்சி சிறகு விரித்துப் படபடத்து தன் தோளில் அமர்ந்தது போல், அவன் மனமெங்கும் ஒரு சிலிர்ப்பு!

கொடியினில் அரும்பாகி, தேவன் மார்பில் சரமாகும் மலர் மாலைபோல் சாய்ந்தாள் பவி.

அவள் இதயம், பொக்கிஷமாய்ப் பொத்தி வளர்த்த தாய்மடி மறந்து, ஒரு நொடியில் ப்ரத்யுவிடம் சரணடைந்தது.

அவன் காரை ஓட்டிக் கொண்டே, அவளை மறு கையால் மென்மையாக அணைத்தான்.

முன்னுச்சியில் தன் உதடுகளைப் பதித்து விட்டு, கன்னத்தை சலுகையுடன் அதில் பதித்துக் கொண்டான்.

அவன் தங்கி இருந்த ஹோட்டலுக்குள் கார் நுழையும்போதுதான், தன் நிலை புரிந்து அவள் விலக ஆரம்பித்தாள்.

மெல்ல விடுவித்தவன், "டிபன் சாப்பட்றியா பவி...?" என்றான் கொஞ்சலான குரலில்.

அவள், "வேணாம்.. பசிக்கலை!" என்றாள்.

"சரி.. ரூம் சர்வீசுக்கு சொல்லிடலாம்." என்றபடி தன் அறையின் சாவியை வாங்கியவன், லிஃப்டில் பயணித்துத்தான் தங்கியிருந்த காட்டேஜிற்குள் அவளை அழைத்துச் சென்றான்.

காதல் வெட்கமறியாது என்ற உண்மையை அன்று தான் உணர்ந்தாலும், அது பவியின் மனதில் பெரும் திர்ப்பை ஏற்படுத்துவதாய்...!



உள்ளே சென்றதும், கதவை மூடியவனின் முகத்தில் ஆயிரம் எதிர்பார்ப்புகள்!

பல ஜென்மங்களாய் உள்ளுக்குள் புதைந்திருந்த காதலும், அந்த நேசமும், அந்தக் கண்களில் கசிவது, பவிக்குப் புரிந்தது.

அவளையே குறுகுறுப்புடன் பார்த்தவனிடம், "பவித்ரம் ரிசார்ட்ஸ்... எப்படி ப்ரத்யு...?" குரல் கனிந்து கிசுகிசுப்பாய் வந்தது.

பார்வையில் மின்னல் கீற்றுகள் பளபளக்க, மெதுவாக அவளருகில் வந்தான்.

"ஆரம்பத்துலே என் ஃப்ரெண்ட்ஸ் சொன்னப்ப, நீ தப்பானவன்னு என்னால நம்ப முடியல பவி.. ஆனா உன் அக்காவை நேர்லே பாத்தப்ப, நீன்னு நினைச்சி உடைஞ்சு போய் என்னையே இழந்து கோபப்பட்டு, உன்கிட்டக் கேட்டப்பவும், நீ உண்மையைச் சொல்லலை...

"உன்னைப் பிரிஞ்சாலும், மனசளவுல நீ என் கூடவே தான் இருந்தே... என்னால உன்னை மறக்க முடியலை.. கல்பனாவைப் பத்தி நீ அன்னிக்கே என்கிட்ட சொல்லி இருக்கலாமே... ஏன் சொல்லலை?" ஆதங்கத்துடன் கேட்டான்.

ஒரு பெருமூச்சுடன், "அக்காவைப் பத்தி எனக்கே போன மாசம் தான் தெரியும் ப்ரத்யு..." என்றபோது அவன் விழிகளில் ஆச்சர்யமும் கேள்வியும் போட்டி போட்டன.

ஒரு பெருமூச்சுடன் "நான் எல்லாமே சொல்றேன்.. ஆனா எங்கம்மாவை நீங்க [illegible] டாது" என்றவள், தன் தாயின் வ[illegible] நடந்த நிகழ்வுகளைக் கூற ஆரம்பித்தாள்.

JUN 12 2010

நம்ப முடியாத வியப்புடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தவன். அவள் முடித்த பிறகு வேகமாக அவளருகில் வந்தான்.

"பின்னே ஏன் பவி..? இது தெரிஞ்சவுடனே என்கிட்ட சொல்லலை?" என்றான் குற்றம் சாட்டும் குரலுடன்.

பழைய ஞாபகங்களில் அவள் கண்கள் பனித்தன.

"நான் ஆசையோட உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லலாம்னு வந்த அன்னிக்குதான், நீங்க ரூப்கலாவை உங்க வருங்கால மனைவின்னு அறிமுகப்படுத்தினீங்க..!" என்றபோது அவள் விழிகள் பெரும் தவிப்புடன் அலை பாய்ந்தன.

வேகமாக முன்னால் வந்து. "என் பவி..!" என்றபடி. அவளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டேன் என்பது போல், இறுக்கமாகத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான் ப்ரத்யு.

தன் கண்மணி எப்படித் துடித்திருப்பாள் என்ற தவிப்புடன், கூடவே அன்று இதயம் வெடித்துவிடும் போல் அவள் அழுததும் நினைவுகளில் படர்ந்தன.

அவளின் அழுகை கண்டு, தனக்குள் புதிதாக ஏதோ ஒன்று நிகழ்ந்து நெஞ்சம் நெகிழ்ந்தது ஞாபகம் வந்தது.

மேகத்தை மடித்துக் கைக்குட்டையாக்கி, அவள் விழிகளில் ஜனித்த கண்ணீரைத் துடைக்க வேண்டும் போல் மனம் ஏங்கியதும், இன்று நடந்தது போல் தோன்றியது.

நிலவிலிருந்து பட்டுப்பாதை விரித்து. ஒரு தேவதை இறங்கி வந்து தன் கைகளில் சேர்ந்தது போன்ற ஒரு

பிரமிப்புடன் அவளை இறு...

ப்ரத்யு.



# 19



அந்த அறையின் அழைப்பு மணி ஒலித்தவுடன் தான், திடுக்கிட்டு விலகிய இருவருமே சுயநினைவுக்கு வந்தனர்.

கதவைத் திறந்தால், டிபன் எதுவும் வேண்டுமா என்று கேட்பதற்காக ரூம்பாய் அங்கு நின்றிருந்தான்.

டிபன் ஆர்டர் செய்து விட்டு வந்தவனிடம், "ப்ரத்யு.. நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலை.. என்னைப் பத்தித் தப்பாவே நினைச்சிட்டிருந்த நீங்க, எப்படி என் பேரை உங்க ரிசார்ட்டுக்கு வச்சீங்க..?" என்றாள் சிணுங்கலாக.

"மை லவ்.. ஒரு சின்னத் திருத்தம்! இப்ப அது நம்மளோட ரிசார்ட்.. சரியா?"

குறும்புடன் கூறியபடி அவள் தலையைச் செல்ல மாகக் கலைத்து விட்டான் அவன்.

பிறகு அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

"ம்.. மனசு பூரா உன்னைப் பத்தின சுகமான கற் பனைகள் நிறைஞ்சிருந்தாலும், நீ என்னை ஏமாத்தின வலி மட்டும் ஒரு ஓரமா முணுமுணுன்னு அரிச்சிட்டே இருந்தது.

JUN 12 2010

''ஆனாலும் நான் உன்னைத் தொடர்ந்து வாட்ச் பண்ணினதிலே, நீ சென்னைக்குப் போனதும், ரத்தினம் அங்கிள்கிட்டே வேலை பாக்கறதும் தெரிஞ்சது...

''மூணு வருஷமாகியும், வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்காம நீ இருந்ததுதான் எனக்குள்ளே பல கேள்விகளை விதைச்சது.. அப்புறம் தான் எனக்கு அந்த இடியா வந்தது!''

''உங்க பங்களா விலைக்கு வரதைத் தெரிஞ்சிக்கிட்டு அதை வாங்கி ரிசார்ட்டா மாத்தறதைப் பத்தி அப்பாகிட்ட பேசினேன்.

''அப்புறம் ரத்தினம் அங்கிள்கிட்ட எல்லாம் சொல்லி, இந்தப் ப்ராஜெக்டைச் செய்ய நீதான் வரணும்னு கேட்டுக் கிட்டேன்..'' என்று முடித்த போது அவன் விழிகள் குறுகுறுத்தன.

பதைப்புடன் நிமிர்ந்தவள், ''என்னது.. பாஸுக்கு எல்லாம் தெரியுமா..?'' என்று கேட்டபோது, இதயம் பட படத்தது.

''ம்... எல்லாமே தெரியும்! ஆனா நாம பிரிஞ்சது ஏன்னு தெரியாது... ஏதோ ஈகோ பிரச்சனையில நாம பிரிஞ் சிட்டோம்னு மட்டும் தெரியும்! அது என்னன்னு நான் இதுவரைக்கும் எங்கம்மா அப்பாகிட்டக் கூட சொல் லலை!'' என்றான் அவனுடைய மூக்கைச் செல்லமாய் உரசியபடி!

''சரி.. அப்புறமும் ஏன் என்னை வார்த்தைகளாலக் காயப்படுத்தினீங்க? நான் எப்படித் தவிச்சேன் தெரி யுமா?''



''ஒரு பொண்ணு எதை வேணாலும் பொறுத்துப்பா.. ஆனா, தன் கேரக்டரைப் பத்தி தப்பாப்பேசினா மட்டும் மன்னிக்கவே மாட்டா! ஆனா, உங்க மேல இருந்த காதலால, நான் அதையும் மன்னிச்சேன்'' என்றாள் செல்லக் கோபத்துடன்.

''சாரிடா செல்லம்.. முதல்லே உன்னைப் பழி வாங் கணும்.. என்னை ஏமாத்திட்டுப் போனதுக்கு, உன்னை என் அதிகாரத்துக்குக் கீழே கொண்டு வந்து டார்ச்சர் பண்ணணும்னு நினைச்சிதான் இந்த ப்ராஜெக்டையே ஆரம்பிச்சேன்...

''ஆனா போகப் போக என் மேலேயே எனக்குக் கோபம் வந்தது... நான்தான் தப்பா புரிஞ்சிக்கிட்டேனோன்னு என் மனசே உறுத்த ஆரம்பிச்சுது! நீ தப்பே பண்ணியிருந் தாலும் அது வயசுக் கோளாறுன்னு உன்னை மன்னிக்கத் தயாராச்சி.. என் மனசு!''

''நீ ஏன் அப்படி செஞ்சேன்னு உன் வாயாலேயே வரவழைக்க, எவ்வளவோ முயற்சி பண்ணேன்.. ஆனா அழுத்தக்காரி நீ! வாயே திறக்கலையே..!'' என்றவன் அவள் நெற்றியில் மென்மையாகத் தன் இதழ் பதித் தான்.

''எனக்கே தெரியாதே.. என்ன மாதிரியே இருந்த என் அக்காவால, நம்ம வாழ்க்கையிலப் புயல் வந்ததுங்கற உண்மை! நீங்க பிரிஞ்சி போனதும் உங்களைப் பத்தி ஒரு சந்தேகப் பேர்வழி அப்படின்னோ.. இல்லைன்னா பணக் கார புத்தின்னோ தான் என்னால நினைக்க முடிஞ்சது!

''ஆனாலும் மனசு முழுக்க நிறைஞ்சிருந்த காதல் மட்டும் ஏனோ குறையவே [illegible] பாத்தப்பறம், அது இன்னும் [illegible]

JUN 12 2010

கொஞ்சலாகக் கூறி முடித்தபோது, அவளுடைய இரு கன்னங்களிலும் ரோஜாக்கள் மலர்ந்தன.

விழிகள் கூர்மை பெற, அவளை தவிப்போடு தன்னுடன் சேர்த்து இதழ்களை சிறை செய்தவனை, அழைப்பு மணி மீண்டும் கலைத்தது.

"சே.." என்றபடி அவளை விடுவித்து விட்டு கதவைத் திறந்தால், டிபன் வந்திருந்தது.

அதை வைத்து விட்டு ரூம்பாய் சென்றதும், "என்ன.. பூஜை வேளையிலக் கரடியா?" கேட்டுவிட்டு குறும்புடன் கண் சிமிட்டினாள் பவி.

"ம்.. இல்லை... டைனோசர்" என்றபடி அருகில் வந்தான்.

"சாரி ப்ரத்யு! அன்னிக்கு உங்க வீட்டுக்கு வராததுக்குக் காரணம், என்னையறியாம என் காதல் வெளிப்பட்டு விடுமோன்ற பயம்தான்!" என்றாள் பவி மென்மையாக.

ஒரு வெற்றிப் புன்னகையுடன் அவளை அணைத்தவன், "அம்மாதான் உன்னைப் பாக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டாங்க பவி.. நீதான் என் மனைவின்னு நான் உறுதியா சொல்லி இருந்ததுனால, தன் வருங்கால மருமகளுக்காக பொருத்தமா ஒரு பட்டுப் புடவையை வாங்கி வச்சிட்டுக் காத்திருந்தாங்க.. நீதான் ஏமாத்திட்டே!" என்றான் சலுகையுடன்.

குற்றவுணர்வுடன், "சாரி ப்ரத்யு..!" எனும்போதே, மனதில் அந்தப் புடவையிலிருந்த சின்னக் கண்ணனின் உருவம் ஞாபகத்திற்கு வந்தது.



"என் கண்ணனையே உன்னிடம் நான் தருகிறேன்.. அவனை பொக்கிஷமாப் பார்த்துக்கொள்' எனும்படி பொருள் பொதிந்த அந்த இனிய பரிசின் பாசச் செறிவு புரிந்து, பவியின் விழிகள் கசிந்தன.

நிமிர்ந்தபோது, ப்ரத்யுவின் பார்வை அவளை இதமாய் வருடியது.

இந்த ஒற்றைப் பார்வைக்காகத்தான் பகலிரவாய்த் தவமிருந்தது புரிந்தது.

தவிப்பும், கலக்கமும் ஒன்று சேர, "உங்க அம்மா தப்பா நினைக்க மாட்டாங்களா ப்ரத்யு... நம்ம ரிசார்ட்டுக்கு என் பேர வச்சதுக்கு..?" என்று கேட்டாள்.

"ஊஹூம்.. உன் பூர்வீக பங்களாவை வாங்கி, ரிசார்ட்டா மாத்தி, உனக்கு காதல்பரிசா கொடுக்கப் போறேன்னதும், முதல்லே சந்தோஷப்பட்டவங்களே அவங்கதான்!

"வெளியே என்னைப் பெரிய வீரன்னு சொல்லுவாங்க.. அம்மாவக் கேட்டாதான் தெரியும், நான் எவ்வளவு பெரிய காதல் கோழைன்னு!" குறும்புடன் முடித்தான்!

"ஓ..எனக்கு அவங்களைப் பாக்கணும் போலருக்கு."

ஏக்கத்துடன் கூறியவளை... காதலைத் தன் உயிர் வரை சுவாசித்தபடி அவனையே நோக்கிய அந்த தேவதையை... மனம் உருகி விழிகள் கசிய, ஒருவித சிலிர்ப்புடன் தன் வசமாக்கிக் கொண்டான் ப்ரத்யு.

அவனுடைய கைப்பிடிக்குள் அடங்கினாலும், ஏனோ இதயத்திற்குள்ளே அடங்கியதைப் போன்ற உணர்வுடன் உருகி நின்றிருந்த பவிக்கு [illegible] போல்...!

JUN 12 2010

"ப்ரத்யு.." மெல்ல நிமிர்ந்தவள், காதலைத் தன் உயிர் வரை சுவாசித்தபடி அவனை நோக்கினாள்.

இந்தப் ப்ரியம்.. தான் பூமியில் வாழும் காலம் வரை நிலைத்திருக்க வேண்டும் என்ற பரிதவிப்பு அவள் விழிகளில் மெல்லிய நீர்ப்படலமாய்!

"நீ அணைக்கின்ற வேளையில்
உயிர்ப்பூ திடுக்கென்று மலரும்..
நீ வெடுக்கென்று ஓடினால்
உயிர்ப்பூ சருகாகி உலரும்!
இரு கைகள் தீண்டாத பெண்மையை
இரு கண்கள் பந்தாடுதோ!
மலர் மஞ்சம் சேராத பெண்ணிலா
என் மார்போடு வந்தாடுதோ!"

எங்கிருந்தோ ஒலித்த பாடலில் இதயம் சிலிர்க்க, மென்மையாக ஒரு பொக்கிஷத்தைப்போல்.. புதையலைப் போல் பனியை ஏந்திக் கொண்டான் ப்ரத்யு!

சூரியனின் வெப்பக் கதிர்களால் காயப்பட்டு குருமையை யாசித்த மரங்களின் வேருக்கு.. மழை சாரலாய் பன்னீர் தெளிக்க, சிதறும் துளிகளை முத்துச் சிப்பியாய் உள்வாங்க ஆரம்பித்தது பூமி.

JUN 12 2010